Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தர
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு - 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 புரட்டாதி 14 செவ்வாய்க்கிழமை (30.09.2014) பக்கங்கள் 20 ஓசை - 364

## வடக்கில் படையினர் வசமிருந்த 298 ஏக்கர் காணி மீளளிக்கப்படும்

### அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா உறுதி

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் இராணுவத்தினரின் பாவனையிலுள்ள 298 ஏக்கர் காணி விரைவில் பொது மக்களிடம். கையளிக்கப்படும் என முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபயவர்தன நேற்று தெரிவித்தார்.

"ஈர்ப்பு சக்தி வாய்ந்த வடக்கில் முதலிடுக" என்ற கருத்தரங்கு நேற்று யாழ். செயலக கேட்போர்கூடத்தில் இடம்பெறறது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு செய்தியாளர்களுக்கு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மிகவிரைவில் இவ்வாறு இராணுவ பாவனையிலுள்ள காணிகள் விடுவிக்கப்படும். இது படிப்படியாக இடம்பெறும். இதன்படி 298 ஏக்கர் காணி மக்களிடம்

19 ஆம் பக்கம் பார்க்க

## அளவெட்டியில் வாள்வெட்டு மூவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டிப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

விளையாட்டு நிகழ்வு ஒன்றை பார்த்து விட்டு வீடு திரும்பிய இம்மூவர் மீது இரவு 7.30 மணியளவில் 3 மோட்டார் சைக்கிள்களில் வந்த இனந்தெரியாதோர் சரமாரியாக வெட்டி விட்டு அங்கிருந்து தப்பிச்சென்றுள்ளனர்.

19 ஆம் பக்கம் பார்க்க

## புதிய இணைய வானொலி DD FM யாழிலிருந்து சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து DD FM என்ற புதிய இணைய வானொலி தனது சேவையை ஆரம்பித்துள்ளது.

இந்த DD FM இணைய வானொலியை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா உத்தியோகபூர்வமாக நேற்று ஆரம்பித்து வைத்தார்.

உள்ளூர் மற்றும் புலம்பெயர் நாடுகளில் வாழ்ந்து வரும் எமது உறவுகளும், நேயர்களும் இவ் இணைய வானொலியூடாக செய்திகள் உள்ளடங்கலான கலைநிகழ்வுகளையும் பொழுது போக்கு அம்சங்களையும் கேட்க முடியும்.

DD FM இணைய வானொலியை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்த அமைச்சர் தமது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டார்.

இவ் இணைய வானொலியை

19 ஆம் பக்கம் பார்க்க

# யுத்தப் பாதிப்புக்களை அகற்ற ஒருங்கிணைந்த கூட்டுக்குழு

## ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் ஆலோசனை



(கொழும்பு)

யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் காணாமற் போனவர்களது உறவினர்களுக்கும் சரியான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்குவதற்காக சம்பந்தப்பட்ட அனைத்து அமைச்சுக்களின் அதிகாரிகளை ஒன்றிணைத்து விசேட கூட்டுக்குழு ஒன்றை அமைப்பது அவசியமென்று காணாமற் போனவர்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வல் பரணகம ஆலோசனை ஒன்றை முன்வைத்துள்ளார்.

வடக்கு, கிழக்கு ஆகிய இரண்டு மாகாணங்களிலும் கிரமமான முறையில் ஆலோசனை வழிகாட்டல் சேவைகள் இதுவரை முன்னெடுக்கப்படுவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். பல்வேறு அமைச்சுக்கள் ஆலோசனை வழிகாட்டல் சேவைகளை வழங்கி வருகின்ற போதிலும், அவை கிரமப்படுத்தப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உரிய பயிற்சியின்றி ஆலோசனைகள் வழங்கப்படுவதாகத் தெரிவித்துள்ளார். திட்டமிட்ட அடிப்படையில் ஒர் பொறிமுறைமைக்கு ஏற்ற வகையில் ஆலோசனை வழிகாட்டல் சேவைகள் வழங்கப்பட வேண்டுமென தெரிவித்துள்ளார்.

கடத்தப்பட்ட காணாமற் போனவர்களின் குடும்ப உறுப்பினர்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் ஆலோசனைகள் வழங்கப்பட வேண்டுமென தெரிவித்துள்ளார். தற்போது காணாமற் போனவர்கள் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகள் கிளிநொச்சி மாவட்டத்தில் நடத்தப்பட்டு வருகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் பெரும்

19 ஆம் பக்கம் பார்க்க

## முதலீட்டுக்கு ஊக்கமளிக்க அரசு தயார் வாய்ப்புக்களைப் பயன்படுத்துங்கள்

### யாழ். செயலகத்தில் அமைச்சர் டக்ளஸ்




(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தை அபிவிருத்தியால் கட்டியெழுப்புவதற்கு அரசாங்கம் தயாராகவுள்ள நிலையில் சந்தர்ப்பங்களை சரிவரப் பயன்படுத்த முதலீட்டாளர்கள் முன்வர வேண்டுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் "ஈர்ப்பு சக்தி வாய்ந்த வடக்கில் முதலிடுக" என்ற தொனிப்பொருளில் வடமாகாண முதலீட்டாளர்களுடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பணிப்புரைக்கமைவாக வடமாகாணத்தில் முதலீடுகளை ஊக்குவிக்கும் நோக்கோடு அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன இங்கு வருகைதந்துள்ளார்.

அந்தவகையில் அவருக்கு தனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். கடந்த கால தவறான அரசியல் வழிநடத்தல்கள் காரணமாக எமது மக்கள் பல்வேறுபட்ட நெருக்கடிகளை எதிர்கொண்டனர். இன்று அதிலிருந்து மக்கள் விடுபட்டுள்ளார்கள். முன்னர் எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாம் என்ற

19 ஆம் பக்கம் பார்க்க

## மாதகல் ஊடாக தங்கம் கடத்தல் கடற்படையினரால் முறியடிப்பு

மாதகல் கடற்பரப்பில் படகு ஒன்றில் மறைத்துவைக்கப்பட்டிருந்த ஒன்றே முக்கால் கிலோகிராம் தங்கம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கடற்படையினரால் நேற்று அதிகாலை இந்தியாவிற்கு கொண்டுசெல்வதற்கு தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த தங்கமே கைப்பற்றப்பட்டதாக கடற்படை பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுலசூரிய குறிப்பிடுகின்றார்.

இந்தப் படகிலிருந்த ஒரு தொகை வலைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலதிக விசாரணைகளுக்காக கைப்பற்றப்பட்ட தங்கம் யாழ்ப்பாணம் சுங்க அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

## நந்திக் கடலில் மீன்கள் இறப்பு காரணம் அறிய ஆய்வு

முல்லைத்தீவு, வட்டுவாகல் நந்திக்கடலில் மீன்கள் இறந்தமை தொடர்பில் 'நாரா' நிறுவனம் ஆய்வுகளை முன்னெடுத்துள்ளது.

இதற்காக 'நாரா' நிறுவனத்தின் குழுவொன்று நந்திக்கடல் பகுதிக்கு நேரில் வருகைதந்துள்ளதாக மீன்பிடித்துறை திணைக்களத்தின் மாவட்ட பணிப்பாளர் ஜெ.சுதாகரன் குறிப்பிட்டார்.

வட்டுவாகல் நந்திக்கடல் பகுதியில் நிலவும் வெப்பநிலையால் ஏராளமான மீன்கள் கடந்த சில தினங்களாக இறந்த நிலையில் கரையொதுங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கரையொதுங்கியுள்ள மீன்களை மண்ணில் புதைப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுவருவதாக தெரிவிக்கப்படுகிறது.



# சித்தியடைந்த மாணவர்களுக்கு வடமாகாண ஆளுநர் வாழ்த்து



(யாழ்ப்பாணம்)

புலமைப்பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், இவ்வாண்டு 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் தோன்றிய வடமாகாண மாணவர்கள் சிறந்த அடைவு மட்டத்தைப பெற்றுள்ளனர்.

கடந்த காலங்களில் ஒப்பிடுகையில், இப்பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களும், கிராமப்புறப் பாடசாலை மாணவர்களும் இவ்வாண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இதன்மூலம் நகரப்புறப் பாடசாலையில், பிரபல பாடசாலைகள் மட்டுமல்லாது, கிராமப்புற பாடசாலைகளும் மாணவர்களைச் சரியான வழிகளில் மேற்கொள்வதன் ஊடாகச் சாதனை படைக்க முடியும் என்பது தெளிவாயிருக்கிறது.

இப்பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் கல்வி அமைச்சில் எதிர்பார்க்கப்படும் சித்தி வீதத்திற்கு மேலாக அடைவு மட்டத்தைப் பெற்றுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்புலமைப்பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் சிறந்த சித்தி பெறுவதற்கு தமது பங்களிப்பை மேற்கொண்ட ஆசிரியர்கள், பாடசாலை அதிபர்கள் மற்றும் கல்வி அதிகாரிகளுக்கு தனது நன்றியைத் தெரிவிப்பதுடன், சித்தியடைந்த மாணவர்கள் அனைவருக்கும் பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார்.

## மூன்றாவது பழந்தமிழர் ஆய்வு மாநாடு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் நவம்பர் 15 ஆம் திகதி நடைபெறவுள்ள பழந்தமிழர் ஆய்வு மாநாட்டில் பழந்தமிழர் பற்றிய ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பிக்க விரும்புபவர்கள் எதிர்வரும் 31.10.2014 ஆம் திகதிக்கு முன்னராக தங்களது ஆய்வுக் கட்டுரைகளை ம.வித்தியானந்தநேசன் (மாவட்ட புள்ளிவிபரவியலாளர்) நிறுவுனர், பழந்தமிழர் இயக்கம், இலக்கம் 7, கலைமகள் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அல்லது mvithiyananthanesan@gmail.com என்னும் ஈமெயில் முவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள 07777 642379 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## தேவாரப் பண்ணிசை வகுப்பு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை திருமுறை மன்றம் யாழ்.குடாநாட்டில் ஆலயங்கள், பாடசாலைகள், நிறுவனங்களில் நடத்திவரும் இலவச தேவாரப் பண்ணிசைப் பயிற்சி வகுப்புக்கள் எதிர்வரும் விஜயதசமி தினமான வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் பிற்பகல் 3.30 மணிக்கும், யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலைய நாயன்மார் மண்டபத்தில் மாலை 4.30 மணிக்கும் நடைபெறவுள்ளது.

இவ் இலவச பண்ணிசைப் பயிற்சி வகுப்புக்கள் தொடர்ந்து சனி, ஞாயிறு தினங்களில் பிற்பகல் 3.00 மணியிலிருந்து நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## நவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார திணைக்கள அனுசரணையுடன் வண்ணை-சாந்தையர்மடம், ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக் கழகமும் அறநெறிப் பாடசாலையும் இணைந்து நடாத்தும் நவராத்திரி விழா இன்று மாலை 6.00 மணிக்கு ஆலய மண்டபத்தில் சைவ சமய அபிவிருத்திச் சங்கத் தலைவர் இரா.செல்வவடிவேல் தலைமையில் இடம்பெறவுள்ளது.

பிரதம விருந்தினராக செ.சுப்பிரமணியமும், சிறப்பு விருந்தினர்களாக என்.சபாரட்ணம், திருமதி. ந. கலையமுதா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மாலை 5.00மிணக்கு மாலைப்பூசையும், 5.30 மணிக்கு நவராத்திரிப் பூசையும் இடம்பெற்று 6.00 மணிக்கு விழா ஆரம்பமாகும்.

கலை நிகழ்வில், உரைகள், திருமுறை ஒதல், பண்ணிசை வீணை, புல்லாங்குழல், கீர்த்தனை மற்றும் நடனம் என்பன இடம்பெறும். நன்றியுரையை சொ.முகுந்தன் நிகழ்த்துவார். (68)

## சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி சித்தியடைந்தோர் விபரம்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் சித்தி பெற்றோர் பெயர் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

சு.ஜதீசா-184, ஜெ.தபேசுதன்-183, பு.கஜானன்-179, ஸ்ரீ.துளசிகன்-177, ஹே.பிறையழகன்-175, த.லேனுஜா-170, வி.தாரகன்-169, ர.மிலக்ஷனா-167, ச.அபினா-166, பு.தனுக்ஷன்-163, பூ.கனிஸ்ரா-161, த.கஜரூபன்-160, ஜெ.டினோஜா-158, ச.சரண்யா-158

100 புள்ளிகளுக்கு மேல் 26 மாணவர்கள் பெற்றுள்ளனர்.

## கலந்துரையாடல்

வேலணைப் பிரதேச சபை பொதுசன நூலகத்தின் தேசிய வாசிப்பு மாத நிகழ்வு மற்றும் பத்தாம் ஆண்டு நிறைவு சம்பந்தமான கலந்துரையாடல் நாளை மாலை 2.00 மணிக்கு சபையின் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது. நூலக உத்தியோகத்தர்கள் மற்றும் நூலக வாசகர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு வேலணை பிரதேச சபையின் நூலகர் திருமதி சி. வித்யா கேட்டுள்ளார்.


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை
முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடம்

**நுண்நிதியியல் டிப்ளோமா கற்கைநெறி - 2014**

முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தினால் நடாத்தப்படும் நுண்நிதியியல் டிப்ளோமா கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து கோரப்படுகின்றன.

- கற்கை நெறிக்கான காலம் - ஒரு வருடம் (வார இறுதி நாட்கள்)
- கற்பிக்கப்படும் மொழி - தமிழ்
- விண்ணப்பிப்பதற்கான தகுதி - க.பொ.த. உயர்தரப்பரீட்சையில் 03 பாடங்களிலும் சித்திகளைப் பெற்றிருத்தல் வேண்டும்
- கற்கைநெறிக்கான கட்டணம் - ரூபா 29,000/-
  கட்டண விபரம் :
  பதிவுக்கட்டணம் - 1,500.00
  கல்விக் கட்டணம் - 22,500.00
  பரீட்சைக்கட்டணம் - 5,000.00
  மொத்தம் - 29,000.00
- விண்ணப்ப முடிவுத் திகதி 17.11.2014
- விண்ணப்பிப்பதற்கான முறை :

விண்ணப்பப் படிவத்திற்கான கட்டணமாக ரூபா 250 ஐ செலுத்தி, முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீட பீடாதிபதி அலுவலகத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்த விண்ணப்பப் படிவங்களைத் தபால் மூலம் அனுப்புவதாயின் **இணைப்பாளர், நுண்நிதியியல் டிப்ளோமா கற்கைநெறி, முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்** எனும் முகவரிக்கு, கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"நுண்நிதியியல் டிப்ளோமா கற்கைநெறிக்கான விண்ணப்பம்"** எனக் குறிப்பிட்டு அனுப்பி வைக்கவும்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப். பல்கலைக்கழகம். (C/3525)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை
முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடம்

**மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா கற்கைநெறி - 2014**

முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தினால் நடாத்தப்படும் மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து கோரப்படுகின்றன.

- கற்கை நெறிக்கான காலம் - ஒரு வருடம் (வார இறுதி நாட்கள்)
- க்ற்பிக்கப்படும் மொழி - தமிழ்
- விண்ணப்பிப்பதற்கான தகுதி - க.பொ.த. உயர்தரப்பரீட்சையில் 03 பாடங்களிலும் சித்திகளைப் பெற்றிருத்தல் வேண்டும்
- கற்கைநெறிக்கான கட்டணம் - ரூபா 29,000/-
  கட்டண விபரம் :
  பதிவுக்கட்டணம் - 1,500.00
  கல்விக் கட்டணம் - 22,500.00
  பரீட்சைக்கட்டணம் - 5,000.00
  மொத்தம் - 29,000.00
- விண்ணப்ப முடிவுத் திகதி 20.10.2014 வரை நீடிக்கப்பட்டுள்ளது.
- விண்ணப்பிப்பதற்கான முறை :

விண்ணப்பப் படிவத்திற்கான கட்டணமாக ரூபா 250 ஐ செலுத்தி, முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீட பீடாதிபதி அலுவலகத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்த விண்ணப்பப் படிவங்களைத் தபால் மூலம் அனுப்புவதாயின் **இணைப்பாளர், மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா கற்கைநெறி, முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்** எனும் முகவரிக்கு, கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"மனிதவள முகாமைத்துவக் கற்கைநெறிக்கான் விண்ணப்பம்"** எனக் குறிப்பிட்டு அனுப்பி வைக்கவும்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். (C/3526)



**சிறு விளம்பரம்**

**டயானா பிளாஸ்ரிக் இடமாற்றம்**
இல.108 பலாலி வீதி
யாழ்ப்பாணம்.
(இலுப்பையடி சந்தி அருகாமை)
021 222 8680,
077 592 5088.



Consulate General of India
Jaffna

edCIL

Ministry of Education
Northern Provincial Council

**இந்தியாவில் உயர்கல்வி**
உயர்தரமான கல்வி வாய்ப்புக்களின் உறைவிடம்
**EdCIL (India) Limited**
[A Government of India Enterprise]
ISO 9001:2008 & 14001:2004
(Under Ministry of Human Resource Development, Government of India)

கல்வியாண்டு 2014-2015 இற்கான
பட்ட மற்றும் பட்ட மேற்படிப்பு கற்கைநெறிகள் தொடர்பாகவும்
இந்தியாவில் உயர்கல்வி தொடர்பாகவும்
இந்திய அரசின் கல்வி ஆலோசகர்களான EdCIL நிபுணர்கள்
நடாத்தும்

**"இந்தியாவில் உயர்கல்விக்கான ஆலோசனையும் வழிகாட்டலும்"**

எனும் கருத்தரங்கில் கலந்து பயன்பெறுமாறு
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

இடம் : யாழ். மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்,
காலம் : 01 ஒக்ரோபர், 2014, மு.ப.10:00 –பி.ப.13:00

மேலதிக தகவல்கள் மற்றும் தொடர்புகளுக்கு:

**Dr. Shaik Suleman**
Head (Placement & Secondment Division)
EdCIL (India) Limited

Phone: 0091-120-2515281 (D); 2512001-006
Email: placement@edcil.co.in / ssuleman@edcil.co.in
Website: www.edcilindia.co.in
(C/3527)

# வறட்சி நிவாரணத்தை E8இல் வழங்காதது ஏன்?

(தென்மராட்சி)

வடவரணி ஜே/336 கிராம அலுவலர் பிரிவு மக்களுக்கான வறட்சி நிவாரணமாக உருளைக்கிழங்கு விநியோகம் கடந்த வியாழக்கிழமை சுமார் ஒருமைல் தூரத்தில் உள்ள E9 கிளையில் வைத்து வழங்கப்பட்டது.

வடவரணி மக்களின் தேவைகளுக்கு என E8 கிளை திறந்து வைக்கப்பட்டு விற்பனை நடைபெற்று வரும் நிலையில் நிவாரணப் பொருட்கள் மற்றும் காசுக்கான உலர் உணவு விநியோகம் மட்டும் இந்த E9 கிளையிலேயே வழங்கப்பட்டு வருகிறது. இதனால் பொது மக்கள் பேருந்திலும் கால் நடையாகவும் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் ஒருமைல் தூரம் சென்று நிவாரணத்தைப் பெற்றுவருகின்றனர்.

வடவரணி மக்களுக்கென E8 கிளை இருக்கும் போது, நிவாரண பொருட்களை மட்டும் ஏன் இவ்வளவு தூரம் சென்று தாம் பெற வேண்டுமென பொது மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

எனவே இனி வரும் காலங்களிலாவது உரியவர்கள் மக்களின் நலன் கருதி அருகில் உள்ள E8 கிளையில் வழங்க முன்வர வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (150)

# நடமாடும் சேவைகள்

(யாழ்ப்பாணம்)

சட்ட ஆவணங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடமாடும் சேவைகள் கியூடெக் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்.பிரதேச செயலர் பிரிவில் நடைபெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையில் பொது மக்கள் பிறப்புச் சான்றிதழ், அடையாள அட்டை, முதியோர் அடையாள அட்டை மற்றும் சட்ட ஆலோசனை என்பவற்றைப் பெற்றுக் கொள்வதற்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

மேலும் யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் நாவாந்துறையிலுள்ள ஜே/84, ஜே/85, ஜே/87 ஆகிய கிராம அலுவலர் பிரிவினைச் சேர்ந்த மக்களுக்கான நடமாடும் சேவை எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணி முதல் பி.ப.2 மணி வரை நாவாந்துறை சென்.மேரிஸ் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.


இந்த நடமாடும் சேவையில் பங்குபற்ற விரும்புவோர் தமது விடயங்களை தமது பகுதி கிராம அலுவலரிடம் பதிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## நூற்றாண்டு விழா

அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய அதிபர் சி.சிவநேசன் தலைமையில் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.வலய கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார், சிறப்பு விருந்தினராக நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் அ.அகிலதாஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

# பாடசாலைக் கல்வியே முன்னேற்றத்துக்கு காரணம்



(யாழ்ப்பாணம்)

எந்தவொரு தனியார் கல்வி நிலையுங்களுக்கும் செல்லாது பாடசாலை ஆசிரியரது பயிற்சி மற்றும் வழிகாட்டல் காரணமாகவும் பெற்றோர்களது ஒத்துழைப்பின் ஊடாகவும் இந்நிலையினை நான் அடைந்துள்ளேன்.

அதிக புள்ளிகளைப் பெற்று பாடசாலைக்கும் பெற்றோருக்கும் கற்பித்த ஆசிரியருக்கும் பெருமை சேர்க்க வேண்டும் என விரும்பி யாழ்மாவட்டத்தில் முதல் நிலையினை அடைந்தமை பெருமையாகவும் மகிழ்ச்சியாகவும் உள்ளது எதிர் காலத்தில் மருத்துவராக வந்து எமது பிரதேச ஏழை எளியமக்களுக்கு சேவைசெய்ய ஆசைப்படுகின்றேன் என புலமைப்பரிசில் பரீட்சையில் 192 புள்ளிகளைப் பெற்று யாழ். மாவட்டத்தில் முதல் நிலையினை பெற்ற அளவெட்டி அருணோதயக் கல்லூரி மாணவன் பரமேஸ்வரன், சஞ்சய் தெரிவித்தார்.

ஆசிரியர் ம.கபிலன் தெரிவிக்கும் போது, மாணவர்களுக்கு சுதந்திரமான மனநிலையினை உருவாக்கும் வகையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்கின்ற போது இத்தகைய வெற்றியினை பெற்றுக் கொள்ளமுடியும். இம்மாணவன் யாழ் மாவட்டத்தில் முதல் நிலை பெற்றமை எமது பாடசாலைக்கு பெருமையான விடயமாகின்றது என்றார்.

பாடசாலை அதிபர் நாகலிங்கம். கேதீஸ்வரன் தெரிவிக்கும்போது,

எமது கல்லூரி கல்வி மற்றும் விளையாட்டுத் துறையில் தேசிய ரீதியில் சாதனை படைத்து வருகின்றமை யாவரும் அறிந்த விடயம். இவ்வகையில் புலமைப்பரிசில் பரீட்சையில் இம் மாணவன் முதல் நிலையினைப் பெற்று எமது பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார். அத்துடன் எமது பாடசாலையில் 16 மாணவர்கள் சித்திபெற்றுள்ளமை பெருமையளிக்கின்றது என்றார்.

# நாடு கடந்த அரசு... இணையப் போராளிகள்... உள்ளூருக்குள்ள தனித்தமிழீழ கோஷ்டி... எல்லாத்துக்கும் மேல ஒரு எம்டன் குறூப்!






தமிழற்ற பிரச்சினைக்குத் தீர்வு என்ன?

உருத்திரகுமார் கொம்பனி தனிநாடுதான் எண்டு சொல்லி, அதுக்கெண்டு தனியாக நாடு கடந்த அரசாங்கத்தையே உருவாக்கி வைச்சிருக்கினம். அந்த அரசாங்கத்துக்கெண்டு அமைச்சரவையும் இருக்கு. உருத்திரகுமாரன்தான் பிரதமராகவும் இருக்கிறார்.

ஆனால், இந்த நாடு கடந்த அரசாங்கமும் அதின்ரை அமைச்சர்களும் இந்தப் பிரதமரும் எமது மக்களுக்கு என்னத்தைத்தான் செய்து கொண்டிருக்கினம் எண்டு எனக்கும் தெரியாது. உங்களுக்கும் தெரியாது.

இந்த அரசாங்கத்துக்கு முன்னுக்கும் பின்னுக்கும் உள்ளயும் வெளியிலயும் எண்டு ஆயிரம் படிச்ச மனிசர் எல்லாம் இருக்கினம்.

ஆனால், எல்லாருக்கும் ஒரே மாதிரித்தான் இதயம் வேலை செய்யும். தமிழ்த்தேசியத்தை புத்திஜீவித்தனமாக பாதுகாக்க வேணும். அதைப்பற்றி இங்கிலிஷில நல்லாய் பேச வேணும். மறந்தும் சனங்களைப்பற்றி, பாதிக்கப்பட்ட மக்களைப்பற்றி இவையின்ரை இதயம் சிந்திக்காது. ஒரு துளி ஈரம் கூடப் பிறக்காது.

மற்றது. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குறூப்.

பிரிந்து போகக் கூடிய சுயாட்சியை அல்லது தனித்தமிழீழத்தைக் கனவு கண்டு கொண்டிருக்கு இந்த அணி.

இலங்கை அரசாங்கத்தை அதாவது மகிந்த ராஜபக்சவைக் கவிழ்த்தே தீருவேன் எண்டு சொல்லி போர்க்குற்ற விசாரணையை நடத்த வேணும் எண்டு முழு மூச்சாக இயங்கிக் கொண்டிருக்கு.

உள்ளூரில இந்தக் குறூப்புக்கு பெரிய செல்வாக்கில்லை எண்டாலும் ஒண்டிரண்டு தலைகள் ஆடிக்கொண்டுதானிருக்கு.

மற்றும்படி இவையும் உருப்படியாக ஒரு மசிரையும் புடுங்கிறேல்ல. சும்மா இடைக்கிடை அங்கினை, இங்கினை எண்டு ஒண்டிரண்டு கூட்டங்கள் நடத்துவினை. இருந்தாற்போல ஊர்வலம், போராட்டம் எண்டு ஒரு பத்துப் பதினைஞ்சு சனங்களோட தாங்களும் ஒரு பத்துப்பேர் நிண்டு ஸ்பீக்கரில கத்துவினம். நாலு படத்தைப் பிடிச்சு இணையத்திலயும் தமிழ்ப்பேப்பர்களிலயும் போடுவினம்.

இந்த லட்சணத்திலதான் இவையின்ரை போராட்டமும் புரட்சியும் அரசியலும் போய்க்கொண்டிருக்கு.

அடுத்தது இணையத்தில புரட்சி செய்யிற புடுங்கிகளும் இணையத் தேசியவாதிகளும்.

இப்ப இவையின்ரை தோளிலதான் தமிழ்த்தேசியத்தின்ரை முழுப்பாரமும் இறங்கியிருக்கு.

அதால இரவுபகலாக நிண்டு கொண்டு அரும்பாடெல்லாம் பட்டு, அதை – அதுதான் தமிழ்த்தேசியத்தைப் பாதுகாத்துக்கொண்டிருக்கினம்.

பெரிய ஒரு கோட்டைக் கிழிச்சு வைச்சுக்கொண்டு தம்பி நீ அந்தப்பக்கமா இந்தப்பக்கமா? எண்டு கேட்கினம். அந்தப் பக்கம் எண்டால் துரோகி. இந்தப் பக்கம் எண்டால் தியாகி. அண்ணை நீங்கள் எந்தப்பக்கம் எண்டு எல்லாரையும் கேட்டுக்கேட்டு – ஆட்களை மணந்து பார்த்து ஒவ்வொருத்தருக்கும் குறி சுட்டுக்கொண்டிருக்கினம்.

இவையை நினைக்க, எனக்கு சின்ன வயசில நாங்கள் கூட்டாளிப் பெடியளுக்குப் பகிடியாகப் பட்டப்பெயரை வைச்சுக்கொண்டு கேலியாகத் திரிஞ்சதுதான் ஞாபகத்துக்கு வருது.

இவையின்ரை வேலையே இந்தக் குறி சுடுகிறதுதான்.

இப்பிடித் துரோகப்பட்டியலைத் தயார்ப்படுத்திறதுதான் இவையின்ரை தேசியப்பணி.

இவையைத்தான் இணையப்போராளிகள் எண்டும் சிலபேர் சொல்லுகினம்.

இவை எல்லாருக்கும் மேல இருக்கு இன்னொரு எம்டன் குறூப். அதுதான் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு.

பச்சைப் புலுடா விட்டுக்கொண்டு, ஆளாளுக்கு ஒவ்வொரு விதமாகக் கதைச்சுக்கொண்டு, ஒற்றுமையைப் பற்றிப் பேசிக்கொண்டு தனித்தனி றூட்டில ஓடிக்கொண்டு, தேர்தலுக்கும் லாபத்துக்கும் ஒண்டாச் சேர்ந்து கொண்டு இந்தக் கூட்டமைப்பு இருக்கடா சாமி இருக்கடா.....

இது சர்வதேச சமூகத்தை ஏமாற்றும். இந்தியாவை ஏமாற்றும். கொழும்பை ஏமாற்றும். தனக்கு வாக்குப்போட்ட சனங்களை ஏமாற்றும்.

எண்டாலும் என்னதான் கெட்டித்தனம் இருந்தாலும் இதால வரலாற்றை ஏமாற்ற முடியுமோ....!

இப்ப மெல்ல மெல்ல இந்தக் கூட்டமைப்பின்ரை சாயமும் வெளுக்கத் தொடங்கீட்டுது.

எண்டாலும் இந்தக் கிழிஞ்ச தமிழ்த்தேசியப் பழஞ்சீலைக்கு இன்னும் ஒட்டுப்போட்டுக் கொண்டிருக்குதுகள் கொஞ்ச ஊடகங்கள்.

இந்த ஊடகங்கள் வாய்கிழிய ஜனநாயகத்தைப் பற்றிப் பறையிறது. ஆனால், நடக்கிறதோ கறுப்பு வெள்ளைத்தனமாக.

இந்தச் சீரிலையும் சிறப்பிலையுந்தான் தமிழ்த்தேசியமும் தமிழற்ற பிரச்சினையும் தீர்வும் தமிழீழமும் இருக்கு.

சோக்காத்தான் இருக்கு எல்லாம்.

ஓ... அடுத்த தேர்தலுக்கு எப்படி வாக்குப்போடப் போறியள்....?

அதிர்ஷடத்தின் வலக்கை தொழில்.
இடக்கை சிக்கனம். - காண்டேகர்

தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## அடுத்த ஆண்டு தீர்வு நிச்சயம்

முன்பெல்லாம் தமிழரசுக் கட்சியினரின் அகிம்சைப் போராட்டம் என்றால் அதிகபட்சமாக ஒருநாள் உண்ணாவிரதமோ அல்லது ஒரு மணிநேர ஆர்ப்பாட்டமோதான் அவர்களது வெள்ளை வேட்டிகள் எதுவும் கசங்கிவிடாமல் நடக்கும் என்றறிவோம்.

அதன்பிறகு அந்தக் களைப்புத் தீர அவர்கள் எங்காவது வெளிநாட்டிற்கு "விசிற்" போய்விடுவார்கள். நாங்கள் தமிழ் ஊடகங்களின் புண்ணியத்தில் சூடான அறிக்கைகளையும் பயங்கரமாக அரசை மிரட்டும் தலைவர்களின் முழக்கங்களையும் தொடர்ந்து பார்த்து மனதை உசார்ப்படுத்தி வந்திருக்கிறோம்.

முதல்முறையாக தமிழரசுக் கட்சியின் வவுனியா மாநாட்டில் கட்சியின் புதிய தலைவர் மாவை சேனாதிராசா அவர்கள், இலங்கை அரசுக்கு - நாங்கள் மறந்துபோக வாய்ப்பில்லாத அளவுக்கு - குறுகியதான காலக்கெடு ஒன்றினை விதித்து, அதன் பிறகு தீர்வொன்றைக் கண்டு இந்தப் பிரச்சினையை முடிக்கும் வரை அகிம்சைப் போராட்டம் தொடர்ச்சியாக நடக்கும் என்று தீர்க்கமாக அறிவித்தபோது, எதுவோ நடக்கத்தான் போகிறது என்ற நம்பிக்கை எல்லோருக்கும் பிறந்தது.

அதன்பிறகு தொடர்ச்சியாக சம்பந்தன் அவர்களும் மாவை அவர்களும் மேடை ஏறும்போதும் பேட்டி கொடுக்கும்போதும் எல்லாம், அகிம்சைப் போராட்டத்தின் மூலம் அடுத்த ஆண்டு தீர்வு நிச்சயம் என்பதை மறக்காமல் குறிப்பிட்டு வருவதைப் பார்த்து, தமிழரசுக் கட்சி வாய்வீச்சு அரசியலை விட்டு செயல் நிறைவேற்ற அரசியலுக்கு மாறுகிறது என்ற எண்ணம் நமக்குள் வலுப்பெறுகிறது.

வரும் ஜனவரிக்குப் பிறகு அரசை திக்குமுக்காட வைக்கும் தொடர்ச்சியான அகிம்சைப் போராட்டங்களுக்கான விரிவான திட்டமிடல்களை மேற்கொண்டு வருகிறார்கள் என்று புரிந்துகொள்ள முடிகிறது. முறையான அகிம்சைப் போராட்டத்திற்கு எந்தப் பலம் வாய்ந்த அரசும் பணிந்துதான் ஆக வேண்டும் என்பதில் சந்தேகமில்லை.

முன்பு அவர்கள் இத்தகைய வீரசபதங்களை முழங்கும் போதெல்லாம், தங்களை அனுபவசாலிகளாகக் காட்டிக் கொண்ட சிலர், "ஓம் எல்லாம் உணர்ச்சிகரமாய் முழங்குவினம்... பிறகு எங்க போராட்டத்தைக் காணேல்ல எண்டு கேட்டால், அந்தோனியாருக்குப் பகிடியும் வெற்றியும் தெரியேல்ல எண்டமாதிரிச் சிரிச்சுப் போட்டுப் போவினம்..." என்று ஆகடியம் பேசியது என்னவோ உண்மைதான்.

அப்படி முந்திய காலங்களைப் போலல்லாமல், தமிழரசுக் கட்சித் தலைவர், தீர்வுகிட்டும் வரை அகிம்சைப் போராட்டம் நிறுத்தப்படாது என்று அறுதியாகவும் உறுதியாகவும் தெரிவித்து வருவதைப் பார்க்கும் எவருக்கும் 2015 ஆம் ஆண்டானது தமிழ் மக்களுக்கான விடிவினைத் தரும் ஆண்டாக அமையப்போகிறது என்பதில் ஐயமேதும் எழாது.

இந்நிலையில், சனிக்கிழமை மட்டக்களப்பில் மாவை அவர்கள், "தமிழ் மக்களுக்கான தீர்வுக்காக உயிரைப் பணயம் வைத்து நாம் சாத்வீகப் போராட்டத்தில் குதிப்போம்" என்று உணர்ச்சி பொங்க முழங்கியிருப்பதை வாசித்த தமிழர் எவரும் புல்லரித்துப் போகாமல் இருந்திருக்க மாட்டார்கள்.

ஆகடியம் பண்ணிக் கொண்டிருந்தவர்களும் நிச்சயம் யோசிக்க ஆரம்பிப்பார்கள். தமிழரசுக் கட்சியின் இந்த அகிம்சைப்போர் அறிவிப்பை நக்கல் செய்து மூக்குடையாமல், ஜனவரி 1ஆம் திகதி வரை பொறுத்திருந்து நடக்கப்போவதைப் பார்த்து வாழ்த்தத் தயாராவதே தமிழ்க் கடமையாகும் என்றெண்ணுவார்கள்.

- ஆசிரியர்.

# பாடசாலை செல்லாத பிள்ளைகளை மீள இணைக்க புதிய வேலைத்திட்டம்

## கல்வி அமைச்சு தகவல்

(கொழும்பு)
இலங்கையில் பாடசாலை செல்லும் வயதையடைந்தும் பாடசாலை செல்லாத பிள்ளைகளை இந்த ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் மீண்டும் பாடசாலைக்கு சேர்த்துக் கொள்ளும் தேசிய வேலைத் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத் தப்படும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. உலக சிறுவர் தினத்தை முன்னிட்டே இத்திட்டத்தை செயல்படுத்த அமைச்சு தீர்மானித்துள்ளது.

உலக சிறுவர் தினமான அக்ரோபர் மாதம் முதலாம் திகதியன்று கொழும்பு தேர்ஸ்டன் வித்தியாலய கேட்போர் கூடத்தில் இதுதொடர்பான பிரதான நிகழ்வு இடம்பெறும்.

கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவின் அழைப்பின் பேரில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரத்ன ஆகியோர் இந் நிகழ்வில் பிரதம அதிதிகளாக கலந்துகொள்ளவுள்ளனர்.

பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரத்ன தலைமையில் அண்மையில் நடைபெற்ற மாவட்ட செயலாளர்களின் மாநாட்டில் இது தொடர்பான இணக்கம் காணப்பட்டதாக தெரியவருகிறது.

மாவட்ட செயலாளர்களின் பணிப்புரையின் பேரில் பிரதேச செயலாளர்களின் மேற்பார்வையின் கீழ் கிராம சேவை அதிகாரிகள் மூலம் பாடசாலை செல்லும் வயதையடைந்தும் பாடசாலை செல்லாதிருக்கும் பிள்ளைகளின் விபரங்கள் பெறப்படும்.

அத்தகைய பிள்ளைகளின் பெற்றோருக்கும் இது பற்றி விளக்கமளிக்கப்படும். இதனையடுத்து இந்தப் பிள்ளைகள் இந்த ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் மீண்டும் பாடசாலைக்கு சேர்த்துக் கொள்ளும் தேசிய வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என கல்வி அமைச்சு தெரிவிக்கின்றது.

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை முஸ்லிம் மாணவி தமிழ்மொழியில் முதலிடம்

(கொழும்பு)
தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளின் படி, மாவனல்லை சாஹிராக் கல்லூரி மாணவி பாத்திமா சமா, 197 புள்ளிகளைப் பெற்று அகில இலங்கை ரீதியில் தமிழ் மொழி மூலம் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இது தொடர்பில் மாணவி கருத்துத் தெரிவிக்கையில்,

இந்தச் சந்தர்ப்பத்தில் முதன் முதலாக அல்லாஹ்வுக்கு நன்றி தெரிவிப்பதுடன் என்னுடைய கல்வி நடவடிக்கைகளுக்கு துணை புரிந்த பாடசாலை அதிபர் கே.எம்.பெளமி, ஆரம்பப் பிரிவு ஆசிரியர் எம்.இஸட்.எம்.ஜயூப், வகுப்பாசிரியர் எம்.பி.எம் பழீல் ஆகியோருக்கும் மற்றும் என்னுடைய பெற்றோருக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றேன். தொடர்ந்து என்னுடைய கல்வி முயற்சியை சிறப்பாக முன்னெடுத்துச் செல்வேன் என்றார். இதேவேளை இம்முறை இந்த மாணவி 197 புள்ளிகளைப் பெற்று அகில இலங்கை ரீதியில் முதலிடத்தைப் பெற்றதையிட்டு நான் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

கல்வித்துறையில் முதன்மை பெற்று விளங்கும் எமது பாடசாலைக்கு இந்த மாணவியுடைய பெறுபேறு இந்தப் பாடசாலையின் வளர்ச்சிக்கு பெரும் உந்து சக்தியாக அமையும். இந்த சமயத்தில் இதற்காக பாடுபட்ட அனைத்து ஆசிரியர்களுக்கும் மற்றும் இதில் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார்.

# வாக்காளர் பெயர்ப் பட்டியல் சீர்திருத்தம் இன்றுடன் நிறைவு

(கொழும்பு)
2014 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர் பட்டியல் சீர்திருத்தம் இன்றுடன் நிறைவடைய உள்ளதாக தேர்தல்கள் செயலகம் குறிப்பிட்டுள்ளது.

தேர்தல்கள் செயலகத்தின் பிரதி ஆணையாளர் எம்.எம்.மொஹமட் இதனை தெரிவித்தார்.

இந்த நிலையில் வாக்காளர் பெயர் பட்டியலில் தமது பெயர்களை பதிவு செய்ய விரும்புகின்றவர்கள் இன்று பதிவு செய்து கொள்ளுமாறு பிரதி தேர்தல்கள் ஆணையாளர் கோரியுள்ளார்.

இதனிடையே, எதிர்வரும் தேர்தல்கள், புதிய வாக்காளர் பெயர் பட்டியலின் படியே இடம்பெறும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# யுவதி மீது பொலிஸ் தடியடி; பதவியிலிருந்து நீக்கம்

(கொழும்பு)
இரத்தினபுரி, பஸ்தரிப்பிடத்துக்கு அருகில் வைத்து யுவதியொருவர் மீது தடியடி மேற்கொண்ட பொலிஸ் சார்ஜன்ட், உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பதவியிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

இரத்தினபுரி பஸ் தரிப்பிடத்துக்கு அருகில் வைத்து யுவதி ஒருவரை பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் தடியால் தாக்கும் காட்சிகள் அடங்கிய வீடியோ தற்போது இணையத்தளங்களில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தேர்தல்களை நடாத்த அவசரம் வேண்டாம்

## அமைச்சர்கள் வலியுறுத்து

(கொழும்பு)
தற்போதைய நிலையில் அவசரப்பட்டு தேர்தல்களை நடத்தும் முடிவை எடுக்க வேண்டாம் என்று அமைச்சர்கள் வலியுறுத்தத் தொடங்கியுள்ளனர்.

ஊவா மாகாண சபைத் தேர்தலின் பின்னர் அரசாங்கம் என்னதான் பூசி மெழுகினாலும் தோல்விப் பயம் ஆட்டிப்படைக்கத் தொடங்கிவிட்டது.

அதிலும் குறிப்பாக அடுத்த பிரதமர் கனவில் இருக்கும் அமைச்சர் பசில் ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ ஆகியோர் கடும் அதிர்ச்சியடைந்துள்ளனர். இருந்தும் இந்த நிலையிலும் திடீர் ஜனாதிபதித் தேர்தல் ஒன்றின் மூலம் அரசாங்கத்தின் வெற்றியை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும் என்று அமைச்சர் பசில் ராஜபக்ஷ எதிர்பார்க்கின்றார்.

ஆனால் எதிர்பார்ப்பதை விட நிலைமைகள் மோசமாக இருப்பதாக அமைச்சர்கள் பலர் கருத்துத் தெரிவித்துள்ளனர். இதன் காரணமாக அரசாங்கத்தின் சரிந்துள்ள செல்வாக்கை மீண்டும் சரிக்கட்டும் வரையில் தேர்தல்களை நடத்த அவசரப்படக் கூடாது என அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவும் இதே நிலைப்பாட்டிலேயே இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.




# வடக்கின் ஆத்மாவுக்கு புத்துயிர்ப்பூட்டும் யாழ்தேவியே உன்னை வாழ்த்தி வரவேற்கத் தயங்கலாமா?

**1970 களில் யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் தோன்றியபொழுதும் அதனை எதிர்த்தவர்களின் வாரிசுகள் இன்று யாழ்தேவியின் வரவையும் புறக்கணிக்கிறார்களா? எதிர்வரும் அக்டோபர் மாதத்தின் பின்னர் தொடர்ந்து ஓடவிருக்கும் யாழ்தேவியில் இந்த வாரிசுகள் அரசு இலவசமாகத் தரவிருக்கும் அனுமதிச்சீட்டிலும் (warrant) பயணிக்க மாட்டார்களா?**

## முருகபூபதி கட்டுரையிலிருந்து

இலட்சக்கணக்கானோர் 24 ஆண்டுகளுக்குப் பின்னர் - மீண்டும் எப்பொழுது யாழ்.தேவி வருவாள்? எனக் காத்திருந்தவர்களுக்கு இதோ வந்துவிட்டேன் எனச் சொல்லியவாறு கடந்த 22-09-2014 ஆம் திகதி தனது வெள்ளோட்டத்தை காண்பித்திருக்கிறாள்.

முன்னோர்கள் சொன்ன வாக்கியம் இச்சந்தர்ப்பத்தில் நினைவுக்கு வருகிறது.

"குளத்துடன் கோபித்துக்கொண்டு பின்புறத்தைக் கழுவாதவர்கள்..."

இதோ வருகிறது.... இதோ வருகிறது.... என்று வாராது போல வந்த மாமணியாக வந்த வடமாகணசபையை வெற்றி கொண்டவர்கள் எவரும் யாழ்.தேவியின் வெள்ளோட்டத்தைக் காணத்தவறிவிட்டார்கள்.

இலங்கை அரசின் அனுமதியுடன்தான் இந்திய அரசு வடமாகாணத்துக்கான ரயில் சேவையை புனரமைத்தது. இந்திய அரசிடம்தான் மன்மோகன் சிங் முதல் நரேந்திர மோடி வரையில் இலங்கை அரசு மீதான புகார் பட்டியல் வழங்குவதற்கு வடமாகாண சபையின் பிதாமகர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் . அடிக்கடி விமானம் ஏறுகின்றனர்.

அப்படி இருக்க - வடமாகாணசபை போன்று வாராது போல வந்த மாமணியாக வந்த யாழ்.தேவியை வரவேற்க அல்லது அதனை பளையிலிருந்து வழியனுப்பிவைக்க அவர்கள் எவரும் வரவில்லையே...? ஏன்...?

1970 களில் யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் தோன்றியபொழுதும் அதனை எதிர்த்தவர்களின் வாரிசுகள் இன்று யாழ்.தேவியின் வரவையும் புறக்கணிக்கிறார்களா?

எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்தின் பின்னர் தொடர்ந்து ஓடவிருக்கும் யாழ்.தேவியில் இந்த வாரிசுகள் அரசு இலவசமாகத் தரவிருக்கும் அனுமதிச்சீட்டிலும் (warrant) பயணிக்க மாட்டார்களா?

யாழ்.தேவி மீண்டும் இந்திய அரசின் ஆதரவுடன் பயணித்தாலும்... இலங்கையின் தற்போதைய அரசின் போக்குவரத்து அமைச்சின் கண்காணிப்பில் பயணித்தாலும்... அரசாங்கத்திற்குத்தான் யாழ்.தேவியினால் வருமானம் கிட்டப்போகிறது என்று எவரேனும் பரதேசிப் பேச்சுப் பேசினாலும்... யாழ்.தேவி வடமாகாண மக்களின் ஆத்மாவுக்கு மீண்டும் புத்துயிர்ப்பு ஊட்டும் என்பதில் வேறு கருத்துக்கு இடமில்லை.

போர் நடைபெறாத சமாதான கால கட்டத்தில் சவப்பெட்டி வியாபாரிகளின் வருமானம் வீழ்ச்சி கண்டது எனச் சொன்னார்கள். அவ்வாறு வடமாகாணத்துக்கான தனியார் பஸ் சேவைகளை நடத்தும் வர்த்தகர்களின் வருமானத்தில் மீண்டும் யாழ்.தேவியின் வருகை வீழ்ச்சியை தருமானால் அதற்காக தமிழ் மக்கள் எதுவும் செய்ய முடியாதுதான்.

தமக்கு மூக்குப் போனாலும் பரவாயில்லை மற்றவர்களுக்கு சகுனம் பிழைக்க வேண்டும் என நினைத்துக்கொண்டு எவரும் யாழ்.தேவிக்கு எதிராக சதிசெய்யாமல் இருந்தால் அதுவும் தமிழ்மக்களுக்குச் செய்யும் புண்ணியமாகும்.

1960 களில் நான் யாழ்ப்பாணத்திற்கு படிக்கச் சென்ற பொழுதுதான் யாழ்.தேவியையும் பனை மரங்களையும் பார்த்தேன். தினமும் காங்கேசன் துறை - கொழும்பு மார்க்கத்தில் யாழ்.தேவி - உத்தரதேவி - இரவு தபால் ரயில்கள் மற்றும் பொதிகள் ஏற்றிச்செல்லும் துரிதமற்ற ரயில்கள் வடக்கிலிருந்தும் தெற்கிலிருந்தும் தங்கு தடையற்று பயணித்துக்கொண்டிருந்த காலம் அது.

கொழும்பிற்கு உத்தியோகம் பார்க்கவரும் வடமாகாணத் தமிழர்களுக்கு பிரதி வெள்ளிக்கிழமையும் மகிழ்ச்சியான தினங்கள்தான். கொழும்பில் வாடகைக் குடியிருப்பிலிருந்து கொண்டு கடைச்சாப்பாட்டுடன் காலத்தைக் கழித்த அவர்கள் வெள்ளியன்று இரவு கோட்டை ரயில் நிலையத்திற்கு படையெடுத்து விடுவார்கள். சிலர் மருதானைக்குச் சென்று முற்கூட்டியே ரயில் ஏறி இடம்பிடிப்பார்கள். மீண்டும் ஞாயிறு இரவு வடக்கிலிருந்து புறப்பட்டு திங்கள் காலை கொழும்பு வந்து வேலைக்குச் செல்வார்கள்.

அவசர கடிதங்களை தபால் நிலையம் சென்று தபாலிட தவறி விடுபவர்களுக்கும் இந்த இரவு தபால் ரயில் சேவை வரப்பிரசாதமாகவிருந்தது. தபால் பொதிகளுக்கான பிரத்தியேக பெட்டியில் பிந்தும் தபால்களை சேகரிப்பதற்காகவே ஒரு சிறிய பெட்டி உள்ளும் புறமும் திறந்திருக்கும்.

மூத்த எழுத்தாளர் எஸ்.பொன்னுத்துரையின் சடங்கு நாவலில் இந்த ரயில் சேவை சிலாகித்து எழுதப்பட்டிருக்கிறது. வாரநாட்களில் கொழும்பில் உணவுண்ட வடமாகாண மத்தியதர உத்தியோகத்தர்கள் உறைக்கப்பறைக்க உண்டு மகிழ்வதற்காகவும் மனைவியின் கையால் சமைத்த உணவை மனைவியோடு சுவைப்பதற்கும் குழந்தைகளை கொஞ்சிக்குலாவுவதற்கும் பனங்கள்; அருந்துவதற்கும் அந்த இரவு ரயில் அவர்களுக்கு மிகப்பெரிய வரப்பிரசாதமாகவே விளங்கியது.

நாடகக்கலைஞர் மாவை நித்தியானந்தனின் கொழும்பு மெயில் பாட்டும் இசையும் கதையும் நிகழ்வும் இந்த ரயில் சேவை பற்றி ரசனையுடன் நிகழ்த்தப்பட்டிருக்கிறது. மெல்பனிலும் ஐரோப்பிய நாடுகளிலும் அந்நிகழ்வு பல அரங்குகள் கண்டிருக்கிறது.

இன்று மேடையேற்றினாலும் அதனை அலுப்பின்றி ரசிப்பார்கள். ஏனென்றால் அதில் எம்மவர்களின் வாழ்வு கலந்திருந்தது. அந்த வசந்தகால வாழ்வு பேசப்பட்டது.

வடமாகாணத்திற்கான ரயில் சேவை தமிழ் மக்களின் வாழ்விலும் தமிழ்க் குடும்பத்தலைவிகளினதும் வாழ்விலும் அவர்களின் தனிப்பட்ட இன்பத்திலும் இரண்டற கலந்திருந்தது.

முடிந்தால் பொன்னுத்துரையின் சடங்கு நாவலை மீண்டும் எடுத்துப்படியுங்கள். முதியவர்கள் தங்களையும் அதில் தேடுவார்கள்.

யாழ்தேவியிலும் இரவு தபால் ரயிலிலும்தான் எத்தனை கதைகள்? எத்தனை காதலர்கள்? எத்தனை முடிச்சுமாறிகள்? எத்தனை சோகங்கள்? எத்தனை பரவசமான சம்பவங்கள்?

இரவு ரயிலில் சென்று கொடிகாமத்தில் அதிகாலை இறங்கி பருத்தித்துறை பஸ்சைப் பிடிப்பதற்காக ஓடுவோமே ஒரு ஓட்டம் அலாதியான ஓட்டம்தான்.

இடியப்பமும் கத்திரிக்காய் முருங்கைக்காய் குழம்பும் சம்பலும் முட்டைப்பொரியலும் சங்கமித்த பார்சலை பளை ரயில் நிலையம் வந்ததும் யார் முதலில் பார்சல் பிரிக்கிறார் என்று அவதானித்து திறக்கும் அந்த வசந்தகாலக் கணங்களை உள்நாட்டிலும் புகலிட நாட்டிலும் என்னைப்போல் பல்லாயிரக்கணக்கானோர் எண்ணிப்பார்க்கலாம்.

யாழ்ப்பாணத்தில் பொதுநூலகம் எரிக்கப்பட்ட வேளையில் யாழ். எம்.பி. வெ.யோகேஸ்வரனின் இல்லமும் தாக்கப்பட்டிருந்தது. கடைத்தொகுதிகள் எரிக்கப்பட்டிருந்தன. கொள்ளிவைப்பதற்காக நெருப்பும் எரிபொருளும் எடுத்துவந்தவர்கள் கண்களில் அந்த அழகிய யாழ் ரயில் நிலையம் சிக்கவில்லையா? என்பதுதான் அச்சமயம் எனக்கு வந்த பேராச்சரியம்.

ஆனால் - விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்த ஆயுதம் ஏந்திய இயக்கங்கள் பின்னாளில் அந்தப் பேராச்சரியத்தையும் விட்டு வைக்காமல் ரயில் தண்டவாளங்களை சிலிப்பர்கட்டைகளுடன் மறைத்துவிட்டன. அதனால் வடபகுதிக்கான ரயில் சேவை மார்க்கத்தில் பல ரயில் நிலையங்களும் மறைந்து ரயில் பாதை தடங்களும் மறைந்தன.

இன்று யோகேஸ்வரன் இல்லை. அவரது மனைவி சரோஜினி இல்லை. காமினி திசாநாயக்கா இல்லை. சிறில் மத்தியூ இல்லை. யாழ் குடாநாட்டு செய்திகளை சுடச்சுட தந்த யாழ். ஈழநாடு இல்லை.

ஆனால் - யாழ்.பொதுநூலகம் எழுந்து நிற்கிறது. யாழ்ப்பாணம் ரயில் நிலையம் எழுந்து நிற்கிறது. பொதுநூலகத்திற்கு மக்கள் வந்து செல்வது போன்று யாழ்தேவியிலும் எம்மவர்கள் ஏறி இறங்குவார்கள்.

யாழ் பொதுநூலகத்தின் சாம்பல் மேட்டையும் எரிப்பின்பொழுது யாழ்நகரில் தீ அரக்கர்களின் ஆட்சியையும் பார்த்துவிட்டு இரவு தபால் ரயிலில் புறப்படுவதற்காக மீண்டும் ரயில் நிலையம் வந்தேன். ஊரடங்கு உத்தரவு அமுல் படுத்தப்பட்டிருந்தது.

பொலிசாரையும் மிலிட்டரியையும் அவ்வேளையில் நம்புவதற்கு தயங்கியிருந்த ஜே.ஆரின் அரசு மிலிட்டரி பொலிஸிடம் யாழ்நகரை ஒப்படைத்திருந்தது. பாராளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரனைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் அரசுக்கிருந்தது. அவர் தமது மனைவியுடன் எங்கே தப்பிச்சென்றாரோ தெரியாது. அதன் பிறகு அவரையும் ஆலாலசுந்தரத்தையும் அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபொழுது அவரது கொழும்பு வாசஸ்தலத்தில் சந்தித்தேன்.

இன்று இவர்கள் மூவரும் எமது நினைவுகளில். அத்துடன் அவர்களைக் கொன்றவர்கள் யாழ்நகரை எரித்த சிங்களவர்கள் அல்ல. எம் தமிழினக்கொழுந்துகள்தான் என்பதும் காலத்தின் சோகம்.

ஒரு தலைமுறை பார்க்கத் தவறிவிட்ட இந்த யாழ்தேவியையும் இரவு தபால் ரயிலையும் அதற்குப் பின்னர் நானும் தவறவிட்டுவிட்டேன். 24 வருடங்களின் பின்னர் தற்போதைய தலைமுறையும் இனிவரும் தலைமுறையும் பார்க்கவிருக்கிறது.

யாழ்ப்பாணம் நகரில் அழகான முகப்புடன் டெராசோ தரையில் பொலிவான கட்டடமாக விளங்கிய அந்த ரயில் நிலையத்தில் அடுத்த மேடைக்குச் செல்வதற்கான நிலத்துக்கீழான வழியும் இருந்தது. அதன் ஊடாக அந்த இளமைக்காலத்தில் பரவசத்துடன் நடந்து திரிந்திருக்கின்றேன். வெளி நாடுகளில் எத்தனையோ ரயில்கள் நிலத்துக்கு கீழே ஓடிக்கொண்டிருக்கின்றன. நிலத்தின் கீழே நடக்கின்றோம்.

(18ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதி தேர்தலில் வடக்கு மக்களின் நிலைப்பாட்டை எதிர்வு கூறமுடியாது

## சுசில் பிரேம ஜயந்த தெரிவிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் ஜனவரி 7 ஆம் திகதி நடைபெறவுள்ளதை மூத்த அமைச்சர்கள் இருவர் உறுதி செய்துள்ள அதேவேளை வடமாகாண மக்கள் யாருக்கு வாக்களிப்பார்கள் என்பதை எதிர்வு கூற முடியாதுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி தேர்தல் ஜனவரி 7 ஆம் திகதி நடைபெறவுள்ளதை உறுதி செய்துள்ள அமைச்சர் சுசில் பிரேமஜயந்த வடமாகாண மக்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷாவிற்கு வாக்களிப்பார்களா என்பதை உறுதியாக கூறமுடியாதுள்ளது என தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தேர்தலில் போட்டியிடுவார் எனவும் இலகுவில் தேர்தலில் வெற்றியீட்டுவார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க்கட்சிகளின் தனிப்பட்ட வேட்பாளர்கள் அல்லது கூட்டாக இணைந்து ஓர் வேட்பாளரை நிறுத்தினாலும் ஜனாதிபதிக்கு அவர்கள் சவாலாக திகழ மாட்டார்கள் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதி தேர்தல்களின் போது பயங்கரவாதம் இல்லாதொழிப்பு மற்றும் பொருளாதார அபிவிருத்தி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு வாக்குகளைக் கேட்டதாகவும் அந்த இரண்டு வாக்குறுதிகளுமே சிறந்த முறையில் நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

ஆசியாவில் சீனாவிற்கு அடுத்தபடியாக இலங்கையில் அதிகளவு பொருளாதார வளர்ச்சி பதிவாகியுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார். முன்கூட்டியே தேர்தல் நடாத்துவது ஜனநாயக விரோதமான செயல் அல்லது சட்ட விரோதமான செயல் அல்ல என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அமைச்சர் ரம்புக்வெலவும் 7 ஆம் திகதி தேர்தல் என்பதை உறுதி செய்துள்ள அதேவேளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வடமாகாண வாக்குகளையோ அல்லது ஊவாவில் தற்போது பெற்றுக்கொண்ட வாக்குகளையோ மாத்திரம் எதிர்பார்க்கவில்லை. நாடு முழுவதின் வாக்குகளையே எதிர்பார்க்கிறார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இஸ்லாமிய அமைப்பின் தலைவர் இலங்கைக்கு விரைவில் விஜயம்



(கொழும்பு)

இலங்கை ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பின் தலைவர் விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

சவூதியில் உள்ள இலங்கை தூதரக தகவல்கள் இதனைத் தெரிவித்துள்ளன.

இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பின் தலைவர் இயாட் மடானி விரைவில் இலங்கைக்கு செல்லவுள்ளதாக அந்தத் தகவல்கள் தெரிவித்துள்ளன. இந்த நிலையில் மடானியின் விஜயத்தை முன்னிட்டு முன்கூட்டிய ஏற்பாடுகளை செய்வதற்காக குழு ஒன்று இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

இந்த விஜயத்தின்போது மடானி, இலங்கையின் ஜனாதிபதி மற்றும் மதத் தலைவர்களை சந்தித்துகலந்துரையாடவுள்ளார். ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை அமர்வு அண்மையில் இடம்பெற்ற போதே ஜனாதிபதி மடானிக்கான அழைப்பை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் முஸ்லிம் மக்களின் அதிருப்தியைப் போக்கிக் கொள்வதற்காகவே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்த யுக்தியைக் கையாண்டுள்ளதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

# 450 மில்லியன் நிதிமோசடியில் ஆளும்கட்சி அமைச்சர்

## ஐ.தே.க.தெரிவிப்பு

(கொழும்பு)

ஆளும் கட்சியின் அமைச்சர் ஒருவர் 450 மில்லியன் ரூபா மோசடியில் ஈடுபட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார். இது தொடர்பில் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டது.

இவ்வாறு ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டதனை தொடர்ந்து அமைச்சர் விசாரணைகளுக்கு முகம் கொடுக்காது, இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் பணிப்பாளரை வீட்டுக்கு அனுப்பி வைத்தார். நாட்டின் சட்டம் ஒழுங்கு பாரிய பின்னடைவை எதிர் நோக்கி வருகின்றது.



17 ஆம் திருத்தச் சட்டம் மீள அமுல்படுத்தப்பட வேண்டும். நாட்டின் சகல சட்டங்களும் அரச நிறுவனங்களும் நிறைவேற்று அதிகாரத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

17 ஆம் திருத்தச் சட்டத்திற்கு நாடாளுமன்றின் 225 பேரில் 224 பேர் ஆதரவாக வாக்களித்தனர். இந்தியாவின் நீதிமன்றக் கட்டமைப்பு மிகவும் சுயாதீனமானது.

இதன் காரணமாகவே மிகவும் பலம்பொருந்திய தமிழக முதல்வர் ஜெயலலிதாவிற்கு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று நீதிமன்றின் சுயாதீனத்தன்மையை உறுதி செய்யும் நோக்கில் 17 ஆம் திருத்த சட்டம் அமுல்படுத்தப்பட்டது.

எனினும் அரசாங்கம் அந்த சட்டத்தை ரத்து செய்து, நீதிமன்றத்தின் சுயாதீனத்தன்மையை முடக்கியுள்ளது என லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

# வரவு – செலவுத் திட்டவிவாதத்தை வரையறுக்க அரசு தீர்மானம்

(கொழும்பு)

வரவு செலவுத் திட்டம் தொடர்பிலான நாடாளுமன்ற விவாதங்களை எதிர்வரும் நவம்பர் மாதத்திற்குள் முடிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. எதிர்வரும் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலை கருத்திற்கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பொதுவாக வரவு செலவுத் திட்ட விவாதங்கள் டிசம்பர் மாத நடுப்பகுதி வரையில் நடைபெறும். எனினும், இம்முறை வரவு செலவுத் திட்ட விவாதங்களை நவம்பர் மாதத்திற்குள்ளேயே முடித்துக் கொண்டு தேர்தல் பிரசாரங்களில் தீவிரம் காட்ட அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இதன் காரணமாகவே வரவு செலவுத்திட்ட மசோதா இந்த மாதத்திலேயே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் ஒக்ரோபர் மாதமளவில் வரவு செலவுத் திட்ட மசோதவை அரசாங்கம் நாடாளுமன்றில் சமர்ப்பித்து வந்தது.

எவ்வாறெனினும், வரவு செலவுத் திட்ட விவாதங்களுக்காக ஒதுக்கப்பட்ட நாட்களின் எண்ணிக்கை குறைக்கப்பட மாட்டாது என அரசாங்க பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

# பாலித ரங்கே பண்டாரவின் ஹோட்டல் மீது துப்பாக்கிச்சூடு

(கொழும்பு)



ஐ.தே.க.நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டாரவின் ஹோட்டல் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

புத்தளம் கருவெலகஸ்வெவ பிரதேசத்தில் நேற்று அதிகாலை மூன்று மணியளவில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் அதிஷ்டவசமாக யாருக்கும் காயங்கள் ஏற்படவில்லை.

குறித்த ஹோட்டல் மீது நடாத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் காரணமாக ஹோட்டலின் கண்ணாடிகள் சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இதுவரை சந்தேக நபர்கள் தொடர்பில் தகவல்கள் இல்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

கருவெலகஸ்வெவ பிரதேச சபைத் தலைவரைத் தாக்கியதாக பாலித ரங்கே பண்டார கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

# யார் தேர்தலில் போட்டியிட்டாலும் மகிந்த ராஜபக்ஷவே வெற்றிபெறுவார்

## அமைச்சர் நிர்மலகொதலாவல தெரிவிப்பு



எதிர்க்கட்சிகளின் சார்பில் யார் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டாலும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை தேர்தலில் தோற்கடிக்க முடியாது என அமைச்சர் நிர்மல கொதலாவல தெரிவித்துள்ளார். நொண்டிச் சாக்கு சொல்லும் நோக்கிலேயே பொது வேட்பாளர் என்ற விடயம் பற்றி பேசப்படுகின்றது.

எந்த ஜயா அல்லது அம்மணி தேர்தலில் போட்டியிட்டாலும், எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவே வெற்றியீட்டுவார். வேட்பாளரின் பெயர், பிரபல்யம், ஆளுமை போன்ற காரணிகள் தேர்தலில் தாக்கத்தை செலுத்தும் என்பதனை மறுப்பதற்கில்லை. எனினும் வேட்பாளர் போட்டியிடும் கட்சிகளின் கொள்கைகள் அதனை விடவும் முக்கியமானவை.

2005 ஆம் ஆண்டு தேர்தல் முடிவுகள் இதனையே பறைசாற்றி நிற்கின்றன. 2005 ஆம் ஆண்டில் ஜனாதிபதி மகிந்தவுடன் போட்டியிட்ட வேட்பாளர் பொலிவுட் நடிகருக்கு உரிய பிரபல்யத்தைப் பெற்றிருந்தார். எனினும் மக்கள் அரசியல் கொள்கைகளின் அடிப்படையில் மகிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்கினர். ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் கொள்கைகள் இன்று வரையில் மாற்றம் பெறவில்லை. மக்கள் தெளிவான அரசியல் கொள்கை ஒன்றையே விரும்பி நிற்கின்றனர் என நிர்மல கொதலாவல தெரிவித்துள்ளார்.

# சசீந்திர ராஜபக்ஷவிற்கு எதிராக ஜே.வி.பி.வழக்கு தொடர திட்டம்

(கொழும்பு)

ஊவா மாகாணசபையின் முன்னாள் முதலமைச்சர் சசீந்திர ராஜபக்ஷவிற்கு எதிராக வழக்குத் தொடர்வது குறித்து ஜே.வி.பி.கட்சி கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

720 மில்லியன் மக்கள் பணம் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளதாகவும், மாகாணசபையின் நிதி துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளதாகவும் ஜே.வி.பி.யின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் குற்றம் சுமத்தியுள்ளார். ஆங்கில ஊடகமொன்றுக்கு அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மாகாணசபை கலைக்கப்படுவதற்கு முன்னர் இந்தப் பணம், முதலமைச்சர் சசீந்திரவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

பணத்தை வழங்குவதற்கு அனுமதி வழங்கிய மாகாண பிரதம செயலாளருக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

மாகாணசபையின் அனுமதியுடன் இந்தப் பணம் முதலமைச்சருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது என்பது குறித்து நாடாளுமன்றில் கேள்வி எழுப்பப்படும்.

ஒதுக்கப்பட்ட பணத்தை முதலமைச்சர் சசீந்திர தேர்தல் பிரசாரத்திற்காக பயன்படுத்தினார்.

நீர் பம்பிகள், தையல் இயந்திரங்கள், ஜெனரேட்டர்கள் உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் இந்தப் பணத்தைக் கொண்டு கொள்வனவு செய்து, கட்சி ஆதரவாளர்களுக்கு சசீந்திர வழங்கியதாக விஜித ஹேரத் குற்றம் சுமத்தியுள்ளார்.

# குடிநீருக்காக கஷ்டப்படும் மக்களின் பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்படும்

## – வேள்ட் விஷன் செயற்பாட்டு முகாமையாளர் தெரிவிப்பு –

வலி.மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கல்விளான் - பொன்னாலை மேற்கு மற்றும் இனங்காணப்படும் பிரதேசங்களில் குடிதண்ணீருக்காக கஷ்டப்படும் மக்களுக்கு குடிதண்ணீர் வழங்கப்படும்.

வலி.மேற்கு பிரதேச செயலகமும் - பிரதேச சபையும் கூடுதல் ஒத்துழைப்பு வழங்கும் பட்சத்தில் அடுத்த நான்கு ஆண்டுகளுக்குள் (2014 - 2018) நிதிகளை பெற்று மக்களின் குடிதண்ணீர் தாகம் தீர்ப்போம என. வேள்ட்விஷன் நிறுவன நிவாஸ் III செயற்பாட்டு முகாமையாளர் ஆர்.ஜெ.அன்ரனி இவ்வாறு தெரிவித்தார்.

கல்விளான் மக்களுக்கு நிலைத்திருக்க கூடிய திட்டத்தின் கீழ் (Sustainable Development) மக்களின் பங்களிப்புடன் குடிதண்ணீர் வழங்க நடவடிக்கை எடுக்க வலி.மேற்கில் உள்ள இரு செயலகங்கள்ான பிரதேச [illegible] - பிரதேச செயலகங்களின் ஒத்துழைப்பினை நாடியுள்ளோம்.

இதனைவிட சுகாதார வைத்தியஅதிகாரி, தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை, நீர்வள சபை மற்றும் நிறுவனங்களின் உதவியையும் நாடியுள்ளோம்.

எனினும் இத் திட்டங்களை நிறைவேற்ற வலி.மேற்கு பிரதேசசபை முதற்கட்டமாக பூரண பங்களிப்பை வழங்க முன் வந்துள்ளது. இதற்காக நீர் பெறக் கூடிய நீரேந்து நிலை களை ஆய்வு செய்து, பரிசோதனை அறிக்கை கிடைத்த பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கையை எடுக்கவுள்ளோம்.

இதற்கு மேலாக வேள்ட் விஷன் முன்னெடுக்கும் திட்டத்திற்கு வலி.மேற்கு உறுப்பினர்கள் பூரண பங்களிப்பை வழங்கியதாகவும் செயற்பாட்டு முகாமையாளர் ஆர்.ஜெ.அன்ரனி தெரிவித்தார். (92)

# 145 ஆவது காந்தி ஜெயந்தியும் சர்வதேச அஹிம்சை தினமும்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை காந்தி சேவாசங்கம் நடாத்தும் 145 ஆவது காந்தி ஜெயந்தியும் சர்வதேச அஹிம்சை தினமும் நாளைமறுதினம் வியாழக் கிழமை கொண்டாடப்படவுள்ளது.

பிற்பகல் 4 மணிக்கு ஆஸ்பத்திரி வீதியிலுள்ள அகில இலங்கை காந்தி சேவாசங்க யாழ் மாவட்ட பணிமனையில் நிகழ்வு இடம் பெறும் முன்னர் யாழ்.ஆஸ்பத்திரி வீதியிலுள்ள மகாத்மா காந்தியின் சிலைக்கு மலர்மாலை அணிவித்து மலரஞ்சலி இடம் பெறவுள்ளது.

இதில் கலாநிதி ஆறுதிருமுருகன் பிரதம விருந்தினராகவும் இந்தியன் வங்கியின் சிரேஷ்ட முகாமையாளர் இரா.கண்ணன் மற்றும் திருமதி.சரஸ்வதி தம்பிப்பிள்ளை ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்கின்றனர்.

இதன்போது "காந்தீயம்" பத்திரிகை வெளியீடும் இடம்பெறுவதுடன் காந்தி ஜெயந்தி கட்டுரைப்போட்டி பரிசளிப்பு வைபவமும் இடம்பெறவுள்ளது.

# காந்தி ஜெயந்தி தினத்தன்று பருத்தித்துறையில் சிலை திறப்பு



**145ஆவது காந்தி ஜெயந்தியும் சர்வதேச அஹிம்சை தினமுமான நாளைமறுதினம் 2ஆம் திகதி பருத்தித்துறை நகராட்சி மன்றத்தின் சந்தை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள காந்தி சிலை திறந்து வைக்கப்படவுள்ளது.**

**தேசமானிய சபா.ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வின் போது யாழ்.பிராந்திய இந்திய துணைத் தூதுவர் எஸ்.தட்சணாமூர்த்தி நாளைமறுதினம் வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு காந்தியின் சிலையை திறந்து வைக்கவுள்ளார். (நி,51)**

# திருநாவுக்கரசு ஆரம்பபாடசாலை சாதனை படைத்த மாணவர்கள்

கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப்பாடசாலையில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 10 மாணவர்கள் சித்தி பெற்று சாதனை படைத்துள்ளனர்.

அதுமட்டுமன்றி 27 மாணவர்கள் 100 இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்று பாடசாலைக்கு பெருமையைச் சேர்த்துள்ளனர் என பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார்.

சித்தி பெற்றோர் விபரம் வருமாறு :-

[illegible].ஆரதி - 184, வி.கயனி - 177, வி.கம்சி - 172, சு.சஞ்சதன் - 168, இ.திலக்சன் - 167, சி.ரிசானா - 165, சி.ரிசாந் - 169, ற.ஆகாஸ் - 164, ம.தர்சிகா - 163, கே.நேருஜா - 158

100புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர் விபரம் வருமாறு-

செ.சந்துசன் - 154, சி.மிருசன் - 153, தெ.தேனுகன் - 145, த.சுஜீபன் - 144, ச.பகீரதன் - 144, ஜெ.ரிசிகேசன் - 143, சி.கஜீபனா - 143, இ.சுபிதா - 140, தி.ஆர்த்திகன் - 137, வ.கிருஷா - 137, வி.தனுஷ் - 137, த.கயேந்தினி - 136, ஸ்ரீ.கோபிராஜ் - 135, பு.கிரிசாந் - 134, இ.மதுரா - 134, இ.டில்சன் - 130, ர.யமீனா - 124, சி.சிந்துஜா - 120, பா.கிருஷா - 120, சை.டிலக்ஸ் - 118, ச.அபிநயா - 117, ஜெ.உகர்ண்யா - 114, தனுஷா - 113, ர.சாரங்கன் - 110, த.குயின்ஸ்சன் - 108, பா.தர்மிதன் - 107, ந.பவுர்த்திகா - 105, (51)

# வீதிக்கு பெயர் சூட்ட வலி.மேற்கில் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

மக்களின் சம்மதத்தை பெற்று வீதிக்கு பெயர் வைப்பதற்கு வலி.மேற்குப் பிரதேசசபை நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது

பல வருடமாக எடுத்த முயற்சியின் பலனாக "பிள்ளையார் கோவில் வீதி" என பெயர் சூட்ட தீர்மானித்துள்ளமை சித்தன்கேணி மக்கள் மத்தியில் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

என சிரேஷ்ட இளைப்பாறிய கிராமஅதிகாரி கதிரவேலு சிறிகரன் தெரிவித்தார்.

சித்தன்கேணி பிள்ளையார் கோவில் வீதி பெயர் சூட்டும் விடயத்திற்கு எமது பிரதேச மக்கள் ஒன்று கூடி முன்வந்துள்ளார்கள்.

அத்துடன் நீண்டகால முயற்சியின் பயனாக .சு.சோமஸ்கந்தமூர்த்தி பிரேரிக்க வி. சிவஜோதி ஆமோதிக்க பிள்ளையார் வீதி சட்டப்படி முன்மொழிந்து வழி மொழியப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சி திட்டத்திற்கு உறுப்பினர் ச.இராசதுரை, தவிசாளர். திருமதி. ஐங்கரன் ஆகியோர் முன்வந்து உழைத்த மக்கள் பிரதிநிதி யாவர்.

இக் கழகத்திகன் முன்னேற் றத்திற்கும் வளர்ச்சிக்கும் முன்னின்று உழைத்து வருகின்ற இளைஞர் முன்னேற்ற கழகத்திற்கும் சனசமூக நிலையத்தின் முன்னுதாரணமாக பங்களிப்புக்கும் சித்தன்கேணி வாழ்மக்கள் சார்பில் நன்றியை தெரிவிக்கின்றேன் என்றார். (92)

# நாய் குறுக்காக பாய்ந்ததில் குடைசாய்ந்தது ஆட்டோ

## – சாரதி காயம் –

வீதியில் சென்ற ஆட்டோவிற்கு குறுக்காக நாய் பாய்ந்ததில் ஆட்டோ நிலை தடுமாறி குடை சாய்ந்து விபத்துக்குள்ளானதில் அதன் சாரதி காயமடைந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு 7 மணியளவில் ஏ 9 வீதியில் பஸ்ரியன் சந்திக்கருகாமையில் இவ் விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் ஆட்டோ சாரதியான ராஜா என்பவர் காயமடைந்தார். இவ்விபத்தின் போது ஆட்டோவும் சேதமடைந்துள்ளது.

அண்மைக்காலமாக, இவ்வாறு வீதிகளின் குறுக்காக நாய்கள் செல்வதால் ஏற்படும் விபத்துக்கள் அதிகரித்துள்ளன (இ)

# புலமைப்பரிசில் பெறுபேறு

யா/கரவெட்டி கிழக்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைக்குத்தோற்றிய மாணவர்களில் பரராஜசிங்கம் டயானா 159 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.

மேலும் இப்பாடசாலையில் 100இற்கும் மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் விபரம் வருமாறு:-

கோ.அனுஜா - 143, இ.பிரவீன் - 141, ஸ்ரீ.கீர்த்திகா - 126, ஜெ.கிருஷிகா - 115, இ.யசிந்தன் - 113 (85)

# முரசின் இன்றைய பலன்



**(30.09.2014 செவ்வாய்க்கிழமை)**

ஜய வருஷம் புரட்டாதி மாதம் 14 ஆம் திகதி.
சரஸ்வதி பூசை ஆரம்பம் ஷஷ்டி / சித்தம்.
கேட்டை நட்சத்திரம் மு.இ. 09.47 வரை. பின் மூலம்.
இராகு காலம் 03.02 - 04.32 வரை. சுபநேரம் 10.32 - 12.02 வரை.

**ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| மேடம் | நீண்ட ஆண்டுகளுக்குப் பின் பதவி நிரந்தரமாக்கு தல். பங்கினைப் பிரித்து தரும் குடும்பத்தில் தகராறு ஏற்படல். |
| ரிஷபம் | சகோதரர்கள் பாரமுகமாக இருப்பதை எண்ணி மனத்துயர் அடைதல்.நண்பர்கள் மத்தியில் அவதானம் தேவை. |
| மிதுனம் | விவாகம் தொடர்பாக விவாதத்தில் ஈடுபடல். சுகாதாரச் சீர்கேடு முன்னிட்டு உணவகத்திற்கு "சீல்" வைக்க அதிகாரிகள் முற்படல். |
| கடகம் | மேய்ச்சலுக்குச் சென்ற கால்நடைகள் மனைக்குத் திரும்பாமையிட்டு மனக்கிலேசமடைதல். |
| சிம்மம் | மனக்கவலை தேங்கியிருந்த வேளை வாகனத்தை நிறுத்த காவலர் சைகைகாட்டியிருந்தும் தொடர்ந்து செலுத்தியமையினால் ரகளை ஏற்படல். |
| கன்னி | பாதுகாப்பில் அதி உச்சக்கவனமெடுத்தால் திருடரின் முயற்சி பலிக்காது விடல். வாகனப்பாதுகாப்பிற்கு கொடுத்த பற்றுச்சீட்டு தவறியதால்ரகளை ஏற்பட்டுப்பின் சுமூக முடிவிற்கு வரல். |
| துலாம் | ஆவணங்களில் பெயர்கள் பலவாறு இருந்தமையினால் உறுதி எடுப்பதில் பிரச்சினை எழுதல். தொழிலையும் இழந்து வெளியூர் வேலையையும் கைவிடல். |
| விருச்சிகம் | ஆவணங்களில் பிழைகள் காணப்பட்டதனால் பத்திரங்களைப் பெற முடியாமை. விவாகம் செய்ய பின்னடித்த மகனை கட்டாயப்படுத்தி இணங்கவைத்தல். |
| தனுசு | ஒய்வூதியம் பெறச்சம்மதக்கடிதம் கிடைத்தமை எண்ணி ஆனந்தமடைதல். |
| மகரம் | வாகனம் கட்டுப்பாட்டை மீறிச் சென்றவேளை பயணிகள் அச்சத்தில் உறைதல். பிள்ளைகளின் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்ய கடன்படும் நிலை ஏற்படல். |
| கும்பம் | குற்றத்தை மறைக்க பிறரைப்பயன்படுத்தல். நிலுவையில் நம்பிக்கை இன்மையினால் பொருளை வாங்காது விட்டுவிடுதல். |
| மீனம் | கிய, வரிசையைக் கணக்கெடுக்காது காரிய மாற்ற முனைந்த வேளை முரண்பாடு தோன்றுதல். |



## ஆசியாவின் முதல்வன்

(கோலாலம்பூர்)

மலேசியாவின் கோலாலம்பூர் நகரில் நடைபெற்ற மலேசிய ஓப்பன் ரென்னிஸ் போட்டியில் ஜப்பானின் வளர்ந்து வரும் டென்னிஸ் வீரர் கெய் நிஷிகோரி பிரான்ஸ் நாட்டின் ஜூலியன் பென்னட்டை வீழ்த்தி பட்டத்தை வென்றுள்ளார்.

தர வரிசையில் 8ஆம் இடத்தில் உள்ள கெய் நிஷிகோரி தர வரிசையில் 28ஆவது இடத்தில் உள்ள வீரர் பென்னட்டை 7-6 (7-4), 6-4 என்ற செட் கணக்கில் வீழ்த்தி ஏ.டி.பி. ரென்னிஸ் போட்டியில் பட்டம் வென்ற முதல் ஆசிய வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

அமெரிக்க ஓப்பன் இறுதிப் போட்டிக்கு 24 வயதான நிஷிகோரி முன்னேறியபோது, கிராண்ட்ஸ்லாம் பட்ட போட்டிகளில் ஒற்றையர் இறுதிப் போட்டி வரை சென்ற முதல் ஆசிய வீரர் என்ற பெருமையை அவர் பெற்றார்.

# 100 மீற்றர் ஓட்டம்; கட்டார் வீரர் சாதனை

(இன்சியான்)

ஆசிய விளையாட்டுப் போட்டியில் 100 மீற்றர் ஓட்டத்தில் கட்டார் வீரர் பெமி ஒகுநோடே புதிய சாதனை புரிந்தார்.

100 மீற்றர் ஓட்டப் போட்டியில் இவர் 9.93 வினாடியில் கடந்து தங்கம் வென்றார். இது புதிய ஆசிய சாதனையாகும். 9.93 வினாடியில் கடந்ததன் மூலம் 2016ஆம் ஆண்டு பிரேசிலில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டியில் பெமி ஒகுநோடே தாக்கத்தை ஏற்படுத்துவார் என்று கருதப்படுகிறது.

சீன வீரர் சூ பிங்டெய்ன் 10.10 வினாடியில் கடந்து வெள்ளிப் பதக்கமும், ஜப்பான் வீரர் தகாஷே 10.15 வினாடியில் கடந்து வெண்கலப் பதக்கமும் பெற்றனர்.

இதேவேளை, 55 கிலோ பிரிவு பெண்கள் மல்யுத்தப் போட்டியில் ஜப்பான் வீராங்கனை யோஷிகா ஆசிய விளையாட்டில் தொடர்ந்து 4ஆவது தங்கம் வென்று முத்திரை பதித்தார்.




## மரதனில் கென்ய வீரர் உலக சாதனை

கென்யாவின் டெனிஸ் கிமொட்டோ ஜேர்மனின் பெர்லினில் நடைபெற்ற மரதன் போட்டியில் உலக சாதனையை முறியடித்தார். இந்தப் போட்டியை அவர் இரண்டு மணி, இரண்டு நிமிடம் மற்றும் 57 வினாடிகளில் வென்றார்.

ஜேர்மனியில் நேற்று முன்தினம் நடைபெற்றஇந்தப்போட்டியில் நூற்றுக்கணக்கானவர்கள் பங்கேற்றனர். இதில் 30 வயதான கிமொட்டோ முன்னணி வீரர்களான சக நாட்டின் எம்மானுவேல் முதாய் மற்றும் ஜெப்ரி கெம்வரோர் ஆகியோரை பின் தள்ளி போட்டி இலக்கிற்கு நான்கு கிலோமீற்றர் இருக்கும்போது முன்னிலை பெற்றார். இதன்மூலம் அவர் மரதன் வரலாற்றில் இரண்டு மணி 3 நிமிடங்களுக்கு குறைவான காலத்தில் போட்டியை முடித்த முதலாமவராக சாதனை புத்தகத்தில் இடம்பிடித்தார். முன்னர் கடந்த ஆண்டு இதே பெர்லின் மரதனில் வில்சன் கிப்சாங் 2:03:23 என்ற காலத்தில் போட்டியை முடித்ததே உலக சாதனையாக இருந்தது. கிமொட்டோ டோக்கியோ மற்றும் பொஸ்டன் போட்டிகளை வென்றிருந்ததோடு காலநிலை உதவின்ால் பெர்லினில் புதிய உலக சாதனை படைப்பதாக உறுதி அளித்திருந்தார்.

## ஹபீஸ் மீதும் சந்தேகம்

சம்பியன்ஸ் லீக் கிரிக்கெட் போட்டித் தொடரில் ஆடி வரும் லாகூர் லயன்ஸ் சுழற்பந்து வீச்சாளர் மொகமட் ஹபீஸ் (பாகிஸ்தான் நாட்டவர்), டொல்பின்ஸ் சுழற்பந்து வீச்சாளர் பிரினெலன் சுப்ராயன் (தென்னாபிரிக்கா) ஆகியோரின் பந்து வீச்சு சந்தேகம் அளிக்கும் வகையில் இருப்பதாக நடுவர்கள் புகார் அளித்துள்ளனர்.

சம்பியன்ஸ் லீக் விதிமுன்றப்படி, இவர்கள் இருவரையும் சோதனைக்கு சொல்லும்படி இந்திய கிரிக்கெட் சபையின் சந்தேகத்திற்குரிய பந்து வீச்சு சபை அழைக்கலாம். ஆனால் இப்போதைக்கு அவர்கள் எந்தவித பரிசோதனையும் இன்றி தங்கள் அணிக்காக தொடர்ந்து விளையாட முடியும். ஆனால் மீண்டும் இது போன்ற புகார்கள் [illegible]தால், உடனடியாக இந்தத் தொட[illegible] பந்து வீச தடை விதிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

## மெஸ்சியின் 400

ஸ்பெயினில் நடைபெற்றுவரும் லா லிகா கால்பந்து கிளப் போட்டியில் பார்சிலோனா கிளப்புக்காக ஆடும் நட்சத்திர வீரர் ல் மெஸ்சி (ஆர்ஜென்ரீனா), கிரனடாவுக்கு எதிரான ஆட்டத்தில் இரு கோல் அடித்தார். இதில் பார்சிலோனா 6-0 என்ற கோல் கணக்கில் வெற்றி கண்டது. இந்த இரண்டு கோல்களையும் சேர்த்து மெஸ்சியின் ஒட்டுமொத்த கோல் எண்ணிக்கை 400ஐ கடந்தது. கிளப் மற்றும் ஆர்ஜென்ரீனா அணிக்காக அவர் இதுவரை 524 ஆட்டங்களில் விளையாடி 401 கோல்கள் அடித்திருக்கிறார். இது போன்ற மைல்கல்லை தொடுவேன் என்று ஒரு பேர்தும் நினைத்ததில்லை என்று மெஸ்சி கூறியிருக்கிறார்.

## இன்றைய ஆட்டம்

CHAMPIONS LEAGUE TWENTY 20

**பேர்த் ஸ்கார்ச்சர்ஸ் எதிர்**
**தகுதி சொர்சேர்ஸ்**
**இடம்: பெங்களூர்**
**நேரம்: மாலை 4 மணி**

**பார்படோஸ் டிரென்ட்ஸ்**
**எதிர் நோதென்**
**இடம்: பெங்களூர்**
**நேரம்: இரவு 8 மணி**

# பெய்லி படையின் தொடரும் வெற்றி நடை




(சண்டிகர்)

சம்பியன் லீக் ருவென்ரி-20 லீக் ஆட்டத்தில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி வெற்றிபெற்றது.

ஆறாவது சம்பியன் லீக் ருவென்ரி-20 கிரிக்கெட் தொடர் இந்தியாவில் நடைபெற்று வருகின்றது. இதில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற போட்டியில் கேப் கோப்ராஸ் அணியும் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியும் மோதின.

முதலில் ஆடிய கோப்ராஸ் அணி 18.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அம்லா 40, வெலி 42 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் ஏ. சிங், பட்டேல் ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 136 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பஞ்சாப் அணி 18.1 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. ஆட்டமிழக்காது சாகா 42, மைக்வெல்ஸ் 23, மில்லர் 16 ஓட்டங்களைப் பெற்றனர். போட்டியின் ஆட்டநாயகனாக பட்டேல் தெரிவு செய்யப்பட்டார்.

வெற்றி குறித்து பஞ்சாப் அணிக் கப்டன் பெய்லி குறிப்பிடுகையில், தொடர்ந்து வெற்றி பெற்று வருவது மகிழ்ச்சி அளிக்கிறது. அனைத்து வீரர்களும் தங்கள் பொறுப்பை உணர்ந்து செயற்படுவதால் எனக்கான சுமை குறைந்துள்ளது. அடுத்து வரும் போட்டிகள் சவால் நிறைந்ததாக அமையும். எந்த அணியாக இருந்தாலும் கள நிலைமைக்கு ஏற்றவாறு எமது செயற்பாடு அமையும் என்றார்.

## பதக்கப் பட்டியல்

தென் கொரியாவின் இன்ச்சான் நகரில் 17ஆவது ஆசிய விளையாட்டு விழா நடைபெற்று வருகின்றது. இதில் பதக்கப் பட்டியலில் முன்னணியில் உள்ள நாடுகளின் விபரம் வருமாறு:

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| சீனா | 105 | 63 | 48 | 216 |
| தென் கொரியா | 42 | 48 | 47 | 137 |
| ஜப்பான் | 34 | 46 | 46 | 126 |
| கஜகஸ்தான் | 09 | 11 | 20 | 040 |
| வடகொரியா | 08 | 08 | 09 | 025 |
| ஈரான் | 07 | 08 | 06 | 021 |
| சீன தைபே | 07 | 05 | 11 | 023 |
| கட்டார் | 05 | 00 | 01 | 006 |
| இந்தியா | 04 | 05 | 26 | 035 |
| ஹொங்கொங் | 04 | 05 | 20 | 029 |
| மங்கோலியா | 04 | 04 | 10 | 018 |
| தாய்லாந்து | 04 | 02 | 13 | 019 |
| மலேசியா | 03 | 08 | 08 | 019 |
| இந்தோனேசியா | 02 | 03 | 07 | 012 |

# பக்ரைன் வீராங்கனைக்கு மீண்டும் தங்கப் பதக்கம்

ஆசிய விளையாட்டில் நேற்று முன்தினம் நடைபெற்ற பெண்களுக்கான 3 ஆயிரம் மீற்றர் ஸ்டீபிள் சேஸ் ஓட்டப் பந்தயத்தில் பக்ரைன் வீராங்கனை 17 வயதான ரூத் ஜெபட் வெற்றி பெற்றார்.

ஆனால் தனக்கு ஒதுக்கப்பட்ட ஓடுபாதையை விட்டு விலகி ஓடியதால் அவர் தகுதி நீக்கம் செய்யப்படுவதாக போட்டி அமைப்பார்கள் பதக்க அணிவிப்பு நிகழ்ச்சியின் போது அறிவித்தனர். பதக்கம் கிடைக்காததால் அவர் கண்ணீர் விட்டு அழுதார்.

இந்த நிலையில் இந்த முடிவை எதிர்த்து ரூத் ஜெபட் மேல்முறையீடு செய்தார். இதனை விசாரித்த மூன்று பேர் கொண்ட குழு, அவர் விதியை மீறவில்லை என்று கூறி விட்டனர். இதையடுத்து இழந்த தங்கத்தை ரூத் ஜெபட் நேற்று பெற்றார்.



# விளையாட்டுச் செய்திகள்

# கிளி. சிவநகரில் மாட்டு வண்டிச் சவாரி



(கிளிநொச்சி)

கிளிநொச்சி உருத்திரபுரம் சிவநகர் உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் மாட்டுவண்டி சவாரி போட்டியொன்று இடம்பெற்றுள்ளது.

உருத்திரபுரம் உழவர் ஒன்றிய மாட்டுவண்டி சவாரி திடலில் 22ஆம் திகதி பிற்பகல் நடைபெற்ற இந்தப் போட்டியில் வடமாகாணத்திலுள்ள பல அணிகள் பங்குபற்றியிருந்தன.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களிலிருந்து பல சவாரியாளர்கள் இந்தப் போட்டியில் பங்கு பற்றியிருந்தனர்.

நான்கு பிரிவுகளின் கீழ் நடைபெற்ற இந்தப் போட்டியில் மூன்று சுற்றுக்களாக நடத்தப்பட்டு வெற்றியணி தெரிவு செய்யப்பட்டதுடன் முதலாம் இடத்தைப் பெற்ற சவாரியாளருக்கு தங்கப் பதக்கமும் 2ஆம், 3ஆம் மற்றும் நான்காம் இடங்களைப் பெற்றவர்களுக்கு பணப் பரிசும் வழங்கப்பட்டன.

அருகிவரும் தமிழர்களின் பாரம்பரிய வீர விளையாட்டுக்களில் ஒன்றான மாட்டுவண்டி சவாரியை ஊக்குவிக்கும் முகமாக குறித்த போட்டி ஒழுங்கு செய்யப்பட்டிருந்ததாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (81)

## தடகளம் 2ஆம் திகதி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட தடகளப் போட்டி எதிர்வரும் 2ஆம் திகதி முதல் 7ஆம் திகதி வரை கொழும்பு சுகததாஸ விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இன்று முதல் நடைபெறவிருந்த போட்டிகளே 2ஆம் திகதி முதல் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும், இதில் வடமாகாணத்தைச் சேர்ந்த பல வீர,வீராங்கனைகள் பதக்கங்களை வெல்லும் வாய்ப்பிருந்தாகவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். குறிப்பாக கோலூன்றிப் பாய்தலில் வடமாகாண வீரர்கள் சாதிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## பெண்கள் மென்பந்து, கால்பந்து வட்டுக்கோட்டையில் இன்று


(வட்டுக்கோட்டை)

அரச அதிபர் வெற்றிக் கிண்ண கால்பந்து மற்றும் பெண்கள் மென்பந்து கிரிக்கெட் போட்டி இன்றைய தினம் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி மற்றும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானங்களில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட செயலக ஊழியர் கழகத்தினால் பிரதேச செயலக உத்தியோகஸ்தர்களுக்கிடையில் நான்காவது ஆண்டாக நடாத்தப்பட்டு வரும் அரச அதிபர் வெற்றிக் கிண்ண பெருவிளையாட்டுப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் ஆண்களுக்கான கால்பந்தாட்டப் போட்டி இன்றைய தினம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளதாகவும், பெண்களுக்கான மென்பந்து கிரிக்கெட் போட்டி வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளதாகவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இப்போட்டிகளில் 15 பிரதேச செயலகங்களைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் அணி பங்குகொள்கின்றது எனவும் இப்போட்டித் தொடரின் இறுதி நாள் நிகழ்வுகள் அடுத்த மாத நடுப்பகுதியில் நடைபெற ஏற்பாடாகியுள்ளதாகவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (எஸ்.பி.)



செல்வ பவுண்டேன் நிறுவனத்தினூடாக யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவன் திருச்செல்வத்தின் ஒழுங்குபடுத்தலின மூலம் யாழ். இந்துக் கல்லூரிக்கு 90,000 ரூபா பெறுமதியான மேசைப்பந்தாட்ட உபகரணம் வழங்கப்பட்டது. கடந்த வெள்ளிக்கிழமை யாழ். இந்துக் கல்லூரிக்கு விஜயம் செய்த திருச்செல்வத்தின் தாயார், கல்லூரியின் பிரதி அதிபர் ச.நிமலனிடம் உபகரணங்களைக் கையளித்தார். இந் நிகழ்வில் பிரதி அதிபர்கள், உப அதிபர், விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (எஸ்.பி.)

## வென்றது றோயல்

(யாழ்ப்பாணம்)

உதயசூரியன் அணிக்கெதிரான கால்பந்துப் போட்டியில் ஊரெழு றோயல் அணி வெற்றிபெற்றுள்ளது.

யாழ். மாவட்ட கால்பந்தாட்ட மத்திஸ்தர் சங்கம் நடாத்தும் ஈ.கே. குமரையா வெற்றிக் கிண்ணக் கால்ந்துத் தொடர் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இதில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற போட்டியில் ஊரெழு றோயல் அணியும் உதயசூரியன் அணியும் மோதின.

இரு அணிகளுமே ஒன்றுக்கொன்று சளைத்தவைகள் அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் மோதிக் கொண்டன.

அனுபவ ஆட்டத்தை வெளிப்படுத்திய றோயல் அணி உதயசூரியன் அணிக்கு எதிராக கோல் அடிக்க முடியவில்லை. பிற்பாதி ஆட்டத்தில் இரு அணிகளுக்கும் கோல் அடிக்கும் வாய்ப்புக்கள் பல கைகூடியபோதிலும் இறுதி வேளைகளில் அந்த வாய்ப்புக்களைக் கோட்டைவிட்டன. இறுதியில் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் ஊரெழு றோயல் அணி 5-4 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

## மாவனின் இலக்கு

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் அணிக்குள் அரசியலுக்கு இடமில்லை என அணியின் தலைமை பயிற்சியாளர் மாவன் அத்தப்பத்து தெரிவித்துள்ளார்.

இலங்கை அணிக்கு தலைமைப் பயிற்சியாளராக பணியாற்றிய முன்னாள் இங்கிலாந்து வீரர் பால் பார்பிரஸ் கடந்த ஏப்ரல் மாதம் பதவி விலகியதைத் தொடர்ந்து, இலங்கை அணியின் முன்னாள் வீரர் மாவன் அத்தப்பத்து புதிய பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் பத்திரிகையர்ளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை குடிமகன் என்ற ரீதியில் நாம் அனைவரும் ஒன்றுபட்டு செயற்படவுள்ளதாகவும், எந்த காரணங்களிற்காகவும் அரசியலை இலங்கை கிரிக்கெட் அணிக்குள் நுழைய விடமாட்டேன்.

அணியில் திறமையான வீரர்கள் பலர் உள்ளனர். அவர்களை ஒருங்கிணைத்துச் செயற்பட்டதன் மூலமே கடந்த மூன்று தொடர்களிலும் சிறப்பான பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ள முடிந்தது. அடுத்து வருடம் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் நடைபெறவுள்ளதால் அதற்கான தயார்ப்படுத்தல்களே மிக முக்கியமானவை.

நியூசிலாந்து, அவுஸ்ரேலிய ஆடுகளங் களில் சிறப்பாக செயற்பட்டால் மாத்திரமே வெற்றிகளைப் பெற்றுக் கொள்ள முடியும். அதற்கு ஏற்றவாறு வீரர்களைத் தயார்ப்படுத்துவது எனது முதல் இலக்காக உள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

# ஆண்டு நிறைவுக் கிண்ணம் மறிச்சுக்கட்டி அண்ணூர் வசம்



(மன்னார்)

மன்னார் உப்புக்குளம் அல்பதாஹ் விளையாட்டுக்கழகத்தின் 33ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடாத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை மறிச்சுக்கட்டி அண்ணூர் அணி கைப்பற்றிக் கொண்டது.

இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டம் கடந்த திங்கட்கிழமை மன்னார் அல்பதாஹ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. எட்டு ஓவர்களைக் கொண்ட இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்தில் மறிச்சுக்கட்டி அண்ணூர் அணியும் மன்னார் அல்பெட்டா அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய மறிச்சுக்கட்டி அண்ணூர் அணி நிர்ணயிக்கப்பட்ட எட்டு ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 64 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஆவிஸ் 19, ரசாத் 15 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் றிஸ்வான், ஜெகன் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 65 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய அல்பதாஹ் அணி எட்டு ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 59 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் சராப் 20, றம்சின் 23 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஆவிஸ் இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இதன் மூலம் அண்ணூர் அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. போட்டியின் ஆட்டநாயகனாக ஆவிஸ், தொடர் நாயகனாக சராப் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (12)

# மேற்குலகின் சவால்களை முறியடிக்குமா இலங்கை?

- வே. அர்ச்சுணன் -

இலங்கை மீது சர்வதேச நாடுகள் நெருக்கடிகளை அதிகரித்து, இலங்கை அரசிற்கு எதிராக ஒரு சர்வதேச விசாரணைப் பொறிமுறைக்கு மேற்குலக சக்திகள் முயன்று வருகின்ற போதிலும் மறுபுறம் தற்போது பல உலகநாடுகள் இலங்கைக்கு ஆதரவான கருத்துக்களையும் தெரிவித்து வருகின்றன.

குறிப்பாக ஜப்பான், சீனா, ரஷ்யா உள்ளிட்ட பலநாடுகளும் இலங்கைக்கு ஆதரவான நிலைப்பாட்டை தீவிரமாக வெளிப்படுத்தி வருகின்றன. அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த ஜப்பானியப் பிரதமருடன் நடத்திய பேச்சுவார்த்தையை அடுத்து வெளியிடப்பட்ட கூட்டறிக்கை ஒன்றில் ஐ.நா.வின் புதிய மனித உரிமை ஆணையாளரை இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளுமாறு அழைப்பு விடுத்துள்ளதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்திருக்கிறார்.

இலங்கை அரசாங்கம் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பொறிமுறைகளுடன் குறிப்பாக புதிய மனித உரிமை ஆணையாளருடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள அது தயாராகியுள்ளதையும், இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளுமாறு அவருக்கு அழைப்பு விடுத்துள்ளதையும் ஜப்பானியப் பிரதமர் பாராட்டினார். நல்லிணக்கத்தை நோக்கி அரசாங்கம் மேற்கொண்டுள்ள முயற்சிகளை பாராட்டிய ஜப்பான் பிரதமர், சகல தரப்பு பேச்சுக்கள் இடம் பெறவேண்டியது நல்லிணக்கத்திற்கு அவசியமானது என்பதை வலியுறுத்தினார்.

வடபகுதியில் தேர்தல்களை நடத்தியமை, சாட்சியங்களைப் பாதுகாப்பதற்கான சட்டமூலம், காணமற்போனோர் குறித்து விசாரணை செய்யும்



ஆணைக்குழுவின் ஆணை விஸ்தரிக்கப் பட்டது போன்றவற்றையும் அவர் வரவேற்றிருந்தார்.

ஐ.நா. பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்புரிமை பெறும் ஜப்பானின் முயற்சிக்கான இலங்கையின் ஆதரவிற்கு நன்றி தெரிவித்தார். இரு தலைவர்களும் சகலவகையான பயங்கரவாதச் செயல் களையும் கண்டிப்பதாக உறுதியளித்துக்கொண்டனர்.

இதேவேளை மேற்குலகிடம் இருந்து இலங்கையரசு எதிர்நோக்கிவரும் சவால்களைச் சமாளிக்கக்கூடிய வகை யில் அனைத்து வகையான உதவிக ளையும் வழங்குவதற்கு பாகிஸ்தான் அரசு தயாராக இருப்பதாக அந்நாட்டின் இலங்கைக்கான முன்னாள் தூதுவர் மொகமட் அயூப்பும் கருத்து வெளியிட்டிருந்தார்.

வெளிநாட்டிலிருந்து மேற்குலக நாடுகளினால் அநாவசியமாக பிரயோ கிக்கப்பட்டு வரும் அழுத்தங்களை சமாளிக்கப் பாகிஸ்தான் இலங்கைக்கு பூரண ஆதரவினை வழங்கும். இலங்கை இப்பொழுது சரியான பாதையில் பயணம் செய்வதாகவும் இவர் தெரிவித்திருந்தார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பு மற்றும் மேற்குலக நாடுகளின் இதுபோன்ற நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது எனக் குறிப்பிட்டிருக்கும் அயூப், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் மீது அழுத்தங்க ளைப் பிரயோகிக்க இந்தத் தரப்பினர் இதை ஆயுதமாகப் பயன்படுத்துவதாகவும் கூறியுள்ளார்.

மறுபக்கத்தில், ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் அலுவலகம் மேற்கொண்டுள்ள விசாரணைகளுக்கு இலங்கை ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அமெரிக்காவும் பிரித்தானியாவும் வலியுறுத்தியுள்ளன.

ஜெனிவா மனித உரிமைப்பேரவை 27 ஆவது கூட்டத்தொடரில் பேசிய ஜெனிவாவிற்கான அமெரிக்காவின் தூதுவர் கீத்ஹார்பர் இலங்கைப் பிரச்சினை தொடர்பாக முன்னாள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை ஆற்றிய பங்கைப் பாராட்டினார். இலங்கையின் மனித உரிமை சம்பந்தமாக அர்த்தமுள்ள பொறுப்புக்கூறல், மரியாதை, ஊக்குவிப்பு, வன்முறை, பாதுகாப்பு தொடர்பில் உலகின் கவனத்தைத் திருப்பியமை, பாலியல் மற்றும் பாலின அடையாளம் போன்ற விடயங்களில் முன்னாள் ஆணையாளரின் தலைமை யில் மேற்கொள்ளப்பட்ட விடயங்களிற்கு நன்றி தெரிவிப்பதாகவும் அவர் வலியுறுத்தியிருந்தார். இலங்கை தொடர் பான ஐ.நா. மனித உரிமை ஆணையா-ளரின் அறிக்கையை அமெரிக்கா எதிர்பார்த்து காத்திருப்பதாகவும் இந்த விசாரணைகளுக்கு இலங்கை அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என மீண்டும் அழைப்பு விடுப்பதாகவும் ஹார்பர் குறிப்பிட்டார்.

இதையே பிரித்தானிய பிரதிநிதியும் அங்கு கூறினார். அச்சுறுத்தல், பழி-வாங் கல்கள் இல்லாமல் விசாரணைக் கான ஒத்துழைப்பு மற்றும் அணுகலை இலங்கை உறுதி செய்ய வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

இதேசமயம், இலங்கையில் மனித உரிமைகள் நிலவரம் தொடர்பான வாய்மொழி மூலமான அறிக்கையை இலங்கை ஐக்கிய நாடுகள் சபையில் வைத்தே நிராகரித்துள்ளது. ஐ.நா. வின் இந்த அறிக்கைக்கு சீனாவும் ரஷ்யாவும் தமது கண்டனத்தை வெளிப்படுத்தியிருந்தன. பிரான்ஸ் உட்பட ஒருசில நாடுகளே இதை ஆதரித்திருந்தன.


ஜெனிவாவில் இருக்கும் ஐ.நா. அமைப்புக்கான இலங்கைத் தூதுவர் ஐ.நா.வின் இந்த தீர்மானத்தை நிராகரிப் பதாகவும் இந்த விசாரணைகளுக்கு இலங்கை ஒருபோதும் ஒத்துழைக்காது எனவும் உறுதியாக தெரிவித்து விட்டார். தொடர்ச்சியாகப் பல சவால்கள் இருக்கின்றபோதிலும் சவால்களை முறியடிக்கும் வியூகங்களையும் இலங்கை தொடர்ந்து வகுத்துக்கொண்டே வருகின்றது.

# ஊவா தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் கூட, ஜனாதிபதி தேர்தலில் மகிந்தவே நிச்சயம் வெல்வார்

கலாநிதி தயான் ஜயதிலக கட்டுரையிலிருந்து.

ஊவா தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் கூட ஒரு ஜனாதி-பதித் தேர்தலில் மகிந்தவால் வெற்றி பெற முடியும் மற்றும் ரணில் அதில் தோல்வியடைவார்.

1988 தேர்தலில் ரணசிங்க பிரேமதாஸ மற்றும் சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு இடையில் இருந்த போட்டியின் தீர்க்கமான வேறுபாடாக இருந்து இரண்டரை இலட்சம் வாக்குகளைப் பெற்றவர் ஓசி அபயகுணசேகரா. ஜே.வி.பி. ஒரு பொதுவேட்பாளராக யாரைத் தெரிவு செய்ய விரும்பும், ரணில் அல்லது கரு? நான் நினைக்கிறேன் இரண்டாவதாக உள்ளவரைத்தான் என்று.



ஜே.வி.பி.க்கு செல்லும் வாக்குகளை தம்பக்கம் இழுக்கக் கூடிய ஐ.தே.க. வேட்பாளர் யார்? நிச்சயமாக சஜித்தான். இதைச் செய்வதற்கான குறைவான திறமை கூட ரணிலுக்கு கிடையாது.

ஹரின் பெர்னாண்டோவின் செயல்திறன், அதே போல அனுரகுமார திசாநாயக்காவின் தலைமையின் கீழ் தனது வாக்குகளை இரட்டிப்பாக்கிய ஜே.வி.பி. என்பனவற்றின் நடவடிக்கைகள் ஒரு புதிய இயங்குதிறன் மிக்க இளம் வேட்பாளரின் கீழ் ஐ.தே.க. நன்றாகச் செயற்பட முடியும் என்பதைக் காட்டுகின்றன. அது சஜித்தை தவிர வேறு யாராகவும் இருக்க முடியாது.

ஐ.தே.க. இன்னமும் தனது வேட்பாளராக ரணிலையே தேர்வு செய்து கொண்டிருக்குமானால், அமெரிக்க பழமொழி சொல்வதைப்போல, "பிரசாரத்தில் வெற்றி ஆனால் தேர்தலில் தோல்வி" என்கிற நிலைதான் ஏற்படும்.

சஜித் அல்லது கரு வேட்பாளராக நியமிக்கப்பட்டாலும் இதுவே நடக்கக்கூடும், ஆனால் அவர்கள் ரணிலைக் காட்டிலும் அதிக வாக்குகளைப் பெற்றிருப்பார்கள், அத்துடன் அவர்களது தோல்வி ஒரு தார்மீக தோல்வியாகவே இருக்கும். அதே சமயம் அதையடுத்து வரவுள்ள பாராளுமன்றத் தேர்தல்களில் அது ஒரு எதிர்க்கட்சி வெற்றியாகப் ப்ரிமாற்றம் செய்யப்பட்டிருக்கும். ரணில் தோற்றுப் போவாராகில் பாராளுமன்றத் தேர்தல்களிலும் அரசாங்கம் நிச்சயம் வெற்றி பெற்றுவிடும்.

ஆயுதப்படைகள் புதிய சமூக சக்திகளாக உள்ளன, ஆயுதப் படையினரையும் அவர்களது குடும்பத்தினரையும் ஐந்தால் பெருக்கினால் சுமார் ஒன்றரை மில்லியன் வாக்குகள் தேறும்.

ஆயுதப்படையினர் மற்றும் அவர்களின் குடும்ப அங்கத்தினர்களை ஈர்க்கக் கூடியதாக தேசப்பற்றுள்ள முகவிபரம் கொண்ட ஒரு வேட்பாளார் ஐதேகவுக்கு அவ்சியம். ரணிலால் எப்படி அதைச் செய்ய முடியும். சஜித் அல்லது கரு அதற்கு மிகவும் உகந்ததாக இருப்பார்கள்.

ரணில் எதிர் மகிந்த போட்டியில் யுத்த பற்றிய பழைய விடயங்கள் அதேபோல ஐ.தே.க. ஆட்சிக் காலத்தின் இருண்ட பக்கங்கள் அதாவ்து பட்டலந்தவிலிருந்து அத்துரகிரிய வரையான பகுதிகள் மீண்டும் உயிர் பெறக்கூடும்.

அப்படியான ஒரு சந்தர்ப்பத்தில் அப்படியான ஒரு இலக்கை பிரயோகிப்பது எவ்வளவு தூரத்துக்கு விவேகமானதாக இருக்கும்? சஜித் அல்லது கருவுக்கு அப்படியான சுமைகளை சுமக்க வேண்டிய தேவை இல்லாததால், அவர்ளைக் குறி வைத்து தாக்குவது அத்தனை எளிதல்ல.

ஸ்ரீ.ல்.சு.க வாக்குகளை தம்பக்கம் கவருவதற்கும் மற்றும் பாராளுமன்றில் கட்சி தாவுவதற்கும்கூட அவர்களை கவரக்கூடிய ஒரு தலைமை அல்லது வேட்பாளர் ஐ.தே.க.வுக்கு தேவையாக உள்ளது.

ஸ்ரீ.ல.சு.க அணிமாறுவதுடன் மற்றும் ஐ.தே.க. விலிருந்து அணிமாறிய வாக்காளர்களும் கருத்தியல் ரீதியாகவும் சமூக ரீதியாகவும் தாங்கள் அடையாளம் காணும் ஒருவர் இருக்கும் பட்சத்தில் நிச்சயம் திரும்பி வருவார்கள். இதற்கான கூடுதல் சாத்தியம் யாருக்கு உள்ளது, ரணிலுக்கா அல்லது கருவுக்கா?


தேர்தலில் வழங்கப்படும் இரண்டாவது விருப்புரிமை வாக்குகளை கைப்பற்றுவதற்கு சிறந்த வாய்ப்புள்ள ஒரு வேட்பாளரே ஐ.தே.க. வுக்கு தேவையாக உள்ளது. உண்மையில் மகிந்த ராஜபக்ஸவைக் காட்டிலும் அதிகளவு இரண்டாவது விருப்புரிமை வாக்குகளைச் சுவீகரிக்க கூடிய ஒரு வேட்பாளர் தேவை.

உதாரணத்துக்கு அனுர குமார திசாநாயக்காவுக்கு வாக்களிப்பவர்களது இரண்டாவது விருப்புரிமைத் தெரிவை யார் சுவீகரிப்பார்கள் மகிந்தவா, ரணிலா, சஜித்தா அல்லது கருவா?

# உணவு வகைகளை சரியான முறையில் நாம் தெரிவு செய்வது எவ்வாறு?

தாரணி முரளிஹரன்,
(Mphil - Reading (Food & Nutrition))
நீரிழிவு சிகிச்சை நிலையம்,
யாழ் போதனா வைத்தியசாலை.

5




**பொ**துவில் பிரதான உணவுகளான சோறு, பிட்டு போன்ற மாப்பொருள் மிக அதிகளவில் அடங்கிய உணவுகளை நாம் குறைத்து உண்ணுதல் மிக மிக சிறந்ததே ஆகும்.

மேலும் நாம் உண்ணும் மாப்பொருளின் அளவினை பின்வரும் காரணிகளால் தீர்மானிக்கலாம்.

1. வயது மற்றும் உடல் உயரத்திற்குரிய உடல் நிறை
2. நோய்.
3. நோயின் தீவிரத்தன்மை
4. உடலுழைப்பின் அளவு
5. வாழ்கின்ற நாடு

மேலும் உடல் உயரத்திற்கு பேண வேண்டிய நிறையிலும் அதிக நிறை உள்ளோர் அல்லது அதீத கொழுப்பு உள்ளவர்கள், நீரிழிவு நோயுள்ளவர்கள், மிகக் குறைந்த அளவு [illegible]ன உணவுகளை உண்ணுதல் நன்று.

ஆனால் சிறார்கள், வளரும் பிள்ளைகள், அதிகளவு உடல் உழைப்பில் ஈடுபடும் தொழிலாளிகள், விளையாட்டு வீரர்கள், குளிர்ப்பிரதேசங்களில் வாழ்பவர்கள் முதலியோரிற்கு இவ்விதி பொருந்தாது. இவ்வாறானவர்கள் அதிகளவு மாப்பொருள் அடங்கிய உணவுகளை உள்ளெடுத்தல் வேண்டும்.

எவ்வாறு சோற்றுடனான பிரதான உணவினை பூரணமான உணவாக மாற்றலாம்?

எமது உணவுத்தட்டில் 1/2 பங்கு ஆனது சோறு அல்லது பிட்டு முதலிய பிரதான உணவாகவும், ஆகக்குறைந்தது 1/2 பங்காவது பழங்கள் மற்றும் மரக்கறிகள் மற்றும் புரதம் அதிகமுள்ள தானியங்கள், பருப்பு வகைகளாகவும் இருத்தல் வேண்டும்.

மேலும் ஒவ்வொரு நாளும் கீரைவகை உள்ளடங்கலாக 2-3 விதமான மரக்கறிகளும், 1-2 வகையான பழங்களுமாக ஆகக்குறைந்தது ஐந்து வகை பழங்களும் மரக்கறிகளும் உள்ளெடுத்தல் வேண்டும்.

ஆயினும் நாம் துரதிர்ஷ்டவசமாக எமது உணவுக்கோப்பையினை பிரதான உணவுகளான சோறு அல்லது பிட்டு முதலானவற்றால் நிரப்பி மிகச் சொற்ப மரக்கறிகளுடனேயே உண்கின்றோம்.

கோதுமை மா / கோதுமைமாவினால் தயாரிக்கப்பட்ட உணவுகள்

கோதுமை தானியத்திலும் வெளிப்புற படையிலேயே அதிகளவு விற்றமின்கள், புரதம், நார்ப்பொருட்கள் அடங்கியுள்ளன. மேலும் உட்புறத்தில் அதிக அளவு மாப்பொருளே அடங்கியுள்ளது. ஆனால் இலங்கையில் மிக மிக அதிகளவு வெளிப்புறப்படை அகற்றப்பட்டு மாப்பொருள் அதிக அளவு அடங்கியுள்ள போஷணை பெறுமதி குறைந்த கோதுமைமாவே தயாரிக்கப்படுகின்றது. ஆனால் ஆட்டாமா முதலிய குறைந்தளவு வெளிப்புறப்படை அகற்றப்பட்ட கோதுமை மா, சாதாரணமாக கிடைக்கும் கோதுமை மாவிலும் போஷணை பெறுமதி கூடியது. எனவே இயலுமானளவு கோதுமை மா பயன்படுத்தி தயாரிக்கப்படும் உணவுகளை குறைத்தல் நன்று.

எவ்வாறு கோதுமை மாவினால் தயாரிக்கப்படும் உணவுகளின் போஷணை பெறுமதியை கூட்டலாம்?

தனிக்கோதுமை மாவினால் தயாரிக்கப்படும் உணவுகளை விட, ஆட்டாமா, குரக்கன்மா, அரிசிமா சேர்த்து தயாரிக்கப்பட்ட உணவுகள் சிறந்தவை. மேலும் போஷாக்கு செறிவூட்டப்பட்ட பழங்கள் மற்றும் மரக்கறிகளை உணவுடன் சேர்க்கலாம். இவற்றைத்தவிர தனிக்கோதுமையினால் தயாரிக்கப்பட்ட உணவு வகைகள் இரத்தத்தில் சீனியின் அளவினை கூர்மையாக அல்லது விரைவாக அதிகரிப்பதினால் நீரிழிவு நோயாளிகள் ஆட்டாமா, குரக்கன் மா, அரிசிமா, உள்ளடங்கிய உணவுகளை உள்ளெடுத்தலே நன்று. நீரிழிவு நோயாளிகளிற்கு மட்டுமன்றி சிறார்கள், கர்ப்பிணிகள், வளரிளம் பருவத்தவர்கள், வயது முதிர்ந்தோர் முதலியோரிற்கும் போஷாக்கு பெறுமதி குறைந்த தனிக்கோதுமை மாவிலான உணவிலும், சத்தான அரிசிமா, குரக்கன் மா, ஆட்டாமா உணவுகள்ள உண்ணுதலே சாலச்சிறந்தது ஆகும்.

# ஒதுக்கி வைத்தல் கேடு!

**ஒ**ரு நாள் பாரதியார் வீட்டுக்குச் சென்றிருந்தேன். என்னைக் கண்டதும் பாரதியார், "உனக்கு தம்பலா வீடு தெரியுமா?" என்று கேட்டார். "தெரியும்..." என்றேன். "அப்படியானால் வா...அந்த வீட்டுக்குப் போய் வருவோம்..." என்றார்.

நான் திடுக்கிட்டுப் .போனேன்.

புதுச்சேரியில் கழிவறை சுத்தம் செய்யும் சமூகத்திற்கு தலைவராக விளங்கினார் தம்பலா. அவர் சாராயக் கடை, கஞ்சா இவைகளை குத்தகை எடுத்துப் பொருள் சம்பாதித்தவர். 1906 ஆம் ஆண்டில் நடைபெற்ற, "லெமேர்" தேர்தலில் அவர் வாக்காளர்களை பயமுறுத்தியது பிரசித்தமான செய்தி. அக்காலத்தில், புதுவையில் தம்பலா என்றால் அழுத பிள்ளை வாய் மூடும் என்பர்.

தம்பலாவின் வீட்டுக்குச் சென்றதும், அவ்வீட்டின் ஓட்டுத் திண்ணையில் உட்கார்ந்தார் பாரதியார். தம்பலா பாரதியாரைக் கண்டவுடன் வரவேற்று, தாழ்மையுடன் கும்பிடு போட்டு நின்றார். தமக்கு எதிரே இருந்த திண்ணையில் தம்பலாவை உட்காரச் சொல்லி பாரதியார் எவ்வளவோ வற்புறுத்தியும் கேளாமல், தோளில் போட்டிருந்த துண்டை தரையில் விரித்து உட்கார்ந்தார் தம்பலா.

"நான் யார் தெரியுமா?" என்று கேட்டார் பாரதியார். "தெரியுமுங்கோ... நீங்கள் சுதேசிங்கோ..." என்றார் தம்பலா. "அப்படியானால் நீர் பரதேசியா?" என்று, "பளிச்"சென்று கேட்டார் பாரதியார்.



கடைசியாக, "உம்முடைய வீட்டில் வந்து உட்கார்ந்து உம்மிடம் இரண்டொரு வார்த்தை பேச வேண்டும் என்ற அவா இருந்தது இன்று பூர்த்தியாகி விட்டது. நாங்கள் போய் வருகிறோம்..." என்று எழுந்தார் பாரதியார்.

அவரைப் பிரிந்து விட மனமில்லாதவர் போல், தம்பலாவும் எங்களுடன் கொஞ்ச தூரம் தெரு வரையில் வந்து, பாரதியாருக்கு நமஸ்காரம் செய்துவிட்டுத் திரும்பினார்.

அப்போது என்னை நோக்கி, "கனகலிங்கம்... தம்பலா நம்மிடம் எவ்வளவு நல்லவனாக நடந்து கொண்டான் பார்த்தாயா... தேர்தல் காலங்களில், ஜனங்களை அடிப்பதும், இம்சிப்பதுமாய் இருந்தான் என்று கேள்விப்பட்டுத் தான் நான் இவனிடம் சினேகம் செய்ய மனமில்லாமல் இருந்தேன்..." என்று சொன்னார் பாரதியார்.

எந்தக் காரணத்தை முன்னிட்டும், மனிதர்களை ஒதுக்கி வைப்பது தவறு என்று கருதினார் பாரதியார். ஒதுக்கி வைப்பதோ, ஒடுக்கி வைப்பதோ, அவர்களுக்கும் கேடு, பிறருக்கும் கேடு என்பது பார்தியாரின் கொள்கை.

**(ரா.கனகலிங்கம் எழுதிய 'என் குருநாதர் பாரதியார்' நூலில்)**




# முடிவில்லாப் பிரிவுகளும் இன்றைய வாழ்வின் முரண்பாடுகளும்

"**நா**கரீக வாழ்வியல்" நாலு திசையெங்கும் நாட்டியமாடினாலும் நாமின்னும் நாலு சுவரிற்குள் தான் வாழ்ந்து வருகின்றோம். போட்டிகள், பொறாமைகள், விரோதங்கள், குரோதங்கள், வன்முறைகள், வாள்வெட்டுக்கள் மலிந்த மானிடவர்க்கமாகவே நாள்தோறும் நாம் பிறவியெடுக்கின்றோம். முடிவில்லாப் பிரிவுகளையும் தீர்வில்லா முரண்பாடுகளையும் சுமந்து வாழ்கின்றோம்.

இந்தப் பூமி எதற்காக பரந்து விரிந்து கிடக்கின்றது?.... நாலு மனிதர்களை சந்தோஷப்படுத்தி நாமும் சந்தோஷமாக வாழ்வதற்காகவே. ஆனால் நாமோ வன்முறை தான் வாழ்க்கையென்று வாளேந்தி நிற்கின்றோம்.

**ஆஸ்திக்கும் அந்தஸ்துக்கும் ஆயிரம் அர்த்தம் இருந்தாலும் நிஜமான அன்புக்கு ஒரேயொரு அர்த்தமிருந்தால் அதுவே எம்வாழ்வில் வெற்றியைத் தேடித்தரும் என்பார்கள்**

இன்று எத்தனையோ விவாகரத்துக்கள் நாளுக்கு நாள் நீதிமன்றங்களுக்கள் வருகின்றன. அத்தனைக்கும் அடிப்படைக் காரணம் முரண்பாடுகளேயாகும். முரண்பாடு என்பது வேறு பிரச்சினை என்பது வேறு.

இரு பக்கங்களிலும் சரியான நியாயங்கள் இருந்த போதும் கருத்து வேறுபாடு காரணமாக உருவாகுவது முரண்பாடாகும். மாறாக ஒரு பக்கத்தில் மாத்திரம் சரியான நியாயம் இருக்கும் போது உருப்பெறுவது பிரச்சினையாகும்.


முரண்பாடுகள் முற்றிய நிலையில் பிரச்சினைகளாக உருப்பெறலாம். ஆனால் இன்றைய சமூகப்பிரச்சினைகள் பலவற்றிற்கு அடிப்படைக் காரணம் முரண்பாடுகளேயாகும்.

அதனைத் தீர்ப்பது சற்றுக் கடினம். ஆனால் பிரச்சினைகளைத் தீர்ப்பது சுலபம்.

இன்றைய சமூகக் கட்டமைப்பில் பல்வேறு துருவங்களில் முரண்பாடுகள் முற்றிவருகின்றன. குடும்பத்தில் ஏற்படும் முரண்பாடுகளால் விவாகரத்துக்கள் மலிகின்றன, நிர்வாகங்களில் ஏற்படும் முரண்பாடுகளால் வெளியீடுகள் பாதிக்கப்படுகின்றன, அரசியலில் ஏற்படும் முரண்பாடுகளால் அப்பாவிகளுக்கு பொதுமக்களுக்கு பயன்பட வேண்டிய நிதிகள் பயன்பாடற்றுத் திரும்புகின்றன. பெற்றோர்க்கும் பிள்ளைகளுக்குமிடையிலான முரண்பாட்டால் முதியோர் இல்லங்களில் வாழவைத்த தெய்வங்கள் வாடிக்கிடக்கின்றன.

ஆகவே முரண்பாடுகள் தொடர்பாக தனித்தனியாக நோக்கவேண்டிய கட்டாய தேவை இன்று அதிகரித்துள்ளது. அந்தவகையில் இத்தொடர் ஊடாக பல்வேறு விடயங்களை பகுத்தாராய்வோம்.

முரண்பாடுகளைத் தீர்த்துக் கொள்ளும் அறிவும் ஈடுபாடும் எம்மவர்கள் மத்தியில் குறைந்து செல்வதே முடிவில்லாப்




பிரிவுகளுக்கு அடிப்படையாக அமைகின்றன. மனித உறவுகளின் முக்கியத்துவம், ஒன்றிணைந்த வாழ்வின் தேவைகள் என்பவற்றை தற்கால சமூகம் புரிந்து கொள்வதில்லை.

இதற்குப் பல காரணங்கள் உண்டு:

1. விட்டுக்கொடுப்பு என்பதை தோல்வியாகக் கருதுகின்றோம்.
2. பிறரின் தேவைகளைக் கருத்தில் எடுக்காது (needs) எமது நிலையில் இருந்து மாத்திரம் சிந்தித்து தொடர்பாடல்களை மேற்கொள்கின்றோம்.
3. மற்றவர் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாது தொடர்பாடல்களை மேற்கொள்கின்றோம்.
4. வன்முறையால் எதனையும் சாதித்து விடலாம் என்கின்ற வக்கிர மனப்பாங்கை வளர்த்து வருகின்றோம்.

வன்முறை தான் வாழ்க்கையல்ல முரண்பாடுதான் முடிவல்ல இடையில் பல வசந்தங்கள் இந்தப் பூமியில் உண்டு. அதை நாம் தேடுவதில்லை. நல்லதை நாம் சிந்திப்பதில்லை. எதை எடுத்தாலும் எதிர்மறையான சிந்தனைகள்தான் எமக்குள் மலிந்துவிட்டன.

இந்நிலை மாறவேண்டும். மனித வள அபிவிருத்திக்கும் உளநிலை செம்மையாக்கத்திற்கும் பல திட்டங்களை நாம் முன்னெடுக்க வேண்டும்.

இழப்புக்களின் உச்சத்தைக் கண்டு வெந்து நொந்து போன சமூக ஆளணிகள் நாங்கள். எமக்குத்தான் வழிகாட்டலும் ஆலோசனையும் அதிகம் தேவை. வாரமொரு வாழ்வியற் சிந்தனையுடன் ஒவ்வொரு வாரமும் சந்திப்போம்.

**- ஆர்.கே.மேனன்**




## நவீன மருத்துவத்தின் தந்தை ஹிப்போகிரேட்டீஸ்



மனிதனின் உடலில் நோய்கள் வருவதற்குக் காரணம் கடவுளின் கோபம்தான் என்று பழங்கால மக்கள் நம்பி வந்தனர். அதனால்தான் கடவுளுக்குப் பலியிடுதல், படையல் போடுதல், வேண்டுதல் செய்தல் போன்றவற்றில் மக்கள் ஈடுபட்டனர்.

இந்த மூடநம்பிக்கையை முதலில் தகர்த்தவர் கிரேக்க நாட்டைச் சேர்ந்த ஹிப்போகிரேட்டீஸ். நவீன மருத்துவ இயலின் தந்தை என்று போற்றப்படும் இவர்தான் மனித இனத்துக்கே புத்துயிர் அளித்தவர் என்ற பெருமைக்குரியவர், கிரேக்க நாட்டிலுள்ள காஸ் தீவில் கி.மு. 460 ஆம் ஆண்டு பிறந்த இவரது தந்தை ஒரு மதபோதகர் ஆவார். முன்னோர்களின் கருத்தில் நம்பிக்கை வைக்காமல், சுயமாகச் சிந்திக்க ஆரம்பித்தார். மனிதர்களுக்கு ஏற்படும் நோய்களுக்கு கடவுளின் கோபமே காரணம் எனவே, கோவிலுக்குச் சென்று மதபோதகர்களிடம் மருந்து வாங்கிச் சாப்பிட்டால் நோய் குணமாகும் என்ற கருத்தை ஹிப்போகிரேட்டீஸ் ஏற்கவில்லை.

நோயினைக் கடவுள் தருவதுமில்லை, திரும்பப் பெறுவதுமில்லை என்பதை ஆணித்தரமாகக் கூறினார். மனித உடலை ஆய்வு செய்து நோய்க்கான உண்மையான காரணத்தினை உடல் குறைபாட்டினை அறிந்து சிகிச்சை பெறும் வழிமுறை ஏன் இல்லை என்று யோசித்தார்.


பேய் பயம் மற்றும் கடவுள் கோபத்தினால் நோய் வருகிறது என்பது அப்பட்டமான பொய் என்ற முடிவுக்கு வந்தார். சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைக்க வேண்டும் என்று கூறி, பாதுகாக்கும் வழிமுறைகளை எடுத்துக் கூறினார். நீராவியால் கொடுக்கப்படும் சிகிச்சை பற்றிக் கூறி சிகிச்சையும் அளித்தார்.

சூடான நீரையும் குளிர்ந்த நீரையும் பயன்படுத்தி காய்ச்சல், காயங்களைக் குணப்படுத்தினார். குளிர்ந்த நீர் மனிதனின் உடல் வெப்பநிலையினைச் சீராக வைக்கிறது என்றார். கோவில் மதபோதகர்களிடம் சென்ற மக்களைச் சந்தித்து, மூடநம்பிக்கைகளை விளக்கி விழிப்புணர்வை ஏற்படுத்தினார். அறிவியல் அணுகுமுறையால் வெற்றி பெற்றார். நோயின் காரணம் அறிந்து குணப்படுத்தும் வழியைக் காணவேண்டும் என மருத்துவர்களுக்கும் அறிவுரை வழங்கினார் கிரேக்கம் மட்டுமல்ல, உலகம் முழுதும் புகழப் பெற்றார்.

மனித இனத்தின் ஆயுள் அதிகரித்ததற்கு நவீன மருத்துவ அறிவியலைத் தொடங்கிய ஹிப்போகிரேட்டீஸ்தான் முதல் காரணம். தற்போது மருத்துவத் துறையில் பட்டம் பெறும் மாணவர்கள் ஹிப்போகிரேட்டீஸ் பெயரினைக் கூறி மனித இனத்திற்குச் சேவை செய்வதாக உறுதி எடுப்பது நினைவில் கொள்ளத்தக்கது.

### ஆச்சரியத் தகவல்

# அனுமான் இமயமலையில் தேடிய சஞ்சீவினி மூலிகையை விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு!



*(சென்றவாரத் தொடர்ச்சி..)*

இந்த மூலிகைக்குப் பெயர் "ரோடியோலா" என்பதாகும். இது லடாக் பகுதியில் "சோலோ" என்று அழைக்கப்படுகிறது. அப்பகுதி மக்கள் இதைத் தங்களின் உணவுகளில் பயன்படுத்துகிறார்கள். இந்த மூலிகை சுமார் 5,400 மீற்றர் உயரம் உள்ள சியாசென் பனிமலைகளில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருக்கும் நமது இராணுவ வீரர்களுக்கு மிகவும் பயன்படும். இந்த மூலிகை உடலின் நோய் எதிர்ப்புச் சக்தியை மேம்படுத்துகிறது.

கதிரியக்கத்தின் விளைவுகளில் இருந்தும் உயிர்களைப் பாதுகாக்கிறது. மன உளைச்சல், கவலை ஆகிய வற்றுக்கு சிறந்த நிவாரணியாகவும், உடலில் ஜீரண சக்தியை மேம்படுத்தும் தன்மையும் இந்த மூலிகைக்கு இருப்பது தெரிய வந்துள்ளது என்று கூறுகின்றனர். இதனை உண்பதன் மூலம் இராணுவ வீரர்களால் பனிச் சிகரங்களில் பல நாட்கள் தங்களின் சக்தியை இழந்துவிடாமல் தாக்குப் பிடிக்க முடியும். இந்த மூலிகை அமெரிக்காவிலும் சீனாவிலும் காணப்படுகிறது. இந்தப் பகுதியைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டுள்ள நமது இராணுவ வீரர்களுக்கு இந்த மூலிகை உதவியாக இருக்கும், மேலும், ரோடி யோலா மூலிகை குறித்து ஏற்கெனவே பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு ஆய்வு செய்து வருகிறது.

சீன பாரம்பரிய மருத்துவத்தில் இது மலை சார்ந்த நோய்களைத் தீர்ப்பதற்காகவும், மங்கோலியாவில் காசநோய் மற்றும் புற்று நோயைக் குணப்படுத்துவதற்காகவும் பயன்படுத்தப்படுகிறது. இந்த மூலிகையை திஹர் ஆய்வு மையத்தில் சுமார் இரண்டு ஏக்கர் பரப்பளவில் வளர்க்கப் போகிறோம். அப்படி வளர்ப்பதன் மூலம் இந்த மூலிகையின் எண்ணிக்கையையும் அதிகரிக்க முடியும். இவ்வாறு அவர் கூறினார்.

## மனித இனவரலாறு

18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும், முக்கியமாக பிரிட்டனில் கைத்தொழில் முறைகளில் ஏற்பட்ட மாறுதல், தொழிற் புரட்சி என வழங்கப் பெறுகிறது. இது மிகப் பெரிய மாறுதல். கைத்தொழிலும், வாணிபமும் பல மடங்கு பெருகுவதற்கு ஏதுவான மாறுதல். எனவே இம்மாறுதலைப் புரட்சி என்று சொல்வது பொருத் தமே. இத் தொழிற்புரட்சி பிரிட்டனில் தொடங்கி 19 ஆம் நூற்றாண்டில் பிற ஐரோப்பிய நாடுகளிலும், வட அமெரிக்காவிலும் பரவியது. ஜேர்மனியில் 1871 இல் பேரரசு நிறுவப்பட்ட பின்னரும், அமெரிக்காவில் உள் நாட்டுப் போருக்குப் பின்னரும், ரஷ்யாவில் 1917 இற்குப் பின்னரும் தான் தொழிற் புரட்சி தொடங்கியது இந்தியா, சீனா போன்ற ஆசிய நாடுகளில் 20 ஆம நூற்றாண்டில் தொழிற்புரட்சி தொடங்கியது. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் அனேகமாக எல்லா உலக நாடுகளிலும் தொழிற்சாலை முறை ஏற்பட்டது.

18 ஆம் நூற்றாண்டின் இடைக் காலம் வரை மக்களின் வீடுகளிலோ, அல்லது பணிப்பட்டறைகளிலோ (work shops) தன் தேவை நிறைவுக் குடும்ப (அ) கிராம முறையில் பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டன. நாகரிகம் வளர்ந்து பொருளாதாரச் செயல் விரிவடையவே, தன் தேவை நிறைவு என்ற நிலை மறைந்தது. பின்னர் பல திறப்பட்ட கம்மியர்கள் தலையெடுத்துச் சந்தைக்காகப் பொருள்களை உற்பத்தி செய்யும் முறை தோன்றியது. ஆனால் பிரிட்டனுடைய சரக்குகளுக்கு வெளிநாடுகளில் தேவை ஏற்பட்டதும் சங்கமுறை முறிந்தது. தேவைப் பெருக்கத்தை ஈடுகட்ட உற்பத்தியின் வேகத்தை பெருக்கக் கூடிய வழிவகைகள் நாடப்பட்டன. பெரிய, பெரிய தொழிற்சாலைகள் பிரிட்டனில் பல்வேறு இடங்களில் ஏற்பட்டு வளர்ச்சி அடைந்தமைக்கான காரணங்களை அடுத்த இதழில் காண்போம்.


## வள்ளுவர் குரல்...


### திருக்குறளில் நேரடியாகவும் குறிப்பாகவும் குறிப்பிட்டுள்ள குற்றங்கள்:



1. தாய், தந்தை, ஆசிரியரை மதிக்காமலிருத்தல்.
2. வேளாண்மைத் தொழிலை இழிவு செய்தல்.
3. கல்வியைத் தடைசெய்தல்.
4. எந்த வேலையுமின்றி சோம்பேறியாய் இருத்தல்.
5. அறிவுள்ளவர்களைப் புறக்கணித்தல்.
6. நடுநிலை தவறுதல்.
7. யார் எதைச்சொன்னாலும் என்னவென்று யோசிக்காமல் அதனைப் பின்பற்றுதல். எதற்கும் தேவையில்லாத காரணங்களைச் சொல்லுதல்.
8. முன்னோர்கள் சொன்னார்கள் என்று கூறி பொருட்களை வீணடித்தல்.
9. வறியவர்களைத் துன்புறுத்துதல்.
10. உயிர்க் கொலை செய்தல்.
11. பொய் சொல்லுதல்.
12. அறமான செயல்களுக்கு தடையாக இருத்தல். (இங்கு பொய் சொல்வதில் தவறில்லை என்கிறார்)
13. திருடுதல்.
14. புறம் சொல்லுதல்.
15. இல்லாதவற்றை இருப்பது போல் இட்டுக்கட்டிக் காணபித்தல்.
16. மனிதருக்குள் பேதம் பார்த்தல்.
17. உழைக்காமல் உண்ணுதல்.
18. தரமற்றவை என அறிந்தும் எதிர்ப்புக் காட்டாமல் வாங்குதல்/கொடுத்தல்.
19. உடனிருப்போர் பட்டினியாய் இருக்க நாம் சாப்பிடுதல்.
20. கேள்வி கேட்காமல் இருத்தல்.
21. கடவுள் செய்வான் என மூடத் தனமாக நம்பி எதுவும் செய்யாமல் இருத்தல்.
22. அறிவுள்ளோர் நட்பைப் புறக் கணித்தல்.
23. தனது கடமையைச் செய்யாமலிருத்தல்.
24. பிறன்மனை நோக்குதல்.
25. குழந்தைகளுக்கு மூடத்தனத்தைப் புகட்டுதல்.

## மண்ணு... சேறு... ஓவியம் பாரு!





வாட்டர் கலர், எம்போசிங், ஆயில் ஓவியம் என்றெல்லாம் கேள்விப்பட்டிருப்பீர்கள் வரைந்தும் பார்த்திருப்பீர்கள். மணலை வைத்து ஓவியம் வரைய முடியுமா? முடியும் என்று சாதித்துக் காட்டி, பார்த்தோர் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளார் ஜப்பான் நாட்டின் டோக்கியோ நகரில் பிறந்த யுசுகே அசய் என்னும் 33 வயது இளைஞர்.



யுசுகே அசய்

# இழந்த விடயங்களைப் பற்றி பேசாது இழப்பை தடுக்க முன்வரவேண்டும்

**- உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்க தலைவர் தெரிவிப்பு -**

நாம் வடபகுதியில் பல்வேறு விடயங்களை இன்னும் இழந்து கொண்டிருக்கின்றோம். இழந்து கொண்டிருப்பதை தடுக்க முடியவில்லை. அது மட்டுமன்றி இழந்த விடயங்களைப் பற்றியே பேசிக் கொண்டிருக்கின்றோம். என வட மாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கத்தின் தலைவர் பு.தர்மகுமாரன் தெரிவித்தார்.

உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியசங்கத்தினரால் நடாத்தப்பட்ட உதைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் பரிசளிப்பு விழா அண்மையில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்ட தலைவர்.ப.தர்மகுமாரன் மேலும் தெரிவிக்கையில்,

நாம் எதை இழந்தோமோ அதனைப்பற்றியே தொடர்ந்து பேசியவண்ணம் இருக்கின்றோம். இப்பொழுது இழந்து கொண்டிருப்பதைத் தடுக்க முடியாது தடுமாறுகின்றோம்.

மேலும் நாம் எதிர்காலத்தில் மிகவும் பின் தங்கிய பாடசாலைகளில் கற்கும் மாணவர்களின் விளையாட்டினை மேம்படுத்தும் நோக்கில் காலணிகள், உபகரணங்கள், விளையாட்டு உடைகள் வழங்குவதனை நோக்கமாக கொண்டே இப் போட்டிகளை நடாத்தி வருகின்றோம்.

இவ்வாறு உதைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் மூலம் கிடைக்கும் நிதி முழுவதும் விளையாட்டு துறையின் வளர்ச்சி - அபிவிருத்திக்காகவே பயன்படுத்தவுள்ளோம்.

இன்று உலகில் கல்வி, பொருளாதாரம், கலை, கலாசாரம் போன்ற நிகழ்ச்சிகளின் உயர்ச்சிக்கு பதிலாக வீழ்ச்சி நிலைப்போக்கே அதிகமாகவுள்ளது.

இவற்றை விட கொலை, கொள்ளை, வன்புணர்வு, என வன்முறைகள் நீண்டு கொண்டே செல்கின்றன.

எனவே கல்வியோடு இணைந்த விளையாட்டுக்கு முக்கியத்துவம் அளிப்பதன் ஊடாக சிறந்த மாணவ சமுதாயத்தை உருவாக்கலாம் என்றா. (92)

# காந்தி ஜெயந்தி தின கட்டுரைப்போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை காந்தி சேவா சங்கம் மகாத்மாகாந்தியடிகளின் 145ஆவது ஜெயந்தி தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்கள் மத்தியில் நாடளாவியரீதியில் நடாத்திய கட்டுரைப்போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

**ஆரம்பபிரிவு:-**

ச.அம்பிகை தரம் - 05 (யா/புனித ஜோன் பொஸ்கோவித்தியாலயம்), ஓம்ஷியாம் சங்கர் ஜீவானந்தம் தரம் - 04 (சென்./ஜோண்ஸ் கல்லூரி), சு.ஹரிபிரசாத் தரம் - 05 (யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை)

**கனிஷ்ட பிரிவு:-**

அ.அஷாரிஹா ( யா/வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை), இ.மிதுசன் தரம் - 08 (கிளி/புதுமுறிப்பு விக்கினேஸ்வரா வித்தியாலயம்), (அ.ஒனிசன் அன்ரனி (இளவாலை/கென்றியரசர் கல்லூரி)

**சிரேஷ்ட பிரிவு:-**

க.கனிஸ்ரன் தரம் - 11 , பி.பகிரதன் தரம் - மொ.கனிஸ்ரன் கிறிஸ்ரி தரம் - 11 (கிளி/இந்துக்கல்லூரி,கிளிநொச்சி)

**அதி சிரேஷ்ட பிரிவு**

தே.காயத்திரி தரம் - 13 (சுழிபுரம்/விக்ரோறியாக்கல்லூரி), செ.கிரிசாந்தி தரம் - 13 சி.நிவேதா தரம் - 13 (கிளி/இந்துக்கல்லூரி, கிளிநொச்சி),

# கலந்துரையாடல்


(வரணி)

வரணி வடக்கு ஜே/339 கிராமஅலுவலர் பிரிவிற்குட்பட்ட பகுதியில் வனவிலங்குகள் கட்டுப்பாட்டுக் கட்டளைச் சட்டத்தின் கீழ் "குரங்கு பிடித்தல்" தொடர்பான ஆரம்பகட்டக் கலந்துரை யாடல் ஒன்று விவசாயத்திணைக்களத்தினால் நடாத்துவதற்கு தீர்மானித்துள்ளது.

இக் கலந்துரையாடல் சிமிழ் கண்ணகைபுர பொதுமண்டபத்தில், இன்று செவ்வாய்க்கிழமை, முற்பகல் 10 மணிக்கு நடை பெறவுள்ளது.

இந்தக்கலந்துரையாடலில் வீடுகள், தோட்டங்களில் அழிவுகளை ஏற்படுத்தும் குரங்குகளைக் கட்டுப்படுத்துதல் தொடர்பாக கலந்துரையாடப்படும். எனவே இப் பிரிவிலுள்ள பொதுமக்கள், விவசாயிகள், அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கிராமஅலுவலர் அ.பிரதீபன் அறிவித்துள்ளார். (150)

# நவீன வசதிகளுடன் கூடிய கிளி.மாவட்ட செயலகம்



கிளிநொச்சியில் நவீன வசதிகளுடன் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மாவட்ட செயலகம் எதிர் வரும் 12 ஆம் திகதி திறந்து வைக்கப்பட வுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் 12 ஆம் திகதி ஜனாதிபதியின் வடக்கிற்கான 3 நாள் விஜயத்தின் போதே இத் திறப்பு விழா இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த புதிய மாவட்ட செயலகம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் 630 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளதுடன் வட மாகாணத்தில் உள்ள ஏனைய மாவட்ட செயலகங்களை விடவும் நவீன வசதிகளுடன் புதிய வடி வமைப்பில் அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதுபோன்ற கட்டடம் யாழ்ப்பாணத்திலோ கொழும்பிலோ அமைக்கப்படவில்லை எனவும் இந்தக் கட்டடத்துக்கான அடிக்கல் கடந்த 11.03.2012 இல் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரால் நாட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி.85)

# பதிவிருக்கப் பெட்டகம்

அந நேரம் 28 வயதான ஒரு பத்திரிகையாளனான நான், ஒரு நாவலை வெளியிட்டிருந்ததோடு கொலம்பியாவில் ஒரு இலக்கியப் பரிசையும் பெற்றிருந்தேன். இரண்டு வடஅமெரிக்க நாவலாசிரியர்கள்தான் அப்போது என்னுடைய ஆசான் கள். அவர்களுக்கிடையில் பொதுப் பண்புகள் மிகக் குறைவு.

அச்சமயம் வரை அவர்கள் வெளியிட்டிருந்த எல்லாவற்றையும் அப்போது நான் வாசித்திருந்தேன். ஆனால் அது நிறைவான வாசிப்பு அல்ல, மாறாக எதிர்மறையான, பரஸ்பரம் இருவரின் பிரத்யேக இலக்கியத் தொழில் திறனைப் புரிந்துகொள்ளும் வகையான ஒரு வகை வாசிப்பே.

அவற்றில் ஒருவர் வில்லியம் ஃபோக்னர். என் கண்களை ஒருபோதும் நிலைத்திருக்க விடாதவர். மற்றொருவர் ஒரு சிறிய மனிதர். காளைச் சண்டை வீரர். எர்னெஸ்ட் ஷெமிங்வே.

யார் சொன்னார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. நாவலாசிரியர்கள் பிறருடைய நாவல்களைப் படிப்பதற்குக் காரணம் பிறர் அதை எப்படி எழுதியுள்ளார்கள் என்று அறிந்து கொள்வதற்குத்தான். நானும் அதை மெய்யன்றே விசுவாசிக்கிறேன். தாள்களின் மேற்பரப்பில் வெளிப்படும் இரகசியங்களால் நாங்கள் திருப்தி அடைவதில்லை. புத்தகங்களைப் புரட்டி அதன் மையங்களைக் கண்டுபிடிக்க முயல்கிறோம்.

ஒருவகையில் அதை விளக்குவது கடினம். நாங்கள் புத்தகத்தின் முக்கிய பகுதிகளைத் தவிர்த்து பிறவற்றை உடைத்துவிடுவோம். அதன் பிரத்தியேகக் கடிகார வேலைகளை, புதிர்களை அறிந்துகொண்டு பிறகு அதைப் பழைய ஸ்திதிக்கு மாற்றி வைத்துவிடுவோம்.

ஃபோக்னரின் புத்தகங்களில் இம்முயற்சி சோர்வு ஊட்டக் கூடியது. காரணம் அவருடைய எழுத்து ஓர் ஒழுங்கமைவிற்கு உட்பட்டதல்ல. அவருடைய புத்தகம் என்னும் பிரபஞ்சத்தில் கண் மூடியபடி பளிங்குக் கடையில் வழி தவறிய ஆட்டு மந்தையைப் போல் நாம் நடக்க வேண்டும். அவருடைய ஒரு பக்கத்தைப் பிரித்து ஆராய்ந்தால் கம்பிச சுருள்களும் திருகாணிகளும் மட்டுமே கிடைக்கும். அவற்றை ஒருபோதும் உங்களால் பழைய ஸ்திதிக்கு மாற்ற முடியாது.

ஆனால் ஷெமிங்வே இதற்கு நேர் எதிர். குறைந்த ஆர்வத்தோடு, மட்டிய உணர்வோடும் மெல்லிய பித்தோடும், அதே வேளையில் மிகச் சிறப்பான கட்டுக்கோப்புடனும் சரக்கு வண்டிகளில் திருகாணிகள் வெளிப்படையாகத் தெரிவது போல் எழுதக்கூடியவர்.

ஒருவேளை இந்தக் காரணங்களால்தான் ஃபோக்னர என்னும் படைப்பாளி என் ஆத்மாவோடும், ஷெமிங்வே என்னும படைப்பாளி – அவருடைய புத்தகங்களுக்காக அல்ல, எழுத துக் கலையின் தொழில்திறன் சம்பந்தமான அவருடைய அபரிமிதமான ஞானத்திற்காக – என் தொழில் திறனோடும தொடர்புடையவராக இருக்கிறார்.

ஷெமிங்வேயின் எல்லாப் படைப்புகளிலுமே அவரது தீவிரம் சிறப்பாக வெளிப்படுகிறது. அவருடைய கதைகளைப் பற்றிய விஷயம் என்னவென்றால் அவை ஏதோவொன்றை மறைத்து வைத்திருக்கிறது என்கிற தோற் றத்தை ஏற்படுத்தும் வல்லமை கொண்டவை. அதுவே அதன் மாயமும் அழகும்.

என்னைப் பொறுத்தவரை எழுதுவது பற்றி ஷெமிங்வே சொல்லியிருக்கும் வார்த்தைகளே மாபெரும் கண்டுபிடிப்புகள். அந்த வேலையின் முக்கிய சிரமங்களில் ஒன்றான, வார்த்தைகளைச் சிறப்பாக ஒழுங்கமைப்பது பற்றி ஷெமிங்வே சொல்கிறார்:

*"எழுதுவது கடினமாகும்போது ஒருவர் அவருடைய புத்தகங்களையே மறுமுறை வாசிப்பது நல்லது. ஏனெனில், அது என்றுமே கடினமாகத்தான் இருந்தது என்பதை அவர் நினைவூட்டிக்கொள்ள."*

*"ஒருவரால் எந்த இடத்திலும் எழுத முடியும். எதுவரை எனில் பார்வையாளர்களோ தொலைபேசியோ இல்லாத வரையில்."*

*"பத்திரிகை எழுத்து ஓர் எழுத்தாளனை அழித்துவிடும் என்பது உண்மையல்ல. அவ்வாறு பலமுறை சொல்லப்பட்ட போதும் உண்மை அதற்கு நேர்மாறானது. எழுதுவது ஒன்றே வாழ்க்கையின் பிரதான நோக்கமாகவும் அளப்பரிய சந்தோசமுமாகவும் மாறும்போது, ஒருவர் அதைக் கைவிட்டாலும் அது அவர்களைப் பின்தொடரும். மரணத்தால் மட்டுமே அதற்கு ஒரு முடிவு கட்ட முடியும்."*

எனக்குத் தெரிந்து எழுதுவது பற்றி இதைவிடச் சிறப்பாக யாதொரு அறிவுரையும் சொல்லப்பட்டதில்லை. இது கூடுதலோ குறைவோ அல்ல, எழுத்தாளர்களின் மாபெரும் பயமான, அதிகாலை வேதனையான வெற்றுத்தாளை எதிர்கொள்வதற்கு இதுவே இறுதியான வழிமுறை.

**– கப்ரியல் கார்ஸியா மார்க்வெஸ்**

# தங்கத்துடன் கைதான பணியாளருக்கு 2 இலட்சம் ரூபா அபராதம்



(கொழும்பு)

சட்டவிரோதமாக கொண்டு. வரப்பட்ட தங்கத்துடன் கைது செய்யப்பட்ட விமானப் பணியாளருக்கு இரண்டு இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த நபருக்கு உதவியவருக்கு ஒரு இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக சுங்க ஊடகப் பேச்சாளர் லெஸ்லி காமினி குறிப்பிட்டார்.

இவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட தங்கம் அரசுடமையாக்கப்பட்டுள்ளது சட்ட விரோதமாக தங்க நகைகளை கொண்டுவர முற்பட்ட குறித்த சந்தேகநபர் கட்டுநாயக்க விமான நிலைய .சுங்கப்பிரிவினரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டிருந்தார்

கைப்பற்றப்பட்ட தங்கம் ஒன்றரை கோடி ரூபாவுக்கும் மேற்பட்ட பெறுதியுடையதென சுங்க ஊடகப்பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை. சட்டவிரோதமாக இலங்கையில் இருந்து எடுத்துச் செல்லப்படவிருந்த 43 இலட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியுடைய வெளிநாட்டு நாணயத்தாள்களும் அரசுடமையாக் கப்பட்டுள்ளது.

# பக்கச்சார்பாக செயற்படாத நீதவான்கள் புறக்கணிப்பு

## சுட்டிக்காட்டுகிறது சட்டத்தரணிகள் சங்கம்

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு பக்கச் சார்பாக செயற்படாத நீதவான்கள் ஓரங்கட்டப்படுவதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின்தலைவர் உபுல் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி சுயாதீனமான முறையில் கடமையாற்றிய சட்டத்தரணிகள் ஒடுக்கப்படுவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

குறிப்பாக இலங்கையின் 43ஆம் பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயக்கவை பணி நீக்கம் செய்த, நாடாளுமன்றத் தெரிவுகுழுவின் உத்தரவினை ரத்து செய்த, நீதவான்களுக்கு பதவி உயர்வுகள் வழங்கப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேன்முறையீட்டு நீதவான்களான அமரர் ஸ்ரீஸ்கந்தராஜா மற்றும் அனில் குணரட்ன ஆகியோர் இவ்வாறு ஓரங்கட்டப்பட்டதாக தெரிவித்துள்ளார். இலங்கை சட்டத்தரணிகள் சங்க நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.




பக்கச்சார்பின்றி செயற்படும் நீதவான்கள் மீது அரசியல் அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன என அவர் தெரிவித்துள்ளார்.

பக்கச்சார்பின்றி நியாயமாக செயற்படும் நீதவான்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகளை தடுக்க எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் கோரியுள்ளார்.

# வடக்கு விவசாய அமைச்சின் கீழ் தாவர உற்பத்தியாளர் சங்கம் உதயம்



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் பயன்தருமரங்கள் மற்றும் அழகுத் தாவரங்களின் உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்கில் வடமாகாண தாவர உற்பத்தியாளர்கள் சங்கம் உருவாக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தின் மரநடுகை மாதமாகக் கார்த்திகை மாதம் வடமாகாணசபையால் பிரகடனப்படுத்தப்பட்டதன் பின்னர், அதற்குரிய மரங்களைக் கொள்வனவு செய்வது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை விவசாய அமைச்சரின் அலுவலகத்தில் நடைபெற்றது.

வடக்கு விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனுக்கும் பயன்தரும் மரங்கள் மற்றும் அலங்காரத் தாவரங்களை உற்பத்தி செய்பவர்களுக்கும் விற்பனை செய்பவர்களுக்கும் இடையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலின்போதே வடமாகாண தாவர உற்பத்தியாளர்கள் சங்கம் உருவாக்கப்பட்டுள்ளது. கலந்துரையாடலில் வடக்கு மாகாணத்தில் மரக்கன்றுளை உற்பத்தி செய்யும் பண்ணையாளர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டன.

இதன்போது தரமான மரக்கன்றுகளை உற்பத்தி செய்வதற்கும் அவற்றைச் சந்தைப்படுத்துவதற்கும் பண்ணையாளர்களுக்கிடையே போதிய ஒருங்கிணைப்பு இல்லாதமை பெரும் குறைபாடாக இருப்பதாக பலரும் சுட்டிக்காட்டியிருந்தனர். இதன் அடிப்படையிலேயே, வடமாகாண தாவர உற்பத்தியாளர்கள் சங்கம் உருவாக்கப்பட்டுள்ளது.

இச்சங்கம் தொடர்பான பூர்வாங்க நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக, வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் 9 பண்ணையாளர்கள் கொண்ட குழு உருவாக்கப்பட்டுள்ளது. இக்குழு சங்கத்தின் யாப்பு விதிகளைத் தயாரித்ததன் பின்னர் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோர் தெரிவு செய்யப்படுவார்கள் என இக்கலந்துரையாடலில் முடிவாகியுள்ளது.

மேலும், . இக்கலந்துரையாடலின்போது வடக்குக்குத் தேவையான மரக்கன்றுகளை வடக்கின் பண்ணையாளர் களிடமிருந்து கொள்வனவு செய்வதற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டுமெனவும், ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட சில நாள்களில் நிரந்தரமான ஓர் இடத்தில் சகல பண்ணையாளர்களும் தங்கள் உற்பத்திகளை விற்பனை செய்யவும் காட்சிப்படுத்தவும் விற்பனைக் கண்காட்சியினை நடாத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலில் விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனோடு மாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார், பிரதி விவசாயப் பணிப்பாளர் கி. ஸ்ரீபாலசுந்தரம் ஆகியோரும், ஐந்து மாவட்டங்களிலிருந்தும் அதிக எண்ணிக்கையான பண்ணையாளர்களும் பங்கேற்றிருந்தார்கள்.

# நிபந்தனை விதிக்கும் ஹெல உறுமய

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு ஜாதிக ஹெல உறுமய நிபந்தனைகளை முன்வைக்கவுள்ளதாக அந்தக் கட்சியின் பிரதி பொதுச் செயலாளரான மேல் மாகாண அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

சிங்களவர்களின் கோரிக்கைகள் எவை என்பது அந்த நிபந்தனைகளில் வெளியிடப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரை தமது நிபந்தனைகளுக்கு இணங்க வைக்க ஜனாதிபதி ஹெல உறுமயவின் வாக்கு வங்கியை பலப்படுத்த வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார். வாக்கு வங்கியை அதிகரிப்பதற்காக தனித்தனியாக இருக்கும் தரப்புகளை ஒன்றிணைக்க நடவடிக்கை எடுக்கப்படும்

எதிர்கால சவால்களை எதிர்கொள்ள ஜாதிக ஹெல உறுமயவின் சிங்கள பௌத்த வாக்கு வங்கியை 10 இலட்சமாக அதிகரிக்க வேண்டும் எனவும் உதய கம்மன்பில குறிப்பிட்டுள்ளார்.

# குளவிக் கூடுகளை அழிக்க விசேட நடவடிக்கை



ஹட்டன் டிக்கோயா, நோர்வூட் மற்றும் பொகவந்தலாவ பகுதிகளில் உள்ள தேயிலை தோட்ட பகுதிகளில் அமைந்துள்ள குளவிக் கூடுகளை அழிப்பதற்கு விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வனவிலங்கு திணைக்களம் மற்றும் மாவட்ட செயலாளர் காரியாலயமும் இணைந்து இந்த நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளதாக நுவரெலியா மாவட்ட அரசாங்க அதிபர் டி பி ஜி குமாரசிறி தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் இந்த பகுதியில் குளவிக் கொட்டுக்கு இலக்காகி 4 பேர் பலியாகினர். அத்துடன் பலர் காயமடைந்த நிலையில் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த பகுதிகளில் அதிகளவான மரங்கள் வெட்டப்பட்டு வரும் நிலையில், குளவிகள் தேயிலை மரங்களில் தமது கூடுகளை அமைத்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

# நுவரெலியாவில் கடும்காற்று வீடுகள் சேதம்; மக்கள் இடம்பெயர்வு

(கொழும்பு)

நுவரெலியாவில் வீசிய பலத்த காற்றினால் ஐந்து குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

நுவரெலியா லவர்ஸ்லிப் தோட்டத்தில் வீசிய கடும் காற்றினால் 12 வீடுகள் நேற்று முன்தினம் மாலை சேதமடைந்திருந்தன இதனால் இடம்பெயர்ந்த ஐந்து குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு நிவாரணப் பொருட்களை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக மாவட்ட செயலாளர் டி.பி.ஜி குமாரசிறி தெரிவித்துள்ளார்.

.இதேவேளை மொனராகலை, தொடம்ப-கஹவெல, நுக-கஹ-கிவுல பகுதிகளை நேற்று முன்தினம் பிற்பகல் ஊடறுத்து வீசிய பலத்த காற்றினால் 2 வீடுகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது.





நிலவும் அதிக மழையுடனான வானிலையால் கேகாலை, கண்டி, மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டிருந்த மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது

குறித்த மாவட்டங்களில் அதிக மழை பெய்யும் போது அங்குள்ள மக்கள் மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டுமென இடர் முகாமைத்துவ நிலையம் குறிப்பிடுகின்றது.

# கோரிக்கைகளை நிறைவேற்றாவிடின் தொழிற்சங்க நடவடிக்கை எடுக்கப்படும்

## இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு

கோரிக்கைகள் நிறைவேற்றாவிடின் கடுமையான தொழிற்சங்க நடவடிக்கை எடுக்கப் போவதாக இலங்கை ஆசிரியர் சங்கம் அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் ஆறாம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள உலக ஆசிரியர் தினத்திற்கு முன்னதாக கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

கோரிக்கைகள் உரிய விதத்தில் நிறைவேற்றப்படாவிடின் கடுமையான தொழிற்சங்க நடவடிக்கைகள் எடுக்க நேரிடும்.

கல்விச் சேவையில் இடம்பெறும் பழிவாங்கல் நடவடிக்கைகளை அரசாங்கம் உடனடியாக நிறுத்திக்கொள்ள வேண்டும். மலர்ச்செண்டு உள்ளிட்ட பரிசுப் பொருட்களினால் ஆசிரியர்களை கௌரவப்படுத்துவதனை விடவும், ஆசிரியர்களும் அதிபர்களும் முதுகெலும்பை நிமிர்த்தி நிற்கக் கூடிய ஓர் முறைமை உருவாக்கபபட வேண்டும்.

கல்வி அபிவிருத்தி என்று எதுவும் நடைபெறுவதில்லை. சம்பள உயர்வு, சம்பள முரண்பாடு, ஆசிரியர் அதிபர் இடமாற்றங்கள் போன்றன குறித்து அரசாங்கம் கவனம் செலுத்துவதில்லை.அரசாங்கம் பாடசாலைகளை அபிவிருத்தி செய்ய ஆர்வம காட்டுவதில்லை என ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்,

அண்மையில் கொழும்பு தேசிய நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

# யாழ்.பொஸ்கோவில் 140 மாணவர்கள் சித்தி

நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ்.புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம் வரலாற்றுச்சாதனை படைத்துள்ளது.

இப்பாடசாலையில் 230 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றி 140 மாணவர்கள் சித்திபெற்றுள்ளதுடன் 229 மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்று மாவட்டத்தில் சாதனை படைத்துள்ளனர்.

# க.பொ.த. (சா/த) மாணவர்களுக்கான தமிழ் இலக்கணம் - புணரியல்

**புணர்ச்சி பற்றிய விளக்கம்**

இலக்கணத்தில் புணர்ச்சி என்பது சொற்கள் அல்லது சொல்லின் உறுப்புகள் பொருள்தரும் வகையில் ஒன்றுடன் ஒன்று இணைந்து வருவதைக் குறிக்கும்.

நாங்கள் மரத்தை வெட்டினோம் ஆகிய மூன்று சொற்களும் ஒன்றை அடுத்து மற்றது இணைந்து வந்து பொருள்தரும் வாக்கியமாகின்றன.நாங்கள் என்ற சொல்லில் நாம், கள் ஆகிய இரண்டு உறுப்புக்கள் ஒன்றோடு ஒன்று இணைந்து வந்து பொருள் தருகின்றன. மரத்தை என்ற சொல்லின் மரம், அத்து; ஐ ஆகிய மூன்று உறுப்புக்கள் ஒன்றோடு ஒன்று இணைந்து வந்து பொருள் தருகின்றன வெட்டினோம் என்ற சொல்லில், வெட்டு, இன், ஓம், ஆகிய மூன்று உறுப்புக்கள் இணைந்து வந்து பொருள் தருகின்றன.இதனைப் பின்வருமாறு விளக்கலாம்:-

நாம் + கள் + மரம் + அத்து + ஐ + வெட்டு + இன் + ஓம்

நாங்கள் + மரத்தை + வெட்டினோம்

நாங்கள் மரத்தை வெட்டினோம்

இவ்வாற சொல்லின் உறுப்புக்கள் அல்லது சொற்கள் பொருள் தரும் வகையில் ஒன்றோடு ஒன்று இணைந்து வருவதே புணர்ச்சி எனப்படும்.

**புணர்ச்சி வகைகள்**

**அகப்புணர்ச்ச**

ஒரு சொல்லின் உறுப்புக்கள் சேர்ந்து ஒரு சொல்லாக அமைவது அகப்புணர்ச்சி எனப்படும்.

நாம் + கள் → நாங்கள்    மரம் + அத்து + ஐ → மரத்தை
வெட்டு + இன் + ஓம் → வெட்டினோம்

இவ்வாறு இரண்டு அல்லது பல சொல் உறுப்புக்கள் சேர்ந்து ஒரு சொல்லாக அமைவது அகப்புணர்ச்சியாகும். நாங்கள் என்ற சொல்லில் நாம் கள் என்னும் இரண்டு உறுப்புகள் உள்ளன. மரத்தை என்ற சொல்லில் மரம் அத்து ஐ ஆகி மூன்று உறுப்புக்கள் உள்ளன. அவ்வாறே, வெட்டினோம் என்ற சொல்லிலும் வெட்டு இன் ஓம் ஆகிய மூன்று உறுப்புகள் உள்ளன.

**புறப்புணர்ச்சி**

இரண்டு அல்லது பல சொற்கள் ஒன்றோடு ஒன்று இணைந்து சொற்தொடர் ளாகவோ, வாக்கியமாகவோ வருவது புறப்புணர்ச்சி எனப்படும்.

**நாங்கள் மரத்தை வெட்டினோம்    அவன் ஓடிப் போனான்**
**நான் அந்தப் பக்கம் சென்றேன்    எங்கள் ஊரில் ஓர் அறிஞர் இருக்கிறார்.**

மேல் உள்ள 4 வாக்கியங்களிலும் சொற்கள் அடுத்து நிற்கின்றன சொற்களுக்கு இடையே உள்ள இடைவெளி ஒரு சொல்லை பிறிதொரு சொல்லில் இருந்து பிரித்துக் காட்டப்பயன்படுகின்றது.

சொற்களுக்கு இடையில் இடைவெளிவிட்டு எழுதும் வழக்கம் பழங்காலத்தில் இருக்கவில்லை சொல் உறுப்புகளை ஒன்றோடு ஒன்று நெருக்கமாக இணைப்பது போல் செூற்களையும் நெருக்கமாக இணைத்து புணர்ச்சி விகாரங்களுடன் எழுதினார்கள். அவ்வாறு எழுதும் போது தனித்தனிச் சொற்களின் வடிவம் அடையாளம் காண முடியாதவாறு மாற்றம் அடையும். உதாரணமாக மேலுள்ள நாலாவது வாக்கியத்தை அவ்வாறு எழுதினால் அது பின்வருமாறு அமையும்:

**எங்களூரிலோரறிஞரிருக்கிறார்.**

இந்த வாக்கியத்தை எளிதாக நாம் புரிந்துகொள்ள முடியாது. இதனைப் புணர்சசி விகாரங்களுடன் சொற்களுக்கு இடையில் இடைவெளிவிட்டு வேறு ஒரு விதமாக முடிந்த அளவு புணர்ச்சி விகாரங்கள் இன்றி, பிரித்து எழுதுவதே தற்கால வழக்கு.

அகப்புணர்ச்சியில் சொல் உறுப்புகளுக்கு இடையில் இடைவெளி இல்லாமல் புணர்ச்சி விகாரங்களுடன் அவற்றை இணைத்து எழுதுகின்றோம். அவற்றை இடைவெளிவிட்டுப் பிரித்து எழுதினால் நமக்கு எளிதில் புரியாது. உதாரணமாக மேல் தரப்பட்ட முதலாவது வாக்கியத்தை அவ்வாறு எழுதினால் அது பின்வருமாறு அமையும்: ◆ **நாம் கள் மரம் அத்து ஐ வெட்டு இன் ஓம்** இந்த வாக்கியத்தை நாம் எளிதாகப் புரிந்துகொள்ளமுடியாது.

நாங்கள் மரத்தை வெட்டினோம் என்று சொல் உறுப்புகளை இடைவெளி இன்றி புணர்ச்சி விகாரங்களுடன் இணைத்து எழுதும் பொழுதே எளிதில் புரிகின்றது அவ்வகையில்,

◆ அகப்புணர்ச்சியில் சொல் உறுப்புகள் இடைவெளி இன்றி புணர்ச்சி விகாரங்கள் இன்றி பிரித்து எழுதப்படுகின்றன.

◆ புறப்புணர்ச்சியில அவசியமான இடத்து மட்டும் புணர்ச்சி விகாரங்கள் பேணப்படும் புறப்புணர்ச்சியில் புணர்ச்சி விகாரங்கள் எங்கு அவசியம், எங்கு அவசியமில்லை என்பது பின்னர் விளக்கப்படும்.

**பயிற்சி**

(அ) பின்வரும் சொல் உறுப்புக்களை புணர்த்தி எழுதுக
பல் + கள் + ஐ +    படி + கிறு + ஆர்    சொல் + கள் + ஆள்
காண் + ட் + ஏன்
வா + கிறு + ஏன்    போ + ன் + ஆன்    தா + ந்த் +ஆன்    நான் +ஐ

(ஆ) பின்வரும் வாக்கியங்களில் உள்ள சொற்களைத் தற்கால வழக்குப்படி பிரித்து எழுதுக
**எனக் கெல்லோரு முதலி செய்கிறார்கள்    படித்த விளைஞர் மன்றம்**
**வானமும் கடலுஞ் சந்திக்கு மிடம்    அரிசி யங்கில்லை**

**இயல்புப் புணர்ச்சி**

புணர்ச்சியில் குறைந்த பட்சம் இரண்டு சொற்கள் அல்லது சொல் உறுப்புகள் சம்பந்தப்படுகின்றன.

மாடு + கள் → மாடுகள்    கடல் + நீர் → கடல்நீர்

முதல் உதாரணத்தில் மாடு என்ற சொல்லும் - கள் என்ற பன்மை விதியும் சேர்ந்து மாடுகள் எனப் புணர்ந்துள்ளன. இரண்டாவது உதாரணத்தில் கடல், நீர் ஆகிய இரண்டு சொற்கள் சேர்ந்து கடல்நீர் எனப் புணர்ந்துள்ளன. இச் சொற்களில் முதலில் நிற்கும் மாடு, கடல்நீர் எனப் புணர்ந்துள்ளன. இச்சொற்களில் முதலில் நிற்கும் மாடு, கடல் ஆகியவற்றை **நிலைமொழி** எனறும் அவற்றுடன் வந்து புணரும் கள், நீர் ஆகியவற்றை **வருமொழி** என்றும் சொல்வர்.

மேலே தரப்பட்ட உதாரணங்களில் நிலை மொழியும் வருமொழியும் புணரும்போது அவற்றின் வடிவங்களில் எவவித மாற்றமும் ஏற்படவில்லை இவ்வாறு தம்வடிவங்களில் எவ்வித மாற்றமும் இன்றி சொற்கள் அல்லது சொல் உறுப்புக்கள் புணர்வதை இயல்புப் புணர்ச்சி என்பர். பின்வரும் உதாரணங்களைப் பார்ப்போம்:

அவர் + ஐ → அவரை,  அவர் + ஆல்  அவரால், அவர் + உக்கு அவருக்கு இங்கு நிலைமொழி இறுதியில் உள்ள ர கர மெய்யுடன் வருமொழி முதலில் உள்ள ஐ, ஆ, உ ஆகிய உயிர்கள் சேர்ந்து முறையே *ரை, ரா,* ரு என உயிர்மெய் எழுத்துக்களாக மாறி உள்ளன. இந்த மாற்றத்தைத் தவிர் நிலை மொழியிலோ வருமொழியிலோ உள்ள எழுத்துக்கள் எவையும் கெடவில்லை: புதிதாக எழுத்துக்கள் எவையும் தோன்றவில்லை இருக்கும் ஓர் எழுத்து திரிந்து பிறிதொரு எழுத்தாக மாறவும் இல்லை. நிலைமொழி இறுதி மெய்யும் வருமொழி முதல் உயிரும் மாற்றமின்றி அவ்வாறே இருக்க அவை இரண்டும் இணைந்து ஒரு புதிய வரிவடிவம் வருமொழி முதலில் உள்ள உயிரும் இணைந்து உயிர் மெய் வடிவம் பெறுவதும் இயல்புப் புணர்ச்சியாகும்.

**விகாரப்புணர்ச்சி**

சொற்கள் அல்லது சொல் உறுப்புகள் புணரும்போது நிலைமொழியிலோ வருமொழியிலோ ஏதாவது மாற்றம் ஏற்படின் அது விகாரப் புணர்ச்சி எனப்படும் விகாரம் என்பதற்கு வேறுபாடு, மாற்றம் என்பது பொருள்.பின்வரும் உதாரணங்களை நோக்குக.

மரம் + கள் → மரங்கள்    பூ + கள் → பூக்கள்

முதலாவது உதாரணத்தில் மரம் என்ற நிலைமொழியுடன் **கள்** என்ற வருமொழி புணரும் போது நிலைமொழி இறுதியில் உள்ள ம், ங், ஆகத் திரிந்துள்ளது..

அவ்வகையில் மரம் என்பது மரங் என்ற வடிவம் மாறியுள்ளது. இரண்டாவது உதாரணத்தில் பூ என்ற நிலைமொழியுடன் - **கள்** என்ற வருமொழி புணரும்போது **க்** என்ற ஒரு புதிய எழுத்துத் தோன்றியுள்ளது: அதனால் - **கள்** என்ற வருமொழி புணரும்போது க் என்ற ஒரு புதிய எழுத்துத் தோன்றியுள்ளது. அதனால் - **கள** என்ற வருமொழி - **கள** என்று வடிவம் மாறியுள்ளது.

விகாரப் புணர்ச்சி மூன்று வகைப்படும்.
1. **தோன்றல்**    2. **கெடுதல்**    3. **திரிதல்**

தோன்றல் நிலைமொழியும் வருமொழியும் புணரும்போது இடையில் ஓர் எழுத்துத் தோன்றுதல் விகாரம் எனப்படும்.

| | | | | |
|---|---|---|---|---|
| பூனை +ஐ | → | பூனை +ய் + ஐ | → | பூனையை |
| பலா + இல் | → | பலா +வ் + இல் | → | பலாவில் |
| கல் + ஆல் | → | கல் +ல் +ஆல் | → | கல்லால் |
| ஓடி + போ | → | ஓடி +ப் + போ | → | ஓடிப் போ |
| அந்த + காலம் | → | அந்த+க் +காலம் | → | அந்தக் காலம் |

மேல் உள்ள உதாரணங்களில் நிலைமொழி, வருமொழி ஆகியவற்றுக் கிடையே ய், வ், ப், க், ஆகிய எழுத்துக்கள் புதிதாகத் தோன்றியுள்ளன. இது தோன்றல் விகாரம் எனப்படும்.

நிலைமொழியில் வருமொழியும் புணரும் போது அவற்றில் உள்ள ஏதாவது ஒரு எழுத்து இல்லாமல் போதல் கெடுதல் எனப்படும்.

| | | | |
|---|---|---|---|
| நாக்கு + ஐ | நாக்க் + ஐ | → | நாக்கை |
| கதவு + ஆல் | கதவ் + ஆல் | → | கதவால் |
| இருமு + அல் | இரும் + அல் | → | இருமல் |

மேல் உள்ள உதாரணங்களில் நிலைமொழி இறுதி உகாரம் கெட்டது.

மரம் + வேர் → மரவேர் மனம்+வேதனை →மனவேதனை

மேல் உள்ள உதாரணங்களில் நிலைமொழி இறுதியில் உள்ள மகரம் கெட்டது. இது கெடுதல் விகாரம் எனப்படும்.

**திரிதல்**

நிலைமொழியும் வருமொழியும் புணரும்போது அவற்றில் உள்ள ஓர் எழுத்து பிறிதொரு எழுத்தாக மாறுதல் திரிதல் எனப்படும்.

மரம் + கள் மரங் + கள் → மரங்கள்
கல் + கள் கற் +கள் → கற்கள்
கொள் ட் ஏன் கொண் ட் ஏன் கொண்டான்

மேல் உள்ள உதாரணங்களில் நிலைமொழி இறுதியில உள்ள ம், ல், ள், என்பன முறையே ங், ற் எனத் திரிந்துள்ளன.

வா + ந்த் + ஆன் வ + ந்த் + ஆன் → வந்தான்
சா + த்த் + ஆன் செ + த்த் + ஆன் → செத்தான்

மேல் உள்ள உதாரணங்களில் வா, சா ஆகிய வினைச்சொற்கள் வ, செ, எனத் திரிந்துள்ளன. இது திரிதல் விகாரம் எனப்படும்.

**வேற்றுமைப் புணர்ச்சியும் அல்வழிப் புணர்ச்சியும்**

தமிழ் இலக்கணக்காரர் புணர்ச்சியை வேற்றுமைப் புணர்ச்சி, அல்வழிப் புணர்ச்சி என இரண்டு வகைப்படுத்துவர்.

எழுவாய் வேற்றுமையும், விளி வேற்றுமையும் தவிர்ந்த ஏனைய ஐ, ஆல், கு, இன், அது, கண் முதலிய வேற்றுமை உருப்புகள் வெளிப்பட்டும், மறைந்தும் வர சொற்கள் புணர்வது வேற்றுமைப் புணர்ச்சி எனப்படும். வேற்றுமைப் புணர்ச்சி தவிர்ந்த ஏனைய எல்லாவகைப் புணர்ச்சிகளும் அவ்வழிப் புணர்ச்சி எனப்படும். ஒரேவிதமான சொற்கள் வேற்றுமையில் ஒரு விதமாகவும் அவ்வழியில் வேறுவித மாகவும் புணர்வ்தால் இந்தப் பாகுபாடு அவசியமாகும்.

**உதாரணமாக :** குருவி கூடு, ஆடு குட்டி ஆகியவை பின்வரும் வாங்கியங்களில் இரு வேறுவிதமாகப் புணர்ந்துள்ளமையைக் காணலாம்.

குருவி கூடி கட்டியது ஆடு குட்டி போட்டது
குருவிக்கூடு கீழே விழுந்தது ஆட்டுக்குட்டி துள்ளி விளையாடியது

முதல் இரு வாக்கியங்களிலும் குருவி கூடு, ஆடு குட்டி என்பன இயல் பாகப் புணர்ந்துள்ளன. அடுத்த இரு வாக்கியங்களிலும் அவை விகாரப்பட்டுப் புணர்ந்துள்ளன. முதல் இரு வாக்கியங்களிலும் குருவி, ஆடு ஆகியவை முதலாம் வேற்றுமைப் பொருளில் எழுவாய்ச் சொற்களாகப் புணர்ந்துள்ளன. எழுவாய்ப் பொருளில் சொற்கள் புணர்வது அவ்வழிப் புணர்ச்சியாகும். அடுத்த இரு வாக்கி யங்களிலும் குருவிக்கூடு, ஆட்டுக்குட்டி என்பன குருவியினது கூடு, ஆட்டினது குட்டி என உடைமை வேற்றுமைப் பொருளில் ஒரே சொல்லாகப் புணர்ந்துள்ளன. இது வேற்றுமைப் புணர்ச்சியாகும். வேற்றுமையில் வல்லினம் மிகுந்தும், அல்வழி யில் இயல்பாகவும் புணர்ந்துள்ளன.

**சில சொற்கள் வேற்றுமை உருபு ஏற்கும்போது வடிவம் மாறுகின்றன.**

1) தன்மை, முன்னிலைப் பெயர்கள் இவ்வாறு வடிவம் மாறும்

நான் + ஐ என் + ஐ → என்னை
நாம் + ஐ நம் + ஐ → நம்மை
நாங்கள் + ஐ எங்கள் + ஐ → எங்களை
நீ + ஐ + உன் + ஐ → உன்னை
நீங்கள் + ஐ உங்கள் + ஐ → உங்களை

2) தான், தாம், தாங்கள் ஆகிய படர்க்கைப் பெயர்கள் வேற்றுமை உருபு ஏற்கும்போது வடிவம் மாறும்

தான் + ஐ தன் + ஐ → தன்னை
தாம் + ஐ தம் + ஐ → தம்மை
தாங்கள் + ஐ தங்கள் + ஐ → தங்களை

3) காடு, வீடு, மாடு, பயறு, குருடு, கிணறு போன்ற அமைப்புடைய சொற்கள் வேற்றுமை உருபு ஏற்கும்போது உகரம் கெட்டு ஈற்று மெய் இரட்டிக்கும்.

காடு + ஐ காட்ட் + ஐ → காட்டை
வீடு + உக்கு வீட்ட் + உக்கு → வீட்டுக்கு
ஆடு + ஆல் ஆட்ட் + ஆல் → ஆட்டால்
மாடு + ஐ மாட்ட் + ஐ → மாட்டை
பயறு + ஐ பயற்ற் + ஐ → பயற்றை

4) ஆறு என்ற சொல் 6 என்னும் எண்ணுப் பெயரைக் குறிக்கும்போது இயல்பாகவும் நதியைக் குறிக்கும்போது விகாரப்பட்டும் வேற்றமை உருபு ஏற்கும்.

ஆறு + ஐ → ஆறை → ஆறை இரண்டால் பெருக்கு
ஆறு + உடன் → ஆறுடன் → ஆறுடன் மூன்றைக் கூட்டு
ஆறு + ழு → ஆற்ற்+ ஐ → ஆற்றை ஆற்றைக் கடந்து சென்றேன்
ஆறு + உக்கு → ஆற்ற் + உக்கு → ஆற்றுக்குக் குளிக்கச் சென்றேன்

**உயிர் ஈற்றுப் புணர்ச்சி**

நிலைமொழி ஈற்றெழுத்து உயிராகவும் வருமொழி முதல் எழுத்து உயிர் அல்லது மெய்யாகவும் அமைய் சொற்கள் புணர்வது உயிர் ஈற்றுப் புணர்ச்சி. எனப்படும். இது உயிர் உயிர், உயிர் மெய் என இரு வகையாக அமையும்.

**உயிர் முன் உயிர் புணர்தல்**

நிலைமொழி இறுதியில் உயிரும் வருமொழி முதலில் உயிரும் வந்தால் இடையில ய கரமெய் அல்லது வ கர மெய் தோன்றிப் புணரும். இவ்வாறு தோன்றும் மெய்யை உடம்படுமெய் என்பர்.

**யகர மெய் தோன்றுதல்**

நிலை மொழி இறுதியில் இ, ஈ, ஐ உயிர்களுள் ஏதாவது ஒன்று வந்தால் வருமொழி முதலில் எந்த உயிர் வந்தாலும் ய கர மெய் உடம்படு மெய்யாகத் தோன்றும்.

கிளி + ஐ → கிளி + ய் + ஐ → கிளியை
தீ + ஐ → தீ + ய் + ஐ → தீயை
பனை + ஐ → பனை + ய் + ஐ → பனையை
எலி + ஆல் → எலி ய் ஆல் → எலியால்
ஈ + ஆல் → ஈ + ய் + ஆல் → ஈயால்
பூனை + ஆல் → பூனை + ய் + ஆல் → பூனையால்

மேற்காட்டிய உதாரணங்கள் எல்லாம் அகப்புணர்ச்சியாகும். அகப்புணர்ச்சியில் உடம்படு மெய் கட்டாயம் தோன்றும். ஆனால் புறப்புணர்ச்சியில் உடம்படு மெய் தோன்றுவது கட்டாயமல்ல. புறப்புணர்ச்சியில் உடம்படு மெய் இல்லாமல் பிரித்து எழுதும்போதுதான் பொருள் இலகுவாகப் புரிகின்றது. தற்காலத்தில் இவ்வாறு பிரித்து எழுதுவதே பொது வழக்கு. பின்வரும் உதாரணங்களை நோக்குக.

அரிசியில்லை அரிசி இல்லை
தீயை யணைத்தார்கள் தீயை அணைத்தார்கள்
என்னை யழைத்துள்ளனர் என்னை அழைத்துள்ளனர்
நீ யொருவரை யழைத்துவா நீ ஒருவரை அழைத்துவா

**வகர மெய் தோன்றுதல்**

இ, ஈ, ஐ மூன்றும் தவிர மொழி இறுதியில் வரும் உயிர் எழுத்துக்களுள் ஏதாவது ஒன்று நிலைமொழி இறுதியில் வந்தால், வருமொழி முதலில் எந்த உயிர் வந்தாலும் வகர மெய் உடன்படு மெய்யாகத் தோன்றும்.

பலா + ஐ பலா + வ் + ஐ → பலாவை
பசு + ஐ பசு + வ் + ஐ → பசுவை
பூ + ஐ பூ + வ் + ஐ → பூவை
பலா + ஆல் பலா + வ் + ஆல் → பலாவால்
பசு + ஆல் பசு + வ் + ஆல் → பசுவால்
பூ + ஆல் பூ + வ் + ஆல் → பூவால்

புறப்புணர்ச்சியில் வகர உடம்படு மெய் தோன்றாமல் பிரித்து எழுதுவதுதான் தற்காலத்தில் பெருவழக்காக உள்ளது. அப்பா வந்த வறையிலிருக்கிறார் என்று தற்காலத்தில் யாரும் எழுதுவதில்லை. அப்பா அந்த அறையில் இருக்கிறார் என்றே இன்று எல்லாரும் எழுதுவர்.

புணர்ச்சியில் உடம்படு மெய் சேர்ந்து எழுதவேண்டிய இடங்கள்

1) அகப்புணர்ச்சியில் உடம்படு மெய் சேர்த்து எழுதுக.

2) தொகைச் சொற்கள் அல்லது கூட்டுப் பெயர்கள் அகப்புணர்ச்சிக்குரியவை. ஆகையால், அங்கும் உடம்படு மெய் சேர்த்து எழுதுக. உதாரணம்
மாவிலை, பனையோலை, கோயில் / கோவில்

3) உடன், ஓடு ஆகிய சொல் உருபுகள் வரும்போது உடம்படு மெய் சேர்த்து எழுதுக.

அப்பா + உடன் அப்பாவுடன் அப்பா + ஓடு → அப்பாவோடு
தந்தை + உடன் தந்தையுடன் தந்தை + ஓடு → தந்தையோடு

4) செய்த என்னும் வாய்ப்பாட்டு வினை எச்சத்துடன் உடன் என்னும் இடைச்சொல் புணரும்போது உடன்படு மெய் சேர்த்து எழுதுக. உம் செய்தவுடன், வந்தவுடன், நின்றவுடன், கண்டவுடன், பார்த்தவுடன், கேட்டவுடன்.

5) செய்ய என்னும் வாய்ப்பாட்டு வினை எச்சத்துடன் இல்லை என்னும் எதிர்[illegible]ற வினை புணரும்போது உடம்படு மெய் சேர்த்து எழுதுக. உம் செய்யவில்லை, போகவில்லை, வரவில்லை, பார்க்கவில்லை, கேட்கவில்லை...

6) புறப்புணர்ச்சியில் உடம்படு மெய்யைத் தவிர்த்து சொற்களைப் பிரித்து எழுதுக.

**குற்றியலுகரப் புணர்ச்சி**

குற்றியலுகர ஈற்றுச் சொற்களுக்கு முன் வருமொழி முதலில் உயர் எழுத்து வந்தால், குற்றியலுகரம் கெட்டுப் புணரும், தற்காலத் தமிழில் சொல் இறுதியில் வரும் எல்லா உகரமும் பெரிதும் குற்றியலுகரமாகவே ஒலித்தாலும் புணர்ச்சியில் மொழி இறுதியில் வரும் உகரங்கள் எல்லாம் கெடுவதில்லை. புணர்ச்சியில் கெடும் ஈற்று உகரங்களைப் பின்வருமாறு வகைப்படுத்திக் கூறுவர்.

**கெடுதல்**

நிலைமொழியும், வருமொழியும் புணரும்போது அவற்றில் உள்ள ஏதாவது ஒரு எழுத்து இல்லாமல் போதல் கெடுதல் எனப்படும்.

நாக்கு + ஐ நாக்க் + ஐ → நாக்கை
கதவு + ஐ கதவ் + ஆல் → கதவால்
இருமு + ஆல் இரும் + அல் → இருமல்

மேல் உள்ள உதாரணங்களில் நிலைமொழி இறுதி உகாரம் கெட்டது.

மரம் வேர் மரவேர் மனம் வேதனை மனவேதனை

மேல் உள்ள உதாரணங்களில் நிலைமொழி இறுதியில் உள்ள மகரம் கெட்டது. இது கெடுதல் விகாரம் எனப்படும்.

**திரிதல்**


நிலைமொழியும் வருமொழியும் புணரும்போது அவற்றில் உள்ள ஓர் எழுத்து பிறிதொரு எழுத்தாக மாறுதல் திரிதல் எனப்படும்.

மரம் + கள் மரங் + கள் → மரங்கள்
கல் + கள் கள் + கள் → கற்கள்
கொள் + ட் ஏன் + கொண் + ட் ஏன் → கொண்டேன்

மேல் உள்ள உதாரணங்களில் நிலைமொழி இறுதியில் உள்ள ம், ல், ள் என்பன முறையே ங், ற், ண் எனத் திரிந்துள்ளன.

# அபிவிருத்தியை நோக்கிய பயணம்

## வடமராட்சி கொட்டடி கடற்றொழிலாளர்களுடன் சந்திப்பு



(யாழ்ப்பாணம்)

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வடமராட்சி வடக்கு கொட்டடி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி அவர்கள் எதிர் நோக்கி வரும் பிரச்சினைகள் தொடர்பில் நேரில் ஆராய்ந்தறிந்து கொண்டார்.

கொட்டடி கடற்கரைப் பகுதிக்கு கடந்த சனிக்கிழமை விஜயம் மேற் கொண்ட அமைச்சர் இவ்விடயம் தொடர்பில் நேரில் ஆராய்ந்தார்.

இதனிடையே கொட்டடி கடற் கரைப் பகுதியை இறங்குதுறையாக பயன் படுத்தி வரும் நிலையில் அக்கடற்கரைப் பகுதியை விடுத்து மாற்றிடத்திற்கு செல்லுமாறு கடற்றொழிலாளர்களுக்கு பருத்தித்துறை நகரசபை கோரிக்கை விடுத்து வருகின்றது.

மாற்றிடம் வழங்கும் பட்சத்தில் கடற்றொழிலாளர்கள் எதிர் நோக்கும் இடர்பாடுகள் தொடர்பிலும் உரிய கவனம் செலுத்தப்படுமென்றும் தெரிவித்தா.

இதன்போது பருத்தித்துறை பிரதேச செயலர் ஜெயசீலன், ஈ.பி.டி.பியின் வடம ராட்சி கரையோர இணைப்பாளர் ரட்ணகுமார், ஈ.பி.டி.பியின் வடமராட்சி இணைப்பாளர் சிறிரங்கேஸ்வரன் பருத்தித்துறை நகரசபை செயலாளர் உள்ளிட்ட துறைசார்ந்த பலர் கலந்து கொண்டனர்.

## மக்கள் பிரதிநிதிகளுடன் சந்திப்பு



சங்கானையில் மக்கள் பிரதிநிதிகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

மேற்படி சந்திப்பு சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. இதன் போது சங்கானையில் தபாலகத்துக்கான நிரந்தர கட்டடம் ஒன்று இல்லாத காரணத்தினால் தாம் எதிர்நோக்கி வரும் இடர்பாடுகளை மக்கள் பிரதிநிதிகள் அமைச்சரிடம் தெரியப்படுத்தினர்.

இது தொடர்பில் கவனம் செலுத்திய அமைச்சர் அவற்றுக்கு உரிய தீர்வினைப் பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரி வித்தார்.

இதில் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் பிரதிப் பணிப்பாளர் கெங்காதரன், ஈ.பி.டி.பியின் சர்வதேச இணைப்பாளர் மித்திரன், ஈ.பி.டி.பியின் சர்வுதேச முக்கியஸ்தர் விந்தன், ஈ.பி.டி.பியின் வலிகாமம் இணைப்பாளர் ஜீவன், யாழ்.மாநகர முன்னாள் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.

## பருத்தித்துறை சந்தைக்கு விஜயம்



(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகரப் பகுதியில் அமைந்துள்ள சந்தைப் பகுதிக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கடந்த சனிக்கிழமை நேரில் விஜயம் மேற் கொண்டு நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்தறிந்து கொண்டார்.

குறித்த சந்தைக்கு அமைச்சர் அவர்கள் நேரில் சென்றார். இதன்போது வியாாபாரிகள் மற்றும் பொதுமக்கள் எதிர்நோக்கி வரும் இடர்பாடுகள் தொடர்பில் ஆராய்ந்தறிந்தார்.அத்துடன் பிரச்சினைகளுக்கு உரிய வகையில் தீர்வு காணப்படுமென்றும் தெரிவித்தார்.

## வரணி வைத்தியசாலையின் தேவைகள் குறித்து ஆராய்வு



தென்மராட்சி வரணி பிரதேச வைத்தியசாலைக்கும், இடைக்குறிச்சி சிறி சுப்பிரமணிய வித்தியாலயத்திற்கும் விஜயம் மேற்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவற்றின் தேவைப்பாடுகள் தொடர்பில் நேரில் ஆராய்ந்தறிந்து கொண்டார்.

தென்மராட்சிக்கு நேற்றுமுன்தினம் விஜயம் மேற்கொண்ட போதே அமைச்சர் இவ்விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்தார். நீண்டகாலமாக திருத்தம் செய்யப்படாதுள்ள வரணி பிரதேச வைத்தியசாலையின் புனரமைப்பு மற்றும் பௌதீக வளங்களின் தேவைப்பாடுகள் குறித்து அமைச்சர் துறைசார்ந்தோரிடம் கேட்டறிந்து கொண்டார். இதேபோன்று இடைக்குறிச்சி சிறி சுப்பிரமணிய வித்தியாலயத்திற்கு சென்ற அமைச்சர் பாடசாலையின் தேவைப்பாடுகள் உள்ளிட்ட ஏனைய விடயங்கள் தொடர்பில் பாடசாலை அதிபரிடம் கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது ஈ.பி.டி.பியின் தென்மராட்சி இணைப்பாளர் சூசைமுத்து அலெக்ஸ்சாண்டர் (சாள்ஸ்), ஈ.பி.டி. பியின் சர்வதேச இணைப்பாளர் மித்திரன, ஈ.பி.டி.பியின் சர்வதேச முக்கியஸ்தர் விந்தன், யாழ்.மாநகர முன்னாள் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா ஆகியோர் கலந்துகொண்டனர்.

## ஓலை வீட்டை தீயிட்டு எரித்த 14 பேருக்கு பிணை

(முல்லைத்தீவு

முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹிஜ்ராபுரம் பிரதேசத்திலுள்ள காணியொன்றிற்குள் நுழைந்து தற்காலிக ஓலை வீடொன்றை தீயிட்டுக் கொழுத்திய சம்பவத்துடன் தொடர்புடைய 14 பேரை பிணையில் செல்வதற்கு முல்லைத்தீவு மாவட்ட பதில் நீதவான் எஸ்.பரஞ்சோதி நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை அனுமதி வழங்கியுள்ளார்.

முல்லைத்தீவு ஹிஜ்ராபுரம் பிரதேசத்தில் உள்ள காணியொன்றுக்குள் சனிக்கிழமை உட்புகுந்த 14 பேர் கொண்ட குழுவினர, ஓலையினால் கட்டப்பட்டிருந்த தற்காலிக வீடொன்றினை தீயிட்டு சேதப்படுத்தியுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்ப்பில், காணியின் உரிமையாளர் முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டினையடுத்து, குறித்த 14 பேரும் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

வீட்டினை தீயிட்டுக்கொழுத்தியமை, மரண அச்சுறுத்தல் விடுத்தமை, சட்ட விரோதமாக ஒன்றுகூடியமை, சட்டவிரோதமாக உட்புகுந்தமை, கூரிய ஆயுதங்கள் வைத்திருந்தமை என ஐந்து குற்றச்சாட்டுக்களின் கீழ் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட 14 பேரையும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை முல்லைத தீவு மாவட்ட பதில் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய



போதே மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இரண்டு தரப்பினர் மத்தியில் நிலவி வரும் காணித்தகராறு காரணமாகவே இந்தச்சம்பவம் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது.

இதேவேளை, குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய மற்றுமொரு நபரை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்துள்ளதாகவும் முள்ளியவளை பொலிஸார் தெரிவித்தனர்.

## நுகர்வோர் விவகார செயற்றிட்ட ஆராய்வு

தேசிய கொள்கை மற்றும் நுகர்வோர் விவகார செயற்றிட்டத்தை தயாரித்தல் தொடர்பான கருத்தறியும் கலந்துரையாடல் வவுனியா மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

நுகர்வோரை பாதிக்காத வகையில் அடுத்த ஆண்டு முதல் நடைமுறைப்படுத்துவதற் கான திட்டங்களை தயாரிக்கும் முகமாக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்கள், நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபையினர் உள்ளிட்டவர்களின் கருத்துக்களைப் பெறும் நோக்கிலும் அவர்கள் மத்தியில் உள்ள குழப்பங்களை நீக்கும் நோக்கிலும் இக்கலந்துரையாடல் இடம்பெற்றது. வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வில், நுகர்வோர் நலனோம்புகை சிரேஷ்ட அமைச்சர் எஸ்.பி.நாவின்ன மற்றும் செயலக உயர் அதிகாரிகள், பேராசிரியர்கள் என பலரும் கலந்து கொண்டு கருத்துக்களை வழங்கினர்.


## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..............................

முகவரி :- ..............................

பிறந்த ஆண்டு :- ..............................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

# ஐ.எஸ்.ஐ.எஸ். மீது தாக்குதல் உடனடியாக நிறுத்த வேண்டும்

## உலக நாடுகளுக்கு அல்கொய்தா மிரட்டல்




ஐ.எஸ்.ஐ.எஸ்அமைப்பு மீது தாக்குதலில் ஈடுபடும் நாடுகளுக்கு எதிராக பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்படும் என அல்-கொய்தாவின் சிரியா பிரிவு மிரட்டல் விடுத்துள்ளது.

ஈராக்கிலும், சிரியாவிலும் ஐ.எஸ்.ஐ.எஸ் மீது அமெரிக்கா வான்வழித் தாக்குதலில் ஈடுபட்டு வருகிறது.

சிரியாவில் நடைபெறும் தாக்குதலில், அமெரிக்காவுடன் இணைந்து பஹ்ரைன், ஜோர்தான், கத்தார், சவூதி அரேபியா, ஐககிய அரபு எமிரேட்ஸ் ஆகிய நாடுகளின் போர் விமானங்களும் ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதிகள் மீது குண்டு வீசி வருகின்றன. இந்நிலையில் ஈராக்கில் ஐ.எஸ். ஐ.எஸ் இலக்குகள் மீது தனது விமானத் தாக்குதலை பிரித்தானியாவும் தொடங்கிய நிலையில் அல்-கொய்தாவின் சிரியா பிரிவான அல்-நுஸ்ராவின் செய்தித் தொடர்பாளர் அபு .:.பிராஸ் அல்-சுரி இணையத்தில் காணொளி ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்புக்கு எதிராக பல்வேறு நாடுகளும் நிகழ்த்தி வரும் வான் வழித் தாக்குதல், இஸ்லாம் மதத்துக்கு எதிரான போராகும்.

இந்தச் செயல் மூலம், அந் நாடுகள் உலகம் முழுவதிலுமுள்ள புனிதப் போராளிகளின் தாக்குதலுக்கு இலக்காகும் என்று தெரிவித்துள்ளார்.

மேலும், சிரியாவில் ஐ.எஸ். ஐ.எஸ்ஸின் வன்முறைக்கு அஞ்சி, 1.6 இலட்சம் அகதிகள் அண்டை நாடான துருக்கியில் தஞ்சமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பெருவில் நில அதிர்வு 8 பேர் உயிரிழப்பு



பெருவில் உணரப்பட்ட நிலஅதிர்வினால் 8 பேர் உயிரிழந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. கஸ்கோ் - அண்டியன் கிராமத்தில் 5.1 ரிக்டர் அளவில் இந்த நிலஅதிர்வு உணரப்பட்டுள்ளது.

இந்நிலநடுக்கத்தை தொடர்ந்து மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் முடக்கிவிடப்பட்டுள்ளன. அங்கிருந்த வீடுகள் இடிந்ததால் 500 இற்கும் மேற்பட்டோர் வீடுகளை இழந்து தவித்து வருகின்றனர்.

நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள கிராமத்திற்கு மீட்பு குழுவினர்கள் விரைந்து வந்து மீட்புப்பணிகளில் ஈடுபட்டுள்ளனர். இடிபாடுகளில் சிக்கி 5 பெண்கள், 2 குழந்தைகள் உட்பட 8பேர் உயிரிழந்துள்ளனர். தொடர்ந்து மீட்புப்பணிகள் நடைபெற்று வருவதால் பலி எண்ணிக்கை அதிகரிக்ககூடும் என்று அஞ்சப்படுகிறது.

# ஜெயலலிதாவுக்கு பிணை கோரி கர்நாடக நீதிமன்றில் மனுத்தாக்கல்

பெங்களூர் சிறப்பு நீதிமன்றம் தனக்கு விதித்த தண்டனையை நிறுத்தி வைக்கக் கோரியும், பிணை கோரியும் அ.தி.மு.க பொதுச் செயலாளர் ஜெயலலிதா சார்பில் நேற்று கர்நாடக உயர்நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டது.

அதேபோல் சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோர் சார்பிலும் பிணை கோரி மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இந்த மனுக்கள், விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

கர்நாடக உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி வகேலாவை நேரில் சந்தித்து மனுத் தாக்கல் செய்யப்படும் என்று முதலில் கூறப்பட்டிருந்தது. இந்த நிலையில், உயர்நீதிமன்ற எழுதுவினைஞரிடம் இந்த பிணை மனுக்களை அ.தி.மு.க தரப்பு சட்டத்தரணிகள் கையளித்துள்ளனர்.

தற்போது தசரா விடுமுறையில் உள்ளது கர்நாடக உயர் நீதிமன்றம். ஒக்ரோபர் 6 ஆம் திகதி வரை நீதிமன்றம் விடுமுறையிலுள்ளது. அதேசமயம், செவவாய் மற்றும் வியாழக் கிழமைகளில் சிறப்பு பெஞ்ச் அமர்வு நடைபெறும். ஏனவே, ஜெயலலிதாவின் மனு நாளையே விசாரணைக்கு எடுத்துக் கொள்ள வாய்ப்புள்ளது.

ஜெயலலிதாவுக்கு எதிராக வழங்கப்பட்ட தீர்ப்பைக் கண்டித்துள்ள முன்னாள் பா.ஜ.க மூத்த தலைவர்களில் ஒருவரும், சட்ட நிபுணருமான ராம்ஜெத்மலானி, ஜெயலலிதாவுக்காக பிணைகோரும் வழக்கில் ஆஜராகவுள்ளார்.

# ஜப்பானில் எரிமலை வெடித்து மலைவாழ் மக்கள் 30 பேர் பலி




ஜப்பான் நாட்டின் டோக்கியோ நகரிலிருந்து 200 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள நகனோ மற்றும் கிபு பகுதிகளுக்கு இடையில் ஓன்டாகே என்ற எரிமலை வெடித்து சிதறி மலையேற்றக்குழுவினர் 30 பேர் பலியானதாக ஜப்பான் செய்தி வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

ஓன்டாகே மலையில் சுமார் 250 பேர் ஏறி பயிற்சி எடுத்துக் கொண்டிருந்தபோது இந்த மலையிலுள்ள எரிமலையில் இருந்து வெளியான வெப்பம் கலந்த சாம்பல் தாக்கி மூச்சுத்திணறி மயங்கிக் கிடந்த 30 பேரை மீட்புப் படையினர் கண்டெடுத்துள்ளதாக ஒரு பிரிவினரும், அந்த 30 பேரும் பிணமாக மீட்கப்பட்டதாக ஒரு தரப்பினரும் கூறியுள்ளதாக ஜப்பான் செய்தி வட்டாரங்கள் தகவல் தெரிவித்திருக்கின்றன. காணாமற்போனவர்களை மீட்கும் பணிகள் தொடர்ந்து நடந்து வருகின்றன.

# சொத்துக் குவிப்பு வழக்கு விவகாரம் ஜெயாவுக்கு அடுத்து சோனியா, ராகுல்

## சுப்பிரமணியம் சுவாமி தெரிவிப்பு



ஜெயலலிதாவுக்கு அடுத்த படியாக காங்கிரஸ் கட்சியின் சோனியா மற்றும் ராகுல் காந்தியை சிறைக்கு அனுப்புவதே தன் வேலை என்று சுப்பிரமணியன் சுவாமி கூறியுள்ளார்.

ஜெயலலிதாவுக்கு நீதிமன்றம் அளித்த தண்டனையை அபாரமானது என்று வர்ணித்துள்ள சுப்பிரமணியன் சுவாமி, அடுத்து சோனியா, ராகுல் காந்தியை சிறைக்குள் தள்ளுவதே தனது வேலை என்று கூறியுள்ளார்.

1996 ஆம் ஆண்டே சொத்துக் குவிப்பு வழக்கை ஜெயலலிதா மீது பதிவு செய்த சுப்பிரமணியன் சுவாமி, இது பற்றி கூறுகையில், அவர் ஊழல்வாதி என்பது எனக்கு நன்றாகவே தெரியும்.

ஆனால் சிறப்பு நீதிமன்ற நீதிபதியும் நேர்மையுடன் நிமிர்ந்து நின்று தைரியமாக சரியான தீர்ப்பை வழங்கி யுள்ளார் என்றால் ஒரு இந்தியனாக எனக்கு பெருமையாக இருக்கிறது. நஷனல் ஹெரால்ட் செய்தித்தாள் விவகாரத்தில் காங்கிரஸ் தலைவர்கள் சோனியா, மற்றும் ராகுல் காந்திதான் எனது அடுத்த இலக்கு, முதலில் ஜெயலலிதா பற்றியே பரிசீலித்தேன், இப்போது ராகுல், சோனியாவை சிறைக்கு அனுப்ப முயற்சிகள் மேற்கொள்கின்றேன் என்று கூறியுள்ளார்.

# இந்தியாவின் அனைத்து மக்களுக்கும் 2022 இற்குள் நிரந்தர வீடுகள் வழங்கப்படும்

எதிர்வரும் 10 வருடங்களுக்குள இந்தியாவிலுள்ள அனைத்து மக்களுக்கும் சொந்த இல்லங்களை நிர்மாணித்து கொடுப்பதே தமது கனவு என இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடி மேடிசன் பூங்காவில் மக்கள் முன் உரை நிகழ்த்தியுள்ளார்.

எல்விஸ் பிரெஸ்லி, எல்டன் ஜான், முஹமது அலி போன்ற உலகப் பிரபலங்களின் நிகழ்வுகளே இதற்கு முன்னர் இந்த மைதானத்தில் நடைபெற்றுள்ளன்.

இந்தியப் பிரதமரின் நிகழ்வு இங்கு முதற்தடவையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதன்போது 2022 ஆம் ஆண்டில் அனைத்து மக்களும் சொந்த இல்லங்களில்



வாழ்வதற்கான திட்டங்களை தற்போதிருந்தே முன்னெடுத்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். மக்களின் நலனை மாததிரம் கருத்திற்கொண்டு செயற்படும் தமது அரசாங்கம் 21 ஆம் நூற்றாண்டில் உலக நாடுகளை முன்னெடுத்துச் செல்லும் நாடாக இந்தியாவை உருவாக்குவோம் என இந்திய பிரதமர் உறுதியளித்துள்ளார்.

# ஆப்கானில் புதிய அதிபராக அஷ்ரப் கனி பதவியேற்பு

தலிபான்களின் தாயகமாக விளங்கிவந்த ஆப்கானிஸ்தானில் நேட்டோ படைகளின் பாதுகாப்புடன் கடந்த 12 ஆண்டுகளுக்கும் மேலாக ஜனநாயக ஆட்சி நடைபெற்றுவந்தது.

ஜனநாயக காற்றை சுவாசித்துவரும் ஆப்கானிஸ்தான், மீண்டும் தலிபான்களின் கோரப்பிடிக்குள் சென்று விடாமல் தடுக்கும் வகையில் ஐக்கிய நாடுகள் சபை மற்றும் அமெரிக்காவின் ஆலோசனையின்பேரில் அப்துல்லா அப்துல்லா மற்றும் அஷ்ரப் கனி ஆகியோர் நடத்திய பேச்சுவார்த்தையில், ஆட்சி அதிகாரத்தை இருவரும் சமமாக பகிர்ந்து கொள்வது என்று முடிவு செய்யப்பட்டது. இதனையடுத்து, இதற்கான ஒப்பந்தத்தில் இருவரும் கையொப்பமிட்டனர்.

அதன் பின்னர், கடந்த வாரம் அதிபர் மாளிகையில் சுமார் 10 நிமிடங்கள் நீடித்த சிறிய விழாவில் ஆப்கானிஸ்தானின் புதிய அதிபராக அஷ்ரப் கனி அறிவிக்கப்பட்டார்.

புதிய அதிபராக அறிவிக்கப்பட்ட அஷ்ரப் கனியை அவரது போட்டி வேட்பாளரான அப்துல்லா அப்துல்லா கட்டித்தழுவி வாழ்த்தினார்.

"இந்த தேர்தலில் அனைத்து தரப்பிலும் முறைகேடுகள் நடந்ததாக மக்கள் கருதுகின்றனர். ஆப்கானிஸ்தானின் அதிபராக அஷ்ரப் கனி வெற்றி பெற்றதாக தேர்தல் கமிஷன் அறிவிக்கின்றது. இதன் மூலம் இந்த தேர்தல் நடைமுறை முடிவுக்கு வந்தது என அவர் அறிவித்தார்.

# திண்மக்கழிவகற்றல் ஸ்தம்பிதம் மாகாண விவசாய அமைச்சு அழுங்குப்பிடி

## நல்லூரில் டெங்கு அபாயம்

(திருநெல்வேலி)

பொருத்தமான இடமொன்று கிடைக்கும்வரை பிரதேசத்தில் சேரும் குப்பைகளை அகற்றுவதில்லை என்னும் நல்லூர் பிரதேச சபையின் தீர்மானத்தினால் அப்பிரதேச மக்கள் பெரும் நெருக்கடியை எதிர்கொள்வதாக தெரிவிக்கப்படுகிறது.

மழைகாலம் ஆரம்பித்துள்ளதால் டெங்கு நுளம்புகள் பெருகி டெங்கு நோய் தாக்கத்துக்கு பலரும் உள்ளாகும் அபாயம் இருப்பதால் குப்பை, கழிவுகளை அகற்றும் நடவடிக்கையை நல்லூர் பிரதேச சபை மீண்டும் மிக விரைவில் ஆரம்பிக்க வேண்டும் எனப் பலராலும் கோரிக்கை விடப்பட்டுள்ளது.


நல்லூர் பிரதேசத்தில் குறைவடைந்திருந்த டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை சமீபத்தில் திடீரென்று அதிகரித்திருப்பதாக சுகாதாரப் பகுதியினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோண்டாவில் பகுதியிலுள்ள தனியாருக்குச் சொந்தமான காணியொன்றில் நல்லூர் பிரதேச சபையின் வாகனங்கள் குப்பைகளை கொட்டிவந்தன. ஆனால் அக்காணியில் மேலும் கழிவுகளை கொட்ட முடியாதளவுக்கு அது நிறைந்து போயிருப்பதால் மேலும் குப்பைகளை அங்கு கொட்ட முடியாத நிலை ஏற்பட்டது. இதேநேரம் அரியாலையில் தனியார் ஒருவரினால் அன்பளிப்பு செய்யப்பட்ட 2 ஏக்கர் காணியிலும் குப்பை கழிவுகளை கொட்டுவதற்கு வடமாகாண விவசாய அமைச்சு அனுமதி தர மறுத்துவிட்டது.

சுமார் ஒரு வாரகாலத்துக்கு முன்னர் முதலமைச்சர் அலுவலகத்தில் சுகாதார அமைச்சர் மற்றும் விவசாய அமைச்சர் ஆகியோரால் சம்பந்தப்பட்டவர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் கல்லுண்டாய் வெளியில் குப்பைகளைக் கொட்டுவதற்கு எடுக்கப்பட்ட முடிவும் அப்பகுதி பிரதேச சபையின் எதிர்ப்பினால் கைவிடப்பட்டது.

உரியவர்கள் இது சம்பந்தமாக ஒரு முடிவுக்கு வந்து நல்லூர் பிரதேச சபையின் பகுதிகளில் சேர்ந்துள்ள குப்பை கழிவுகளை அகற்றும் நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்ளாவிடில் பிரதேச மக்கள் பெரும் நெருக்கடிகளை சந்திக்க வேண்டிய அவலத்திற்கு ஆளாகலாம் என அஞ்சப்படுகிறது. (137)

# தமிழகத்தின் புதிய முதல்வராக பன்னீர்செல்வம் பதவியேற்பு



(சென்னை)

தமிழகத்தின் புதிய முதலமைச்சராக ஓ.பன்னீர்செல்வம் நேற்றுப் பிற்பகல் 2.00 மணிக்கு ஆளுநர் ரோசய்யா முன்பு சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் பதவியேற்ற போது 10 இற்கும் மேற்பட்ட அமைச்சர்கள் கண்ணீர் விட்டு அழுதனர்.

ஓ.பன்னீர்செல்வம் தனது சட்டைப்பையில் இருந்த ஜெயலலிதாவின் படத்தை எடுத்து மேசையின் மீது வைத்தார். பின்னர் கண்ணீர் ததும்ப, குரல் நடுங்கியபடி உறுதிமொழி எடுத்தார். தனது கையில் இருந்த கைக்குட்டையால் கண்ணீரை துடைத்தார்.

சொத்துக்குவிப்பு வழக்கில் ஜெயலலிதா சிறையில் அடைக்கப்பட்டதால் அவர் பதவி இழந்தார். அதனைத் தொடர்ந்து ஜெயலலிதா தலைமையிலான அரசும் பதவி இழந்தது.

இதனையடுத்து தமிழகத்தில் 2 ஆவது முறையாக ஓ.பன்னீர்செல்வம் நேற்று முதல்வராக பதவியேற்றுக் கொண்டார். இவருடன் 30 அமைச்சர்கள் பதவியேற்றனர்.

# ஜனாதிபதி மகிந்தவிடம் முஸ்லிம் பேரவை முறையீடு

## - பொதுபலசேனாவுக்கு எதிராக -

பொதுபலசேனா அச்சுறுத்தல்கள் குறித்து முஸ்லிம் பேரவை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் முறைப்பாடு செய்துள்ளது.

பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் அச்சுறுத்தல் விடுத்தார் என முஸ்லிம் பேரவை குற்றம் சுமத்தியுள்ளது.

969 பௌத்த கடும்போக்குடைய அமைப்பின் தலைவர் அசீன் விராதுவை இலங்கைக்கு விஜயம் செய்ய அனுமதிக்க வேண்டாம் என முஸ்லிம் பேரவை கோரியிருந்தது.

அசீன் விராது தேரர் இலங்கைக்கு விஜயம் செய்வதனை தடுக்க முஸ்லிம் பேரவைக்கு உரிமை கிடையாது என ஞானசார தேரர் தெரிவித்திருந்தார்.

இந்த ஆண்டு பேருவளை, அளுத்கம பிரதேசங்களில் ஏற்பட்ட அவலங்களை கருத்திற்கொள்ளாது கலகொட அத்தே ஞானசர்ர தேரர் உள்ளிட்ட சில கடும்போக்குடைய தரப்பினர் தொடர்ச்சியாக குரோத பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாக முஸ்லிம் பேரவை தெரிவித்துள்ளது.

புனித குர்ஆன் தொடர்பில் பொதுபலசேனா அமைப்பு, பிழையானதும் குரோத உணர்வைத் தூண்டும் வகையில் பிரசாரம் செய்து வருகின்றது.

புனித குர்ஆன் தொடர்பிலான ஞானசார தேரரின் விமர்சனங்களுக்கு எதிராக கொழும்பு நீதவான் நீதிமன்றிலும், பௌத்த சாசன அமைச்சின் சமய விவகாரப் பிரிவிலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக முஸ்லிம் பேரவை ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியுள்ளது.

தமது அமைப்பிற்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையிலேயே ஞானசார தேரர் கருத்து வெளியிட்டு வருவதாக முஸ்லிம் பேரவை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது.

### முதலீட்டுக்கு...

நிலையே இருந்து வந்த போதிலும் இன்று அந்த நிலை முற்றாக மாறி அமைதிச் சூழல் பிறந்துள்ளது.

தவறான வழிநடத்தல்கள் காரணமாக மக்கள் அளவுக்கதிகமாக இழப்புக்களை எதிர்கொண்டிருந்தனர். உயிர் இழப்புக்களை ஈடு செய்ய முடியாது இருந்த போதிலும் ஏனையவற்றை ஈடுசெய்வதற்கு நாம் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம்.வடமாகாணத்தில் யுத்தம் நிறைவடைந்த பின்னர் பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக ஆகாய, கடல்வழி ஊடான போக்குவரத்து ஓரளவு பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இந்நிலையில் யாழ்ப்பாணத்துக்கான புகையிரத சேவையினை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அடுத்த மாதம் 13 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

எனவே முதலீட்டாளர்கள் இங்கு துணிந்து தமது முதலீடுகளை மேற்கொள்ள முடியும் என்றும் தெரிவித்தார். இருந்த போதிலும் சுயலாப அரசியல்வாதிகள் தமது சுயலாபத்திற்காக மீண்டுமொரு பதற்ற சூழ்நிலையை உருவாக்க முயற்சிக்கின்றனர்.

அவ்வாறான செயல்களுக்கு இனிவரும் காலங்களில் இடமளிக்கப் போவதில்லையென்றும் தெரிவித்தார். குறிப்பாக, எமது அரசாங்கம் வடமாகாண மக்களுடைய பிரச்சினைகளுக்கும் தேவைகளுக்கும் தீர்வு காண்பதற்கு தயாராகவிருக்கின்றது.

இந்நிலையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பணிப்புரைக்கமைவாக முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சும் இலங்கை முதலீட்டு சபையும் ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் முதலீட்டாளர்களுக்கு வழங்கும் நிலையில் முதலீட்டாளர்கள் நம்பிக்கையுடன் தமது நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு முன்வர வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

இதன்போது அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன, இலங்கை முதலீட்டு சபையின் தலைவர் லக்ஷ்மன் ஜயவீர ஆகியோரும் உரையாற்றியிருந்தனர்.

இதன்போது ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர்களான முருகேசு சந்திரகுமார், சில்வேஸ்திரி அலன்ரின், வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், வடமாகாண ஆளுநரின் செயலாளர் இளங்கோவன், வடக்கு மாகாண முதலமைச்சரின் செயலாளர் கிருபாகரன் உள்ளிட்ட அரச திணைக்களங்களின் அதிகாரிகள், முதலீட்டாளர்கள் உள்ளிட்ட துறைசார்ந்த பலரும் உடனிருந்தனர்.

### வடக்கில்...

கையளிக்கப்படும். இதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன என அவர் மேலும் தெரிவித்தார். (இ,25)

### யுத்தப்...

எண்ணிக்கையிலான குடும்பங்களை பெண்கள் வழிநடத்தி வருவதாகவும் இதனால் பாரியளவில் அவர்கள் மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### அளவெட்டியில்...

இதில் மல்லாகம் நீதிமன்ற வீதியைச் சேர்ந்த தேவசகாயம் ஜெகதாஸ் (வயது - 23), சந்திரகுமார் கொலன்ஸ் (வயது- 20) ஆகியோர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், சுன்னாகத்தைச் சேர்ந்த சின்னராசா யூட் அன்ரனி (வயது - 23) என்பவர் தெல்லிப்பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாள்வெட்டுச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (இ)

# கிணற்றிலிருந்து வெடிபொருட்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

பளை முன்னையடி பகுதியிலுள்ள தனியார் காணியொன்றிலுள்ள கிணற்றில் இருந்து, பெட்டிகளுக்குள் கிறீஸ் பூசிய நிலையில் வைக்கப்பட்ட பெருமளவு வெடிபொருட்கள், கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை மீட்கப்பட்டதாக பளை பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

ஆர்.பி.ஜி. குண்டுகள் 10 மற்றும் கைக்குண்டுகள் 23 ஆகியனவே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

கிணற்றில் நீர் வற்றிய நிலையில், கிணற்றின் அடிமட்டத்திலுள்ள மண்ணில் பெட்டிகள் இருப்பதை அவதானித்த உரிமையாளர், இது தொடர்பில் பொலிஸ் நிலையத்துக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

இதனையடுத்து, இராணுவத்தினருடன் சென்று குண்டுகள் மீட்கப்பட்டதாக பொலிஸார் கூறினர்.

கிணற்றின் அடிப்பரப்பு மண் பகுதியாக காணப்படுவதாகவும் இதனால் தொடர்ந்து மண்ணை அகற்றி மேலும் ஆயுதங்கள் இருக்கின்றனவா என பரிசோதிக்கவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை பளை, முன்னையடி பகுதியிலுள்ள தனியார் காணியிலுள்ள அதே கிணற்றில் இருந்து மேலும் ஒரு தொகுதி ஆயுதங்கள் நேற்றும் மீட்கப்பட்டுள்ளதாக பளை பொலிஸார் தெரிவித்தனர்.

கிணற்றை மேலும் துப்புரவு செய்யும் போது, 4 ஆர்.பி.ஜி குண்டுகள் மற்றும் 94 கைக்குண்டுகள் மீட்கப்பட்டன.

மீட்கப்பட்ட அனைத்து குண்டுகளும் இராணுவத்தினரின் குண்டு செயலிழக்கும் பிரிவினர் மூலம் செயலிழக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர். (25)

# வீதி விபத்தில் பெண் மரணம்

(பூநகரி)

பூநகரி ஏ-32 வீதியிலுள்ள மட்டுவில்நாடு பகுதியில் மோட்டார் சைக்கிள் மோதியதில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று அதிகாலை 5.45 மணியளவில் வீதியை கடக்க முயன்ற 62 வயது பெண் மீது மோட்டார் சைக்கிள் மோதியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

விபத்தில் காயமடைந்த பெண் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளை செலுத்தியவரும் விபத்தில் காயமடைந்து கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

### புதிய இணைய...

www.epdpnews.net என்ற இணையத்தளத்தின் ஊடாக நேயர்கள் கேட்க முடியும்.

அதேவேளை, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் உத்தியோகபூர்வமான மற்றுமொரு புதிய இணையத்தளத்தினை கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிசார்ந்த செய்திகள், தினசரிச் செய்திகள், உலகச் செய்திகள், அரசியல் கட்டுரைகளை இந்த இணையத்தளம் ஊடாக வாசகர்கள் பார்வையிடலாம். இவ் இணையத்தளத்தினை www.epdpnews.net என்ற இணைய முகவரியூடாக பார்வையிட முடியும்.

# முகமாலையில் மீள்குடியமர்வு வருட இறுதிக்குள் நடக்கும்

## ஏற்பாடுகள் ஆரம்பம்

(கிளிநொச்சி)

முகமாலைப் பகுதியில் மக்களை மீள்குடியமர்த்தும் நடவடிக்கைகள் இந்த வருட இறுதிக்குள் ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

கிளிநொச்சி முகமாலைப் பகுதியில் மீளக்குடியேறுவதற்கு இதுவரையில் 243 குடும்பங்களைச் சேர்ந்த 1220 பேர் பதிவு செய்துள்ளதாக பளை பிரதேச செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை மீள்குடியேற்றத்துக்கு அனுமதிக்கப்படாத பகுதிகளில் ஒன்றாகக் காணப்படும் முகமாலைப் பிரதேசத்தில் தற்போது வெடிபொருட்கள் அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

யுத்தம் கடுமையாக இடம்பெற்ற பிரதேசம் என்பதால், அவ்விடத்தில் அதிகளவான வெடிபொருட்கள் புதைக்கப்பட்டுள்ளதுடன் அவற்றை அகற்றுவதில் காலதாமதங்கள் ஏற்பட்டன.

இதனால், அப்பகுதியில் மீள்குடியேற்றும் நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்படவில்லை.

இந்நிலையில், கடந்த 7ஆம் திகதி பளை பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற மீள்குடியேற்றம் தொடர்பான கலந்துரையாடலில், இவ்வருட இறுதிக்குள் முகமாலை மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் மீள்குடியேற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என தீர்மானிக்கப்பட்டது.

இந்நிலையில் முகமாலைப் பகுதியில் 103 குடும்பங்களைச் சேர்ந்த 339 பேரும், இத்தாவில் பகுதியில் 10 குடும்பங்களைச் சேர்ந்த 39 பேரும், வேம்பொடுகேணியில் 130 குடும்பங்களைச் சேர்ந்த் 842 பேரும் இவ்வாறு மீள்குடியேறுவதற்கான பதிவுகளை மேற்கொண்டுள்ளனர்.

மேற்படி பிரதேச மக்கள், கிளிநொச்சி, முல்லைத்தீவு வவுனியா ஆகிய மாவட்டங்களில். தற்போது, தற்காலிகமாக வசிப்பதாக தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

# அரச அதிபரை இடமாற்றக் கோ... திருமலையில் நேற்று ஆர்ப்பா...

திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபரான மேஜர் ஜெனரல் ரஞ்சித் டி சில்வாவுக்கு பதிலாக வேறு ஒருவரை நியமிக்குமாறு கோரி மக்கள் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

திருகோணமலை நகரில் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றதுடன், அதில் தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் கலந்து கொண்டனர்.

பொதுமக்களை வாட போடா என்று அழைக்காத அ... அதிபர் ஒருவர் வே... ஆர்ப்பாட்டத்தில் க... டவர்கள் தெரிவித்தனர்.

எவ்வாறாயினும் தனக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் சகல... வற்றையும் நிராகரிப்பதாக அ... சாங்க அதிபர் கூறியுள்...

இந்த ஆர்ப்பாட்ட... பின்னணியில் அரசாங்கத்...ற்கு எதிரான சதி வேலைத்...ட்டம் இருப்பதாகவும் அவர் கு...றிப்பி...டுள்ளார்.

# இலங்கை இராணுவத்துக்கு அகவை 65 பூர்த்தி விழா



(கொழும்பு)

இலங்கை இராணுவத்துக்கு அடுத்த மாதம் 10 ஆம் திகதி 65 வருடங்கள் பூர்த்தியடை...கின்றன. இதனை மிகவும் விமரிசையாகக் கொண்டாட இலங்கை இராணுவம் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

இதனை முன்னிட்டு நாடு ... ...திலும் சமய நிகழ்வுகள் ஏற்பாடு செய...ப்பட்டுள்ளன. அதன் முதலாவது நிகழ்வு கடந்த சனிக்கிழமை கண்டி தலதா மாளிகையில் இடம்பெற்றது.

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் தயாரட்னாயக்க தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் இராணுவ உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இலங்கை சுதந்திரம் அடைந்த பி... 1949 ஆம் ஆண்டு இலங்கை இராணு... படை உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக...

# ஒட்டுசுட்டானில் இன்று பண்பாட்டுப் பெருவிழா

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பிரதேச பண்பாட்டுப் பெருவிழா இன்று வெகு சிறப்பாக ஒட்டு சுட்டான் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் இ.குருபரன் தலைமையில் பிரதேச செயலக பண்பாட்டு மண்டபத்தில் பி.ப. 3.00 இந்நிகழ்வு மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் தமிழர் பண்பாடான பாரம்பரிய கலைத் திறன்களை மீண்டும் புதுப்பிக்கும் நேக்கோடு இக் கலாசார விழா பிரதேச செயலாளரினால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் ஊவைஸ் பாறூக், முல்லை மாவட்ட அரசாங்க அதிபர் நா. வேதநாயகன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் பாரம்பரிய கிராமிய நடனங்கள் கிராமியப் பாடல்கள் நாட்டார் கூத்துக்கள் போன்ற பாரம்பரிய கலை நகழ்வுகளும் இடம் பெறவுள்ளது. (40)

## பதில் பிரதம நீதியரசராக சலீம் மர்சூ:ப் நியமனம்

(கொழும்பு)

பதில் பிரதம நீதியரசராக சிரேஷ்ட உயர்நீதிமன்ற நீதியரசர் சலீம் மர்சூ:ப் நேற்று ஜனாதிபதி முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

அலரி மாளிகையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவும் இதில் கலந்து கொண்டார்.

# மட்டு.சிறையில் மோதல் கைதிகள் மூவர் காயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மத்திய சிறைச்சாலையில் நேற்று மாலை இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் கைதிகள் மூவர் படுகாயமடைந்து மட்டு. போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மாலை 5.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கே.புஸ்பராஜா (வயது-23), ஏ.எம்.ஜமீல் (வயது-22), எஸ்.எல்.ஏ.ரினோல்ஸ் (வயது-22) ஆகிய மூவரே படுகாயமடைந்துள்ளனர்.

சிறைக்கைதிகள் இரு குழுக்களிடையே இடம்பெற்ற வாய்த்தர்க்கம் கைகலப்பில் முடிந்துள்ளதாக தெரியவருகின்றது.

எனினும் மோதல் நிலைமை கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

மோதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் கொள்ளைக் குற்றச்சாட்டின் கீழ் தண்டன்ன வழங்கப்பட்டவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# மின் இணைப்பு பயிற்சி உதய நகரில் ஆரம்பம்

கிளிநொச்சி உதயநகரில் சுவிஸ் எஸ்.ரி.ஏ. நிறுவனத்தின் நிதி அனுசரணையில் 25 இளைஞர்களுக்கு வீட்டு மின் இணைப்பு பயற்சிநெறி நேற்று திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

வவுனியாவை தலைமை அலுவலகமாகக் கொண்டு இயங்கும் ஓகன் நிறுவன பணிப்பாளர் வி.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சுவிஸ் எஸ்.ரி.ஏ. நிறுவன பிரதிநிதிகள், கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஓகன் நிறுவனம் 6 மாத காலம் கொண்ட இந்தப் பயிற்சி நெறியை நடத்துவதற்கான பொறுப்பை ஏற்றுள்ளது. (90)

# மறுபரிசீலனைக்கு விண்ணப்பிக்க வாய்ப்பு

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றிய மாணவர்கள் எவராயினும் தமது வினாத்தாள்கள் மறுபரிசீலனை செய்யப்பட வேண்டுமென விரும்புமிடத்து அவர்களது பாடசாலை அதிபர்களினூடாக விண்ணப்பங்களை அனுப்பி வைக்க முடியுமென பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் டபிள்யு. எம். என்.ஜே.புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

வெளியாகிய பெறுபேறுகள் எதிர்வரும் ஒக்ரோபர் 27 ஆம் திகதி வரை இணையத்தளத்தில் பார்வையிடக்கூடியதாக இருப்பதுடன் www.donets.lk. என்ற இணையத்தளத்தில் பிரவேசித்து தமது சுட்டெண்களை பிரயோகிப்பதன் மூலம் பெறுபேறுகளை உடனடியாக அறிந்து கொள்ள முடியுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## விபத்தில் சிக்கி ஒருவர் காயம்

(வவுனியா)

வவுனியா - மன்னார் வீதியில் மோட்டார் சைக்கிளும் முச்சக்கர வண்டியும் மோதியதில் ஒருவர் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா - மன்னார் வீதியில் நேற்று பயணித்த மோட்டார் சைக்கிள் வவுனியா, பூங்கா வீதியை நோக்கி திரும்ப முற்பட்டவேளை பின்னால் வந்த முச்சக்கரவண்டி மோதியதிலேயே இவ் விபத்து இடம்பெற்றது.

இதன் போது மோட்டார் சைக்கிளை செலுத்தியவர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று வவுனியா பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## புதிய முதலமைச்சர் இன்று பதவியேற்பு

ஊவா மாகாண சபையின் புதிய முதலமைச்சர் மற்றும் உறுப்பினர்கள் இன்று 30ஆம் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொள்ளவுள்ளனர்.

ஊவா மாகாண சபைத் தேர்தலில் 96,619 விருப்பு வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டிய சசேந்திர ராஜபக்ஷ இம்முறையும் ஊவா மாகாண சபையின் புதிய முதலமைச்சராக ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொள்வார்.

கடந்த 20ஆம் திகதி நடைபெற்ற ஊவா மாகாண சபை தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் சார்பில் 19 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.






இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 செப்ரெம்பர் 30 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.